
ஸ்ரீமத்
பத்ம புராணம்
Y. Tharjini
– கே.வி. குணசேகரம் –



# என்னுரை

**ப**திணென் புராணங்களையும் எழுதவேண்டும் என்ற நினைப்பில் ஒரு சிறுபகுதி நிறைவேறியுள்ளது. மிகுதியையும் விரைவில் எழுதிமுடிப்பேன் என்று நம்புகிறேன். பதிணென் புராணங்களின் பெயர்கள் கூடப் பெரும்பான்மையான இந்துக்களுக்குத் தெரியாது. சமயத்திற்குச் சேவை செய்கிறோம் என்று தம்மைப் பிரபலப்படுத்துபவர்களே பலர். மாணிக்கசாவக சுவாமிகள், “சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வச் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்.


**எ**ன்று சொல்கிறார். அதனால் தான் நான் இந்து தத்துவ நூல்களுக்குக் கதை எழுதிப் பெருவெற்றியும் பெற்றேன். சமயசேவை செய்வாரின் பின் ஒரு கூட்டம் அவர்களைப் புகழ்ந்து நலம்பெற நினைக்கிறது. அவர்கள் தான் சமய சேவையாளர்கள் என்றும் கூறப்படுகிறது. பதிணென் புராணங்களையும் சிறுவர்களுக்காவே எழுதுகிறேன். அறிஞர்கள் கூட அறியாத பல விடயங்கள் இவற்றில் உண்டு. சிறுவர்கள் சிறு வயதிலேயே சமய உண்மைகளை அறிந்து கொள்ளல் வேண்டும் என்பதே எனது நோக்கம்.

**இ**வ் அரிய புராணத்தை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த கோப்பாய் ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

## 1. தோற்றுவாய்



**வே**தவியாசர் எழுதிய இரண்டாவது புராணம் பத்ம புராணமாகும். இது விஷ்ணுபுராணம், கருடபுராணம், வராகபுராணம், நாரதபுராணம் போன்று ஒரு சாத்வீகப் புராணமாகும்.

**பி**ரம்மனுக்கு ஒருநாள் என்பது ஒரு கல்பமாகும். பிரம்மனுக்கு ஒரு நாள் முடிந்ததும் உலகம் முழுவதும் அழிந்து அண்டங்களும் அழிந்தன. எங்கும் இருள் சூழ்ந்தது. மறுநாள் காலையில் உலகமும் அண்டங்களும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன. ஒவ்வொரு கல்பத்திலும் ஒவ்வொரு புராணம் இயற்றப்பட்டது. வேதவியாசரின் சீடரான சூதமுனிவர் தனது சீடர்களுக்குச் சொன்னார்.

## 2. பதினென் புராணங்கள். அதில் மகா விஷ்ணுவின் புராணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரமபுராணம் | - | பிரம கல்பம் |
| 2. | பத்மபுராணம் | - | பத்ம கல்பம் |
| 3. | விஷ்ணுபுராணம் | - | வராக கல்பம் |
| 4. | சிவபுராணம் | - | ச்வேத கல்பம் |
| 5. | பாகவதபுராணம் | - | சாரசுவத கல்பம் |
| 6. | நாரதபுராணம் | - | வ்ரிஹத் கல்பம் |
| 7. | மார்க்கண்டேயபுராணம் | - | ச்வேதவராக கல்பம் |
| 8. | அக்கினிபுராணம் | - | ரசுந்த்ர கல்பம் |
| 9. | பவிஷ்யபுராணம் | - | அகோர கல்பம் |
| 10. | பிமவைவர்த்தபுராணம் | - | ஈசான கல்பம் |
| 11. | லிங்கபுராணம் | - | கல்பந்த கல்பம் |
| 12. | வராகபுராணம் | - | மனு கல்பம் |
| 13. | கந்தபுராணம் | - | தத்புருஷ கல்பம் |
| 14. | வாமணபுராணம் | - | சிவ கல்பம் |
| 15. | கூர்மபுராணம் | - | லக்குமி கல்பம் |
| 16. | மச்சபுராணம் | - | கல்பாதி கல்பம் |
| 17. | கருடபுராணம் | - | கருட கல்பம் |
| 18. | பிரமாண்டபுராணம் | - | பவிஷ்ய கல்பம் |

**சீ**டர்களே, வேதவியாசர் புராண சம்கிதை என்றொரு நூலை எழுதினார். பின் அதைத் தனது சீடரான லோமகர்சனுக்குச் சொன்னார். பின் அது வாய்மொழியாக வழிவழியாக வந்ததென்று கூறப்படுகிறது. எனவே முதல் நூலுக்கும் தற்போது கிடைத்துள்ள நூலுக்கும் பலவேறுபாடுகள் இருக்கின்றன. அது இயல்பானது என்பதை அதைக் கற்போர் உணர்தல் வேண்டும்.

## 3. சிவசர்மாவின் கதை



**மே**ற்குப் பக்கமாக இருந்த துவாரவதி என்ற பட்டணத்தில் சிவசர்மா என்றோர் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் குருகுலத்திற்குச் சென்று முறைப்படி வேதங்களைக் கற்றுத் தேர்ந்தவர். சகல சாத்திரங்களையும் கற்றவர். அதனால் அவர் பெரும் பெரும் யாகங்களையெல்லாம் விதிப்படி எந்தக் குறைகளும் இல்லாது செய்து வந்தார். அதனால் அவரது புகழ் எங்கும் பரவியது.

**அ**வருக்கு யஜ்ஞசர்மா, வேதசர்மா, தர்மசர்மா, விஷ்ணுசர்மா, சோமசர்மா என ஐந்து புத்திரர்கள் இருந்தனர். அவர்களும் தந்தையிடம் கற்கவேண்டிய கல்விகள் யாவற்றையும் கற்றுப் பெரும் பண்டிதர்களாக விளங்கினர். தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்ற முதுமொழிக் கேற்ப தந்தையைக் கடவுளாக எண்ணி மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். இருந்தபோதும் அவர்களது தந்தையான சிவசர்மா தனது புத்திரர்களின் நிலையை அறிய விரும்பினார். பல புத்திரர்கள் தேவைக்கேற்பப் பெற்றோரையும், குருவையும் மதித்து வருகின்றனர். அதுபோலத் தமது பிள்ளைகளும் வாழ்கிறார்களா? இல்லைத் தன்மீது அன்பும் மதிப்பும் கொண்டுள்ளார்களா என்று அறியவிரும்பினார்.

**ச**கல வேதங்களையும் கற்ற சிவசர்மா, அரிய பல மந்திரங்களையும் கற்றிருந்தார். அந்த மந்திரங்களைப் பயன்படுத்தித் தமது பிள்ளைகளது நிலைய உணரலாம் என நினைத்து தனது மனைவி இறந்துவிட்டதாக ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கித் தனது மூத்த மகனான யஜ்ஞ சர்மாவை அழைத்து உனது தாயாரின் உடலை மயானத்திற்குக் கொண்டு சென்று வீசுமாறு கூறினார். அதைக் கேட்ட அவரது மூத்த மகன் ஒரு கூரிய வாளை எடுத்துச் சென்று தாயின் உடலைத் துண்டு துண்டுகளாக வெட்டி வீசிவிட்டு வந்தான். அதனால் அவன் தன்மீது மிகுந்த பக்தி உள்ளவன் என்று சிவசர்மா தீர்மானித்து மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

**அ**டுத்து மிகவும் அழகான ஒரு கன்னிப் பெண்ணைத் தனது மந்திர சக்தியால் உருவாக்கினார். பின் அந்த மாய மங்கையைத் தான் திருமணம் செய்யவிரும்புவதாக சிவசர்மா கூற அந்த மாயமங்கை தான் சிவசர்மாவை மணக்கமாட்டேன் சிவ சர்மாவின் இரண்டாவது மகனான வேதசர்மாவைத் தான் மணப்பேன் என்று கூறினாள். அதை ஏற்க வேதசர்மா மறுத்து, "உன்னை நான் திருமணம் செய்யமாட்டேன். எனது தந்தை உன்னை விரும்பியதால் நீ எனக்கு மாற்றாந் தாயாவாய். அதனால் உன்னை மணக்கமாட்டேன். எனது தந்தையை மண" என்றான்.

**அ**தைக்கேட்ட அந்த மாய மங்கை சொன்னாள், "நீ சொல்வது சரி. என்னை உனது தந்தை விரும்பியதால் நான் உனக்குத் தாயாகிவிட்டேன். அதனால் நான் உனது தந்தையைத் திருமணம் செய்ய வேண்டுமானால் நீ உனது தலையை வெட்டி எனக்கு வெகுமதியாகத் தரல் வேண்டும்" என்றாள்.

**அ**தைக் கேட்டுமிக்க மகிழ்வடைந்த வேதசர்மா, "தாயே, என்னால் உடனே தரக்கூடி ஒரு பொருளை நீ வெகுமதியாகக் கேட்டது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. எங்கு தேடியும் கிடைக்காத பொருளை நீ கேட்டிருந்தால் நான் தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாத பாவியாகியிருப்பேன். அதைவிட வேறொரு கிடைக்கக்கூடிய பொருளைக் கேட்டிருந்தாலும் அதை எடுத்துவர நேரமாகும். எனது தலையைக் கேட்டமையால் தாமதமின்றித் தருகிறேன்" என்று சொல்லித் தனது தலையை வெட்டி அந்த மாயப் பெண்ணிடம் கொடுத்தான். அதைக் கண்ட சிவசர்மாவுக்கு மெய் சிலிர்த்தது. இவ்வளவு பாசம் உள்ள மகனா இவன் என்று நினைத்து மகிழ்ந்தார்.

**சி**வசர்மா தனது இரண்டாவது மகனான வேதசர்மாவின் தலையை அந்த மாயப் பெண்ணிடம் வாங்கி அதைத் தனது மூன்றாவது மகனான தர்மசர்மாவிடம் கொடுக்க, தர்மசர்மா தனது சகோதரனை உயிர்பிக்குமாறு தர்மதேவதையைப் பிரார்திதத்தான். தர்மதேவதை அவனது கோரிக்கையை ஏற்று வேதசர்மாவை உயிர்ப்பித்தது. இருவரும் தந்தையான சிவசர்மாவை வணங்கினர். அதனால் வேதசர்மாவும் தன்மீது பக்தி கொண்டவன் என்று சிவசர்மா நினைத்துப் பூரிப்பதைந்தார்.

**அ**தன்பின் தனது நான்காவது மகனான விஷ்ணு சர்மாவைச் சோதிக்க விரும்பிய சிவசர்மா, தனது நான்காவது மகனான விஷ்ணு சர்மாவை அழைத்து, "மகனே, நான் வயோதிபம் அடைந்து விட்டேன். அதனால் நான் பலவீனனாகிவிட்டேன். இருந்தபோதும் ஓர் அழகிய பெண்ணை நான் விரும்புகிறேன். அவளை நான் திருமணம் செய்ய வேண்டுமானால் எனது முதுமை அகன்று வாலிபம் வரல் வேண்டும். வாலிபம் சாதாரணமாக வராது. நீ தேவலோகம் சென்று அங்கு இந்திரனை வசப்படுத்தி அவனிடமிருந்து அமிர்தத்தைப் பெற்று

வர வேண்டும். அப்படி நீ தேவலோகம் சென்று பெற்று வரும் அமிர்தத்தை நான் குடித்தால் என்றும் அழியாத இளமையையும் பலத்தையும் பெறுவேன். அதைச் செய்" என்றார் சிவசர்மா.

**வி**ஷ்ணுசர்மா தனது தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகத் தேவலோகம் சென்றான். விஷ்ணுசர்மா தன்னிடம் அமிர்தம் பெற வந்திருக்கிறான் என்பதை அறிந்த இந்திரன் அதைக் கொடுக்காமல் விடுவதற்காகப் பல தந்திரங்களைச் செய்தான்.

**இ**ந்திரலோகத்திற்குச் சென்ற விஷ்ணு சர்மாவை மயக்கி வந்த விடயத்தை மறக்கச் செய்வதற்காக இந்திரன் தேவலோகத்தில் மிக்க அழகு வாய்ந்த தேவலோக மங்கையான மேனகை என்ற அழகியை அனுப்பிவைத்தான். ஏற்கனவே இந்திரப் பதவிக்காகவும், வேறு விடயங்களுக்காகவும் தவம் செய்த முனிவர்கள் பலரை மயக்கித் தன்பால் ஈர்த்து அவர்களுடன் காமக்களியாட்டங்களில் ஈடுபட்டு அவர்கள் வந்த விடயங்களை மறக்கச் செய்தவள் மேனகை. அதனால் தான் இந்திரன் அவளைத் தேர்ந்தெடுந்து அனுப்பிவைத்தான். தேவர்களைத் தவிரவேறு எவருக்கும் எக் காரணங்கொண்டும் அமிர்தம் வழங்கப்படுவதில்லை. அதனால் இந்திரன், விஷ்ணுசர்மா, மேனகையின் அழகில் மயங்கி வந்த விடயத்தை மறக்கச் செய்வாள் என்று நம்பினான்.

**மே**னகை பெரும் அழகி. அவள் அலங்காரம் செய்து கொண்டு தேவருலகில் நடனமாடினால் அதைப் பார்க்கின்ற தேவர்களும், முனிவர்களும் அவளின் மீது மோகங் கொண்டு மயங்கி விடுவர். வந்தவன் பூலோகத்தில் வசிக்கும் சாதாரணமான மனிதன். தவவலிமை பெற்ற கண்டு முனிவரையே மயக்கி அவர் ஆசைப்பட்ட இந்திரப் பதவியைக் கொடுத்தவள் அவள். அதனால் அவள் கர்வத்துடன் விஷ்ணு சர்மாவின் அருகே வந்து, "நீங்கள் யார்? இங்கு ஏன் வந்தீர்கள்" என்று கேட்டாள். அவள் பேசும்போது அவளது கண்களும், அங்கங்களும் மோகத்தைக் கொட்டின.

**மே**னகை அவனின் அருகில் வந்து மிக நெருக்கமாக நின்றாள். அவள் உடலெங்கும் பூசியிருந்த வாசனைத் திரவியங்கள் அவள் நின்ற இடத்தை மட்டுமன்றி தேவலோகம் முழுவதும் நறுமணம் வீசின. விஷ்ணு சர்மாவுக்கு அந்த வாசம் பழுதடைந்த பிணத்தின் வாசம் போல இருந்தது. மூக்கைக் கையால் பொத்தினான். அவளது கவர்ச்சியான மோகமூட்டும் உடலின் பாகங்கள் விஷ்ணு சர்மாவின் கண்களைக் கூசச் செய்ததால் அவன் தனது கண்களை மூடிக்கொண்டான்.

**த**ன்னைக் காண்பவர்கள் தம்மை மறந்து தன்னையே ரசித்துப் பார்த்துக் கொண்டிருப்பர். ஆனால் இவன் தேவலோகத்து நறுமணத்தைச் சகிக்க முடியாத நாற்றம் என்றெண்ணித் தனது மூக்கைப் பொத்தியுள்ளான். அதைவிட நான் ஒரு அசிங்கமான பார்க்க கூட முடியாத

உருவத்தைக் கொண்டவள் என நினைத்துத் தனது கண்களையும் மூடிவிட்டான். இனி என்ன செய்வது என்று யோசித்தாள்.

“**பெ**ண்ணே, நீ யார் என்று எனக்குத் தெரியாது. தேவலோகத்தில் நான் தற்போது இருப்பதால் நீ ஒரு தேவ மங்கை என்று நான் நினைக்கிறேன். நான் இங்கு எனது தந்தை வயது சென்றமையால் மூப்படைந்து உடல் தளர்ந்து பலவீனப்பட்டுள்ளார். இருந்த போதும் அவர் ஓர் அழகிய பெண்ணை விரும்பிவிட்டார். வயோதிபரான அவரால் இளம் பெண்ணோடு கூடி மகிழமுடியாதென்று கவலைப்படுகிறார். அவரின் பலவீனமான முதிய தோற்றத்தைப் போக்க அமிர்தம் குடிக்க வேண்டுமாம். அது இந்திரனிடம் இருப்பதால் அதைக் கேட்டுப் பெறவே இங்கு வந்தேன். உனது போக்கும், உனது பேச்சும், ஆடைகளும் ஒருபோதும் என்னைக் காமவசப்படுத்தாது நான் ஓர் இலட்சியத்துடன் வாழ்பவன். இலட்சியத்தில் மனவுறுதியாக உள்ளவர்கள் தவசிகளை விட மேலானவர்கள். அதனால் இங்கிருந்து சென்று விடு” என்றான்.

“**நீ** என்னைத் தவறாக நினைக்கிறாய். உன்னைக் கண்டதும் எனது மனம் உன்னை நாடிவிட்டது. என்னைத் திருமணம் செய்து கொண்டு தேவருகில் இன்பமாக வாழலாம்” என்றாள்.

“**இ**ன்பம் என்பது என்ன? அது ஒருவனின் மன நிலையை பொறுத்தது. ஒருவருக்கு இன்பமானது இன்னொருவருக்கு இன்பமாகாது. அத்துடன் இன்பமென்று நினைப்பவையாவும். ஒரு சில நாட்களுக்கே இன்பம் அளிக்கும். அந்த ஆசை நீங்கிய பின் அவை துன்பமாக மாறிவிடும். அத்துடன் இன்னொன்று தான் இன்பமானது என்ற நிலை உருவாகும். இன்பம் என்று சொல்வது எதுவும் இல்லை” என்றான் விஷ்ணு சர்மா.

“**உ**ன்னைக் கண்டதும், உனது அழகில் மெய்மறந்து விட்டேன். உன்னை மறந்து என்னால் வாழ முடியாது” என்றவாறு அவனை நெருங்கி வந்தாள் மேனகை.

“**பெ**ண்ணே அருகில் வராதே. உனக்கு என்னைத் திருமணம் செய்ய விருப்பமானால், நான் இந்திரனிடம் சென்று அமிர்தம் வாங்கிச் சென்று எனது தந்தைக்குக் கொடுத்து விட்டு வருகிறேன். அதன்பின் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கலாம்” என்றான் விஷ்ணுசர்மா. மேனகை தனது திறமை முழுவதையும் பிரயோகித்தும் அவன் தனது நோக்கத்தில் இருந்து விடுபடவில்லை. அதனால் அவள் இந்திரனிடம் சென்று, “அவனை எந்த வழியாலும் மயக்க முடியவில்லை” என்று கூறிவிட்டுச் சென்றாள்.

**அ**தன்பின் இந்திரன் பூதங்களை அனுப்பினான். பூதங்கள் பெருங்கூச்சலிட்டுக் கொண்டு விஷ்ணுசர்மா இருந்த இடத்திற்கு வந்தன, “நீ யார்? தேவலோகத்திற்கு வருவதானால்

இந்திரனிடம் அனுமதி பெறவேண்டும். நீ அனுமதி பெற்றாயா..? அனுமதி பெறா விட்டால் இவ்விடத்தை விட்டு ஓடிப்போய்விடு. இல்லாவிட்டால் உன்னைத் தாக்கி வெளியே கொண்டு சென்று போடுவோம்" என்றன.

"**ம**னிதர்கள் கடவுகளைச் சந்தித்துத் தமது கோரிக்கையைச் சொல்ல யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை. பூமியில் இருந்து தேவலோகத்திற்கு முனிவர்களும் அரசர்களும், பிராமணர்களும் வந்து போவதாகவும். அதுபோலத் தேவர்கள் தவம் செய்யவும் பொழுதுபோக்கவும் பூமிக்கு வருவதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். பிறகேன் நான் அனுமதி பெற வேண்டும்?. நீங்கள் என்னை எப்படி வேண்டுமானாலும் தாக்கலாம். மனம் பலவீனமானவனுக்குத் தான் தேகத்தில் மாறுதல்கள் தோன்றும். திடமான மனதுள்ளவரின் தேகம் மரணத்தின் போதும் அஞ்சாது" என்றான் அதைக்கேட்ட பூதங்கள் இனி அவனைத் தாக்குவதால் பயனில்லை என்று உணர்ந்து இந்திரனிடம் சென்று முறையிட்டன. அதனால் ஆத்திரம் கொண்ட இந்திரன் கொடிய பேய்களையும், பிசாசுகளையும் அனுப்பி விஷ்ணு சர்மாவைப் பயமுறுத்தினான். விஷ்ணுசர்மா பேய்களுக்கும் பயப்படாததால் அவை திரும்பிச் சென்றுவிட்டன.

**எ**ந்த நிலையிலும் மனந்தளர்ச்சியடையாத விஷ்ணுசர்மாவை இந்திரன் தனது சபைக்கு அழைத்து அவனைப் பாராட்டினான். பின்பு அவனுக்கு ஒரு கலசத்தில் அமுதத்தைக் கொடுத்தான். அதனால் மிக்க மகிழ்ச்சியடைந்த விஷ்ணு சர்மா அமுதத்தைக் கொண்டு வந்து தந்தைக்குக் கொடுத்தான். அவர் மிகவும் மகிழ்ந்தார். தனது ஐந்து புத்திரர்களும் தன்மீது உண்மையான அன்பை வைத்திருப்பதாக நம்பி மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

**அ**தன்பின் தனது மாய சக்தியால் நிகழ்ந்தவற்றை மறைத்து விட்டுத் தனது மனைவியை வரவழைத்துத் தனது பிள்ளைகளுக்குக் காட்டி தான் மந்திரங்களால் தனது பிள்ளைகளைச் சோதித்ததாகக் கூறினர். அதன் பின் தனது இளைய மகனான சோமசர்மாவைத் தனக்கு உதவியாக வைத்துக் கொண்டு ஏனைய நான்கு புத்திரர்களையும் விஷ்ணு லோகத்திற்கு அனுப்பி வைத்தார்.


**சி**வசர்மா தனது மகனான விஷ்ணுசர்மா கொண்டு வந்து கொடுத்த அமிர்தத்தை உடனே அருந்தாமல், அதைத் தனது இளைய மகனான சோம சர்மாவிடம் அந்த அமிர்தத்தைக் கொடுத்து, "மகனே, நானும் உனது தாயாரும் தீர்த்த யாத்திரைக்குச் செல்ல விரும்புகிறோம். நாமிருவரும் தீர்த்த யாத்திரையை முடிந்த பின்பு தான் அமிர்தத்தை அருந்துவோம். அது வரை இந்த அமுதத்தைப் பாதுகாப்பாக வைத்திரு" என்று கூறிவிட்டுத் தீர்த்த யாத்திரைக்குத் தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு சென்றார் சிவசர்மா.

**சி**ல நாட்கள் கழிய சிவசர்மாவும் அவரது மனைவியும் தொழுநோயாளர்கள் போல வேடமிட்டுத் தமது வீட்டுக்குத் திரும்பினர். சோமசர்மா அவர்களை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்துவிட்டு அவர்களை மனம் கோணாதபடி பாதுகாத்ததோடு சிகிச்சையும் செய்து வந்தான்.

**ஒ**ருநாள் சிவசர்மா பாதுகாப்பாக வைத்திருந்த அமுதகலசத்தைத் தனது மாய சக்தியால் மறைத்துவைத்து விட்டுத் தனது மகனை அழைத்து அமுதகலசத்தைக் கொண்டு வரும்படி கூறினார். சோமசர்மா சென்று பார்த்தபோது அமுதகலசம் இருந்தது. ஆனால் அதனுள் அமுதம் இருக்கவில்லை. அதைக் கண்டு வியப்படையாத சோமசர்மா தனது தந்தையின் மீது வைத்திருந்த அளவற்ற பக்தியின் மகிமையால் வெறுமையாக இருந்த அமுத கலசத்துள் அமுதத்தை வரவழைத்துவிட்டு அதைக் கொண்டு வந்து தந்தையிடம் கொடுத்தான். சிவசர்மா அவனது பக்தியை மெச்சி அவனைப் பாராட்டினான். சிலகாலம் செல்லச் சிவசர்மா தனது மனைவியுடன் சேர்ந்து விஷ்ணு லோகம் சென்றார்.

**த**ந்தையும் தாயும் விஷ்ணு லோகம் சென்ற பின்பு சோமசர்மா தவம் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றான். ஏற்கனவே அங்கு வாழ்ந்து வந்த அரக்கர்கள் சோமவர்மா அங்கு வந்து தவம் செய்வதை விரும்பவில்லை. அவர்கள் சோமசர்மாவின் தவத்தைக் குழப்பிக் கொண்டிருந்தனர். ஒருநாள் அவர்கள் சோமசர்மாவை பயமுறுத்த அவன் பயத்தினால் இறந்து விட்டான். அரக்கர்களின் கொடுமையால் இறந்த சோமசர்மா மறு பிறவியில் அரக்கனாகப் பிறந்தான். அவன் முன்பு மகாவிஷ்ணுவை வணங்கியதாலும், பெரும் புண்ணியங்கள் செய்ததாலும் பெரும் விஷ்ணு பக்தனாக இருந்தான். அவன் தான் இரண்ணிய கசிபுவின் மகன் பிரகலாதன் ஆவான்.

## 4. சோமசர்மாவும் சுவ்ரதனும்



**ரே**வா நதிக்கரையில் வாமண தீர்த்தம் என்ற இடத்தில் சோமசர்மா தனது மனைவியான சுமணாவுடன் வாழ்ந்து வந்தார். அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அத்துடன் அவர்கள் மிகவும் வறியவர்கள். அவர்கள் அன்றன்றுக்குரிய உணவுக்கே மிகவும் கஷ்டப்பட்டனர். இவ்வாறு அவர்கள் மிகுந்த கஷ்டத்துடன் வாழ்ந்து வருகையில், அவ்வூரில் வசித்து வந்த வசிட்ட முனிவரின் பெருமைகளைக் கேள்விப்பட்டு அவர்கள் இருவரும் வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று தமக்குள்ள வறுமையைப்

பற்றியும் அதனால் வரும் துன்பங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினர், “முனிவரே, எமக்கு ஒரு நேர உணவு கூடப் பூரணமாகக் கிடைப்பதில்லை. ஏதாவது தொழில் செய்யலாம் என்றால் எந்தத் தொழிலும் எனக்குத் தெரியாது. நான் இளமையாக இருப்பதால் யாசகம் செய்யப் போனால் அவர்கள் என்னை ஏசுகின்றனர். பழிக்கின்றனர். அதனால் என்னால் வாழ முடியவில்லை. முக் காலங்களையும் உணர்ந்த நீங்கள் நான் முற்பிறப்பில் செய்த பாவங்கள் தான் இதற்குக் காரணமா என்று கூறுங்கள். அத்துடன் அதற்கான பரிகாரங்களையும் கூறுங்கள்” என்று இரந்து வணங்கினான்.

**அ**வனது நிலையைக் கண்டு வருந்திய வசிட்ட முனிவர் அவன் முற்பிறப்பில் நடந்து கொண்ட முறைகளைப் பற்றிக் கூறினார், “நீ முற்பிறப்பில் பெரும் விவசாயியாக இருந்தாய். உனது முயற்சியால் நீ நல்ல வருமானத்தைப் பெற்றாய். ஆனால் தானதர்மங்கள் எதுவும் செய்யவில்லை. வீட்டுக்கு யாராவது விருந்தினர் வந்தால் நீ அவர்களை உரிய முறையில் வரவேற்று உணவளிப்பதில்லை. அதனால் உனது வீட்டிற்கு இரப்பவர்கள் எவரும் வருவதில்லை. புனிதயாத்திரைகள் எதுவும் செய்ததில்லை. கோவிற் பக்கமே நீ சென்றதில்லை. கல்வி கற்கவில்லை. சாத்திரங்களை அறியவும் இல்லை. அதனால் கடவுளைக் கூட நீ பூசிக்கவில்லை. பொருள் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தாய் அதனால் தான் இப் பிறப்பில் ஏழையாகப் பிறந்தாய்” என்றார். வசிட்ட முனிவர்.

**அ**தை நான் ஏற்றுக்கொள்கிறேன். முற்பிறப்பில் கஞ்சனாகவும், தீயவனாகவும் வாழ்ந்த நான் இப்பிறப்பில் எவ்வாறு பிராமணனாகப் பிறந்தேன். பிராமணனாகப் பிறக்க பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்” என்றான் சோமசர்மா.

“**நீ** கேட்பதில் நியாயம் இருக்கிறது. தீயவனாகவும், கஞ்சனாகவும் வாழ்ந்தாலும் சிலவேளைகளில் சந்தர்ப்ப வசத்தாலோ அல்லது அதிஷ்ட வசத்தாலோ அல்லது இரக்கக் குணத்தாலோ சிலர் புண்ணியகாரியங்களைத் தம்மையறியாது செய்துவிடுகின்றனர். ஒருவர் விரும்பியோ, விரும்பாமலோ அல்லது தெரிந்தோ தெரியாமலோ செய்யும் கர்மங்கள் இறைவனால் கணக்கெடுக்கப்படுகின்றன. அதனால் தான் சிலர் தனவந்தர்களாகவும், பலர் ஏழைகளாகவும் பிறக்கின்றனர். நான் முன்பு சொன்னதைப் போல அறிந்தோ அறியாமலோ செய்யும் செயல்களும் பாவபுண்ணியங்களைக் கொடுக்கின்றன. முற்பிறப்பில் சூத்திரனாகப் பிறந்திருந்தாலும் ஒரு கற்ற விஷ்ணுவின் பெரும் பக்தரான அந்தணரொருவர் உனது இல்லத்திற்கு யாசகத்திற்காக வந்தார். அவரின் தோற்றம் உனது மனதில் மகிழ்ச்சியைக் கொடுத்தது. விஷ்ணுவைப் போல அவர் காட்சி தந்ததால் அவரை இன் முகத்துடன் வரவேற்று அவரின் மனம் மகிழும்படியான செயல்களைச் செய்து அறுசுவையான உணவு கொடுத்தாய். பின்பு அரிசி, பருப்பு, காய்கறி போன்றவற்றைத் தானமாகக் கொடுத்தாய். அவர் மனம் மகிழ்ந்து, “சகலதும் கற்ற அந்தணன் போல நீ மிக்க மகிழ்வுடன் என்னை வரவேற்று எனது பசியைப் போக்கியதோடு எனது குடும்பத்தினர் பல நாட்களுக்கு உண்ண வேண்டிய

உணவுப் பொருட்களையும் தந்துதவினாய். அதனால் நீ அடுத்த பிறப்பில் வேதங்களைக் கற்ற அந்தணனாகப் பிறப்பாய்" என்று வாழ்த்திவிட்டுச் சென்றார். அன்று வளர்பிறை ஏகாதசி. அன்று அந்த அந்தணர் ஏகாதசி விரதம் அனுட்டித்தார். அவர் விரதம் அனுட்டித்ததைப் பார்த்த நீயும் விரதம் அனுட்டித்தாய். வளர்பிறை ஏகாதசியில் ஏழைகளுக்கோ அல்லது பிராமணர்களுக்கோ உண்ணச் சுவையான உணவு கொடுத்துத் தானம் செய்தால் அவர்கள் வாழ்த்துவார்கள். அவர்களது வாக்குப் பலிக்கும். நீ கொடுத்த உணவை உண்டு தானமாகக் கொடுத்த பொருட்களையும் பெற்ற அந்த அந்தணன், "நீ அடுத்த பிறவியில் ஓர் அந்தணனாகப் பிறப்பாய்" என்று வாழ்த்திய வாழ்த்தால் தான் நீ அந்தண குலத்தில் பிறந்தாய்" என்றார் வசிட்டர்.

**அ**தைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த சோமசர்மா, "நான் முற்பிறப்பில் விஷ்ணுவை வணங்கித் தானதர்மங்கள் செய்திருந்தால் பெரும் தனவந்தனாக இப்பிறப்பில் பிறந்திருப்பேன். மேற்கொண்டு நல்வாழ்வு வாழ நான் என்ன செய்ய வேண்டும்" என்று கூறி வசிட்ட முனிவரை வணங்கினான் சோமசர்மா.

"**நீ** இப்பிறப்பிலும் தொடர்ந்து வரும் பிறப்புக்களிலும் சகல வசதிகளோடும் வாழ வேண்டும் என்று விரும்பினால் விஷ்ணுவைப் பற்றற்று வணங்கு. அவர் உனக்குத் தேவையானவற்றையெல்லாம் அருள்வார். உனக்குப் பிள்ளைகள் இல்லை என்று கூறி மனங்கலங்கினாய். மனக்கலக்கத்தை விட்டு விட்டு விஷ்ணுவைச் சரணடை நடப்பவையெல்லாம் நல்லவையாக நடக்கும்" என்றார் வசிட்ட முனிவர்.

**வ**சிட்ட முனிவரை வணங்கி விடை பெற்ற சோமசர்மாவும் அவனது மனைவி சுமணாவும் ரேவா நதிக்கரையில் உள்ள கபில சங்கமம் என்ற இடத்தில் ஓர் ஆச்சிரமம் அமைத்து அங்கு இருந்து விஷ்ணுவைக் குறித்து மந்திரங்களை உச்சரித்து தவம் செய்தனர். கபில சங்கமத்திற்கு அருகில் ஒரு பெருங்காடு இருந்தது. அதில் கொடிய மிருகங்களும், பேய் பிசாசுகளும், பூதங்களும், பாம்புகளும் வாழ்ந்து வந்தன. அவை அடிக்கடி சோமசர்மாவின் ஆச்சிரமப் பக்கம் வந்தன. கொடிய காட்டு விலங்குகள் அவர்களைத் தாக்க வரும் போது அவர்கள் விஷ்ணுவை நினைத்து மந்திரங்களைச் சொல்வர். அந்த மந்திரங்கள் கொடிய மிருகங்களின் சிந்தனையை மாற்றி அவற்றைத் திசை திருப்பிவிடும். அதன் பின் அவை அந்தப் பக்கம் வர அஞ்சும். பேய்களும், பிசாசுகளும் அவர்கள் சமைக்கும் உணவின் நறுமணத்தால் அங்கு வரும். சோமசர்மாவின் மனைவி சுமணா அவற்றைக் கண்டு அஞ்சாது விஷ்ணுவின் மந்திரங்களை உச்சரித்தபடி தான் சமைத்த உணவின் ஒரு சிறு பகுதியை வெளியே வைப்பாள். அவை அதை உண்டு விட்டுப் போய்விடும். விஷ்ணுவின் அருளால் கொடிய மிருகங்களும், பாம்புகளும், பேய் பிசாசுகளும் அவர்களுக்கு நண்பர்களாயின.

**ஒ**ருநாள் சோமசர்மா விஷ்ணுவின் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும்போது விஷ்ணு அவன் முன் தோன்றி, "நீ விரும்பிய வரத்தைக் கேள்" என்றார். விஷ்ணுவை நேரில் கண்டதால் மட்டற்ற மகிழ்வடைந்த சோமசர்மா, "எம் பெருமானே, எனது வறுமை நீங்க வேண்டும். அத்துடன் எனக்கொரு புத்திரன் பிறக்க வேண்டும். பிறக்கும் மகனும் உங்கள் மீது பெரும் பக்தி கொண்டவனாக இருக்க வேண்டும்" என்று கேட்டான். விஷ்ணு அவன் கேட்ட வரங்களை அருளிவிட்டு மறைந்தார். சில காலம் செல்ல அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குச் சோமசர்மா சுவ்தரன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான். அவன் குழந்தையாக இருக்கும் போதே விஷ்ணுமீது பெரும் பக்தி கொண்டவனாக இருந்தான்.


## 5. சுவ்ரதன்

**மு**ன்னொரு காலத்திலே விதிஷர என்ற நாட்டை ரித்வஜா என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த விஷ்ணு பக்தன். அதனால் அவன் நீதியாக நாட்டை ஆண்டு வந்தான். அவனுடைய மகன் வாலி. வாலியினுடைய மகன் ருக்மாங்கதன்.

## 6. ருக்மாங்கனின் வரலாறு

**ரு**க்மாங்கதன் சத்தியவரி என்ற பெண்ணைத் திருமணம் செய்தான். அவர்களுக்கு தர்மாங்கதன் என்ற மகன் பிறந்தான். அவன் சிறந்த விஷ்ணுபக்தனாக வாழ்ந்து விஷ்ணுலோகத்தை அடைந்தான். அவன் பலயுகங்கள் அங்கிருந்து இன்பகமாக வாழ்ந்த பின்பு சுவ்ரதனாகப் பூமியில் பிறந்தான். சிறுவயதில் இருந்தே அவன் சிறந்த விஷ்ணு பக்தனாக வாழ்ந்து வந்தான். அவன் இளைஞனானதும் நர்மதா ஆற்றங்கரையில் உள்ள வைடூரிய மலைக்குச் சென்று நூறு ஆண்டுகள் விஷ்ணுவை நோக்கித் தவம் செய்தான். அதன்பின் அவனும் அவனுடைய பெற்றோரையும் விஷ்ணுலோகத்திற்கு விஷ்ணு அழைத்துச் சென்றார்.

## 7. காசிய முனிவரின் மகன் பலனும் விரித்திரனும்



**வ**ராக அவதாரத்தின் கதையை மைத்திரேயர் சொல்லி முடித்த பின்பு விதுரர் கேட்டார், "குருவே, பகவான் பூமியை தூக்கியபோது அவரை எதிர்த்த இரண்யாக்கன் என்ற அசுரனைக் கொன்றதாகச் சொன்னீர்கள். அவன் யார்? பகவான் எதற்காக அவனைக் கொன்றார்?".

“**பி**ரமதேவரின் புதல்வாரன மரீசி முனிவருக்குக் காசிபர் என்றொரு மகன் இருந்தான். காசிபருக்கு தட்சப் பிரஜாபதி தனது பதின்மூன்று புதல்வியரைத் திருமணம் செய்து கொடுத்தார். அவர்களுள் திதி என்பவள் ஒரு நாள் காமவசப்பபடுட்டுக் காசிபரை அணுகினாள். அப்போது காசிபர் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தார். அவள் காசிபருக்கு அருகில் சென்று சொன்னாள், “நாதா, எனது சக்காளத்திகள் அனைவருக்கும் பிள்ளைகள் உண்டு. ஆனால் எனக்கில்லை. அதனால் நீர் எனக்குப் புத்திரபாக்கியத்தைக் கொடுக்க வேண்டும்” என்று இரந்தாள்.

**அ**தைக்கேட்டு அதிர்ச்சியடைந்த காசிபர், “பிரியசகியே, உனது விருப்பம் இயல்பானது. ஆனால் மகாதேவனுக்குரிய இந்த மாலை வேளையில் கூடக்கூடாது மாலைப் பொழுது கழியும் வரை பொறுத்திரு” என்றார் காசிபர்.

**கா**மவசப்பட்ட திதியால் மாலை கழியும்வரை பொறுத்திருக்க முடியவில்லை. அதனால் காசிபரைத் தழுவி அவரைக் காமவசப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டார். தகாத வேளை என்ற உணர்வு காசிபருக்கு அற்றுப் போனது. அதனால் மனைவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். பின் அவர் நீராடிவிட்டுப் பெருமானை வணங்கினார்.

**கா**ம உணர்வு அடங்கிய பின்பு திதிக்குப் பயமாக இருந்தது. கூடக்கூடாத நேரத்தில் கூடியதால் விபரீதமாக ஏதாவது நடந்துவிடுமோ எனப் பயந்து தனது கணவனான காசிப முனிவரின் அருகில் வந்து சொன்னாள், “நாதா, கூடக்கூடாத வேளையில் தங்களை வற்புறுத்திக் கூடிப் பாவத்தைத் தேடிக் கொண்டேன்” என்று துயரப்பட்டு அழுதபோது காசிபர் சொன்னார், “பெண்ணே, உனது மனம் அசுத்தமாக இருந்தாலும் காலத்தை உணராமையாலும், பகவானின் கட்டளையை மீறியமையாலும் உனக்கு இரண்டும் கெட்ட பிள்ளைகள் தான் பிறப்பார்கள். அவர்களால் மூவுலகில் வாழ்பவர்கள். அவர்களால் அனைவரும் பெருந் துன்பப்படுவார்கள். பெரியோர்களையும், ரிஷிகளையும், முனிவர்களையும் அவர்கள் துன்புறுத்துவர். இதற்காகப் பகவான் அவதாரம் எடுத்து உனது இரண்டு பிள்ளைகளையும் அழிப்பார்” என்று காசிபர் கூறினார்.

“**அ**தைக் கேட்ட திதி, “நாதா பகவானின் திருக்கரங்களால் எனது பிள்ளைகள் அழிக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பிராமணர்களின் சாபத்திற்கு அவர்கள் அளாகக்கூடாது” என்றாள்”.

**அ**தைக்கேட்ட காசிபர், “பெண்ணே, செய்த தவறை நினைத்து நீ இப்போது கவலைப்படுகிறாய். நல்லது கெட்டதை அறிந்து கொள்ளும் விவேகமான புத்தி உனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் உனது மகன் இரண்ணியகசிபு என்பவனுக்கு நான்கு புத்திரர்கள் பிறப்பார்கள். மூத்த புதல்வன் ஒரு பகவதனாய் விளங்குவான். திருமாலைத் தனது

தெய்வமாக ஏற்றுத் தினமும் போற்றிப் புகழ்ந்து பாடுவான். சான்றோர் அவனைப் போற்றிப் புகழ்வர். ஏழை எளியவர்களுக்கு தன்னால் இயன்றளவு உதவிகளைச் செய்வான். திருமால் அவனது பக்தியைக் கண்டு மகிழ்வார்" என்றார். அதைக்கேட்ட திதிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பெருமாளின் பெரும் பக்தனாக ஒரு பேரனும், ஏனைய மூன்று பேரர்களும் திருமாலினால் மடிவார்கள்" என்று காசிபர் சொன்னது அவளுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது.

## சுகலையின் வரலாறு



**க**ங்கைக் கரையில் வாரனாசி என்றொரு இடம் உண்டு. அங்கு கிரிகலன் என்றொரு வர்த்தகன் வாழ்ந்து வந்தான். அவனது மனைவி சுகலை. இருவரும் மிகவும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். சுகலை சகல சாத்திரங்களையும் அறிந்தவள். உத்தமமான பத்தினி கணவனின் விருப்பமறிந்து செயற்படுபவள். அவன் யாசிக்க தன் வீட்டுக்கு வருபவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தான். ஒருநாள் ஒரு அடியவர் தீர்த்த யாத்திரை செல்லும்போது அவனது வீட்டுக்கும் வந்தார். அவர் தீர்த்த யாத்திரையின் மகிமைகளைக் கூறியபின் கிரிகலனுக்கும் தீர்த்த யாத்திரைக்குச் சென்று புண்ணியம் தேட வேண்டும் என்ற நினைப்பு உண்டானது அதை அவன் தனது மனைவியான சுகலைக்குச் சொன்னான். அதைக் கேட்ட சுகலை தீர்த்த யாத்திரைக்குத் தானும் வருகிறேன் என்று சொன்னாள்.

**த**னது மனைவியைத் தீர்த்த யாத்திரைக்கு அழைத்துச் செல்ல கிரிகலன் விரும்பவில்லை. அதனால் அவள் கோவிலுக்குச் சென்றபோது அவளுக்குத் தெரியாமல் தீர்த்த யாத்திரைக்குச் சென்றான். கோவிலால் திரும்பி வந்த சுகலை தனது கணவன் தீர்த்த யாத்திரைக்குத் தனக்குச் சொல்லாமல் சென்றதையிட்டுப் பெருங்கவலை கொண்டாள். கணவனைப் பிரிந்து வாழ்வது பாவம் என்று நூல்கள் கூறியுள்ளதை அவள் அறிந்துள்ளாள். தீர்த்த யாத்திரைக்குக் கணவன் மனைவியையும் அழைத்துச் செல்லலாம். அப்படியிருக்கத் தனது கணவன் தன்னை விட்டு விட்டுத் தனியே சென்றதால் மிகுந்த வேதனைப்பட்டு அன்று முதல் அவள் பாய், தலையணை, போர்வை என்பவற்றை விலக்கிவிட்டுத் தரையில் படுத்து உறங்கினாள். சுவையற்ற உணவை ஒருவேளை மட்டும் உண்டாள். இதை அறிந்த அவளின் உறவினர்கள் அவளைச் சந்தித்துச் சமாதானம் கூறினர்.

“**சு**கலை, உனது கணவன் தீர்த்த யாத்திரைக்குத் தானே சென்றார். பல திருத்தலங்களுக்குக் கால் நடையாகச் செல்ல உன்னால் முடியாது என்று நினைத்திருப்பான். அதனால் வருந்தாதே. அவன் விரைவில் வந்து விடுவான். அவனைப் பிரிந்ததால் கட்டாந்தரையில் படுக்கிறாய். உணவை வெறுத்துவிட்டாய். ஒருவேளை மட்டும், அதுவும் சுவையில்லாத சத்துகள் அற்ற உணவை உண்கிறாய். அதனால் உனது உடல் பலவீனப்பட்டுவிடும். ஆகையால் விரதங்களைக் கைவிட்டு விட்டுச் சத்தான உணவு வகைகளை உண். உனது கணவன் தீர்த்த யாத்திரையை முடித்துவிட்டு வரும்போது அவனை நீ உற்சாகமாகவும் மகிழ்ச்சியுடனும் வரவேற்க வேண்டும்” என்று கூறினர்.

“**நீ**ங்கள் எல்லோரும் என்மீது வைத்த அன்புக்கும் அக்கறைக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். அன்பான சுற்றத்தவர்களைப் பெறுவதற்கும் புண்ணியம் செய்தல் வேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன். சாத்திரங்கள் யாவும் கணவனும் மனைவியும் சேர்ந்து தான் தீர்த்த யாத்திரையைச் செய்தல் வேண்டும். அதுபோலச் சந்நியாசம் செல்வதாக இருந்தாலும் கணவனும் மனைவியும் சேர்ந்தே காட்டுக்குச் சென்று பற்றற்றுத் தவம் செய்ய வேண்டும் என்றும் மனைவி இல்லாத போதுதான் தனித்துத் தீர்த்த யாத்திரைக்கோ, தவம் செய்யவோ போகலாம் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. இதை அறியாமலா நீங்கள் எனக்கு ஆறுதல் சொல்கிறீர்கள். இதை விளக்க உங்களுக்குச் சுதேவா என்பவளின் கதையைக் கூறுகிறேன்” என்றாள்.

## 8. சுதேவாவின் கதை



**அ**யோத்தியை இஷ்டவாகு என்ற அரசன் ஆட்சி செய்து கொண்டிருந்தான் அவன் அந்தணர்களை முறைப்படி ஆதரிப்பவன். அவன் வேதங்கள் அனைத்தையும் கற்றதால் நாட்டை நீதிநெறி வழுவாது ஆண்டு வந்தான். காசி நாட்டை அரசாண்ட வேதராஜனின் மகளான சுதேவாவைத் திருமணம் செய்து இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

**ஒ**ருநாள் இஷ்டவாகு மன்னன் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்று சிங்கம், புலி, பன்றிகள், எருமைகள், காட்டுக் குதிரைகள் என்பவற்றை வேட்டையாடினான்.

**அ**க்காட்டில் ஒரு பன்றிக் குடும்பம் வாழ்ந்து வந்தது. இஷ்டவாகு மன்னன் காட்டுக்குள் வந்து வேட்டையாடுகிறான் என்பதை அறிந்த பெண் பன்றி சொன்னது, “இஷ்டவாகு மன்னனும் அவரது படைவீரர்களும் காட்டிற்கு வந்து மிருகங்களை வேட்டையாடுகின்றனர். அவர்கள்

எம்மையும் வேட்டையாடக் கூடும். அதனால் நாங்கள் இங்கிருந்து அயல் காட்டிற்குத் தப்பிச் செல்வோம். அவர்கள் வேட்டையாடி முடிந்த பின்பு நாட்டுக்குத் திரும்பிடுவார்கள். அதன் பின் இங்கு வருவோம்" என்றது.

**அ**தை ஆண் பன்றி ஏற்கவில்லை, "பெண்ணே, வேட்டைக்காரர்கள் வந்தால் ஓடி ஒளிக்கத்தான் வேண்டும். அவர்கள் பாவிகள். பாவம் பழியைப் பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். காட்டுக்கு வேட்டையாட வந்த இஷ்டவாகு மன்னன் புண்ணியவான். அதனால் பயப்படாதே. அவன் பெரும் வீரன். அவனை எதிர்த்துப் போரிடப்போகிறேன். அவனை வென்றுவிட்டால் அழியாத புகழ்கிடைக்கும். மாறாகத் தோற்றுவிட்டால் ஒரு பெரும் வீரனோடு போரிட்டு வீரமரணமடைந்த எனக்கு மோட்சம் கிடைக்கும். நான் முற்பிறப்பில் பெரும் பாவங்களைச் செய்தமையால் தான் எனக்குக் கீழான இந்தப் பன்றிப் பிறப்பு ஏற்பட்டது. என்னால் பன்றியுருவில் இருந்து நரக வாழ்வு வாழ்வதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பெரும் வீரனும், நீதிநெறி தவறாத அறவானான மன்னன் இஷ்டவாகுவின் தாக்குதலால் இறந்தால் எனக்குக் கட்டாயம் மோட்சம் கிடைக்கும். இந்த நரக வாழ்வில் இருந்து விடுதலையும் கிடைக்கும். போரில் நான் இறந்துவிட்டால் எனது பிள்ளைகளையும் பெற்றோரையும் நல்லபடி வாழவை" என்று கூறியது.

"**அ**து எப்படி முடியும்? குடும்பத் தலைவன் ஆண். ஒரு பெண்ணினது கணவன் இறந்தால் மனைவியும் உடன் கட்டை ஏற வேண்டும் என்பது தான் மரபு. அதனால் நீங்கள் இறந்தால் நானும் இறந்துவிடுவேன். அது நடக்காது விட வேண்டுமானால். நாம் குடும்பத்துடன் மறைந்து வாழ்வது தான் சரியானது வாருங்கள் பாதுகாப்பான ஓரிடத்திற்குச் செல்வோம்" என்றது பெண் பன்றி.

"**நா**ன் கடைசிவரையும் தப்பி ஓட மாட்டேன். நான் முற்பிறப்பில் பெரும் வீரனாக இருந்தேன். வீரர்கள் தப்பி ஓடமாட்டார்கள் கோழைகள் தான் தப்பி ஓடுவர். ஏனென்றால் அவர்களுக்கு உயிர் கரும்பு போன்றது. என்னைத் தடுக்காதே" என்றது ஆண் பன்றி.

**த**னது கணவனின் இயல்பு பெண் பன்றிக்குத் தெரியும். அது ஒன்றைத் தீர்மானித்தால் கடவுளே வந்து தடுத்தாலும் கேளாது செய்தே தீரும் என்று நினைத்த பெண் பன்றி தனது மூத்த மகனின் அருகில் சென்று அதை தழுவி முத்தமிட்டுவிட்டுச் சொன்னது, "மகனே, உனது தந்தை காட்டுக்கு வேட்டையாட வந்திருக்கும் பெரும் வீரனான இஷ்டவானு மன்னருடன் போரிடப் போவதாகக் கூறுகிறார். போர் செய்ய வேண்டாம் என்று நான் தடுத்தும் அவர் அதைக் கேளாது போர் செய்யப் புறப்பட்டுவிட்டார். ஒரு கற்புள்ள பெண் தனது கணவனின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உதவவேண்டும். அதனால் உனது தந்தையுடன் நானும் போருக்குச் செல்கிறேன். பெரும் வீரனும் தருமவானுமான இஷ்ட்வாகு மன்னனை

வெல்வது கடினம். அதனால் நாம் இருவரும் இறந்தால் மூத்தமகனான நீ எமது குடும்பத்தைப் பொறுப்பேற்று நல்வழிப்படுத்த வேண்டும்" என்றது.

**மூ**த்த மகன் அதற்குச் சம்மதிக்கவில்லை, "இளம் வயதில் பெற்றோரைப் பிரிந்து வாழ்வது சுலபமான செயலல்ல. நான் சிறுவன். குடும்பப் பொறுப்புக்கள் அதிகம் உண்டு. அதனால் நான் கடைசிவரையும் குடும்பப் பொறுப்பை ஏற்கமாட்டேன்" என்றது.

**மூ**த்தமகன் அவ்வாறு சொன்னதும் ஆண் பன்றி தனது குடும்பத்தவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு ஒரு சிறு குன்றின் மீது ஏறித் தனது பிள்ளைகளையும் மனைவியையும் அந்தக் குன்றில் பாதுகாப்பாக இருக்கும் படி கூறிவிட்டு போருக்குத் தயாரானது.

**ப**ன்றிகள் கூட்டமாக ஒரு குன்றின் மீது இருப்பதைக் கண்ட இஷ்டவாகுவின் படைவீரர்கள் அவற்றைப் பிடிக்க முயல்கையில் கோபங் கொண்ட ஆண் பன்றி தனது கொம்பால் பல வீரரைக் குத்திக் கொன்றதோடு, பல வீரர்களைத் தாக்கிக் காயப்படுத்தியது. அதைக் கண்ட இஷ்டவாகு தான் ஏறிவந்த குதிரையைப் பன்றி நிற்கும் இடத்திற்குத் திருப்பி அதை நோக்கி விரைவாக வந்தான். அவன் தன்னைத் தாக்க வருகிறான் என்று தெரிந்து கொண்ட ஆண் பன்றி குதிரையை முர்க்கத்தனமாகத் தாக்கியது. இஷ்டவாகு மன்னன் குதிரையில் இருந்து கீழே விழுந்தான். பன்றி அவனைத் தாக்கவர அவன் தனது கதாயுதத்தால் பன்றியைத் தாக்க அது மரணமடைந்தது.

**அ**தைக் கண்ட பெண் பன்றி தனது பிள்ளைகளைத் தப்பிச் செல்லும்படி கூறிவிட்டு இஷ்டவாகுவின் படைவீரர்களை எதிர்த்துப் போராடியது. இளைய மூன்று பன்றிக் குட்டிகளும் ஓடிவிட்டன. மூத்த பன்றியும் தாய்ப் பன்றியும் வீரர்களை எதிர்த்துப் போரிட்டன. தன்னை எதிர்த்துப் போரிட்ட மூத்த பன்றியை இஷ்டவாகு கொன்றான். ஆனால் பெண் பன்றியை அவன் கொல்லாது விட்டு விட்டான்.

**அ**தைக் கண்ட இஷ்டவாகுவின் மனைவியான சுதேவா, "ஏன் அந்தப் பெண் பன்றியைக் கொல்லாது விட்டீர்கள்" என்று கேட்டாள்.


**பெ**ண்களை மட்டுமல்ல சிற்றுயிர்களானாலும் பெண்ணைக் கொல்வது நீங்காத பாவத்தைத் தரும். பெண்ணைக் கொல்பவர்கள் நரகத்தில் இருந்து மீள முடியாது" என்றான்.

**ம**ன்னனான இஷ்டவாகு பெண் பன்றியைக் கொல்லாமல் விட்டதும் அது வீரர்களைத் தாண்டிச் சென்ற போது ஜார்ஜ்கன் என்ற தீய போர்வீரன் தனது கூரிய வாளால் பெண் பன்றியை வெட்டினான். அது காயப்பட்டதே தவிர இறக்கவில்லை வேதனையால் கத்தியபடி படுத்திருந்தது.

**பெ**ண் பன்றி வேதனையால் துடி துடித்து அலறுவதைக் கண்ட மகாராணி சுவேதா அதன் மீது இரக்கப்பட்டு அதன் உடலில் இருந்து வழியும் குருதியைத் துடைத்துவிட்டு அதற்குத் தண்ணீர் பருக்கினாள். அதனால் மகிழ்வடைந்த பெண் பன்றி, "மிக்க நன்றி மகாராணி. முற்பிறப்பில் நான் செய்த பாவங்களால்தான் நான் பன்றியாகப் பிறந்தேன். இப்போது போரில் போர் வீரரோடு மோதி வீரமரணமடைந்தேன். இப்பொழுது நான் செய்த பாவங்கள் யாவும் நீங்கிவிட்டன மகாராணி. நீங்கள் ஒரு புண்ணியவதி. அத்துடன் ஒரு பெரும் அதிஷ்டசாலி" என்று கூறியது.

**ப**ன்றி பேசியதைக் கேட்ட மகாராணி சுவேதா வியப்பில் ஆழ்ந்தாள். "நீ பன்றியல்ல உனக்கும் எனக்கும் முற்பிறப்புத் தொடர்பு ஒன்று இருப்பதாக நான் நினைக்கிறேன். அதனால் நீ யார்? உனது கணவன் யார்? அதை எனக்குக் கூறு" என்றாள். பெண் பன்றி தம் கதையை மகாராணிக்குக் கூறத்தொடங்கியது.

## ஆண் பன்றியின் கதை



"**ம**காராணி, எனது கணவன் ஒரு காந்தர்வன். அவரது பெயர் ரங்கவித்தியரதரன். அவர் ஒரு சிறந்த பாடகர். இந்திரனது சபையில் அடிக்கடி தேவர்களுக்குப் பாடிக் காட்டுவார். அவரது பாடலை விரும்பாத தேவர்களே இல்லை. பொழுதுபோகாத சமயங்களில் இந்திரன் அவரை அழைத்துப் பாடச் சொல்வான். அந்தளவில் அவர் மிகமிக இனிமையாகப் பாடுவார். ஒருநாள் அவர் சுமேரு மலையில் இருந்து இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தார். மிகவும் அழகான இடங்களைக் கண்டால் அவரைக் கட்டுப்படுத்தவே முடியாது. அவரது பாடலைக் கேட்க தேவர்கள் மட்டுமல்ல முனிவர்களும் விரும்புவார்கள். பறவைகள், மிருகங்கள் கூட அவரது பாடலை மெய்மறந்து கேட்கும்".

**பு**லஸ்திய முனிவர் தவம் செய்யுமிடத்தில் அவர் இருந்து இனிமையாகப் பாடியமையால் முனிவருக்குக் கோபம் வந்தது. அதனால் எனது கணவரை அழைத்து, "உனது பாடலின் இனிமை எனது தவத்தைக்குலைக்கிறது. மனது கட்டுப்பட மறுக்கிறது. அதனால் இங்கு பாடாது வேறோர் இடத்துக்குச் சென்று உனது விருப்பப்படி பாடி மகிழ். அத்துடன் உனது பாடலை விரும்புபவர்களையும் மகிழ்வி" என்று சொன்னார்.

"**மு**னிவர் மிகவும் அன்புடன் சொன்னதை எனது கணவர் கேட்கவில்லை. அவர், "தவம் செய்பவர்களின் மனம் பற்றற்று இருக்கும். பக்கத்தில் நடைப்பவை எதுவும் தெரியாது. பல

முனிவர்கள் தவம் செய்கையில் அவர்களைப் புற்று மூடிவிடும். சில மிருகங்கள் அது சுவர் என்று நினைத்துத் தமது உடலைத் தேய்க்கும். இவை எதுவும் தவஞ் செய்பவர்களைப் பாதிக்காது. அவை பாதித்தால் தவம் செய்பவரின் தவம் தவமாகாது. நீர் ஏதோ புதுமையாகத் தவஞ்செய்கிறீர் என்று சொல்ல புலஸ்திய முனிவர் மிகுந்த கோபத்துடன் வேறு இடத்திற்குத் தவம் செய்யச் சென்றுவிட்டார்".

**அ**ந்தளவில் எனது கணவர் திருந்தியிருக்க வேண்டும். ஒரு காந்தர்வன் எக்காரணங் கொண்டும் மனதால் கூட மற்றவர்களுக்குத் துன்பம் செய்யக் கூடாது என்று எண்ண வேண்டும். இவர் காரணமின்றி முனிவர் மீது கோபங் கொண்டதோடு அவர் பிரச்சினை வேண்டாம் என்று விலகிச் சென்றபோது அவரது நினைவை மனதைவிட்டு வெளியேற்றி இருக்க வேண்டும். ஆனால் எனது கணவர் வீணாகக் கர்வம் கொண்டு, புலஸ்திய முனிவர் எங்கு தவம் செய்கிறார் என்று தேடி அலைந்து அவர் தவம் செய்யுமிடத்தை பன்றியின் உருவில் சென்று கண்டுபிடித்துவிட்டு அவருக்குப் பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

**ஆ**ரம்பத்தில் தனது ஆச்சிரமத்துக்கு அருகில் பன்றி உருவில் சென்ற எனது கணவர் குழப்பம் செய்தபோது காட்டுப் பன்றிகளின் இயல்பு அதுவென்று நினைத்து முனிவர் அக்கறைப்படவில்லை. தொடர்ந்து அவர் தொல்லைகள் செய்தமையால் முனிவர் தனது ஞான திருஷ்டியால் பன்றி உருவில் வந்து தொல்லைகள் பலவும் கொடுப்பது காந்தர்வனான எனது கணவன் என்று தெரிந்து அவரைப் பன்றியாக அலையும் படி சபித்துவிட்டார்" என்று தனது கணவனின் வரலாற்றைக் கூறிய பெண் பன்றி பின்பு தனது வரலாற்றைக் கூறத்தொடங்கியது.

## பெண் பன்றியின் கதை



**ஸ்ரீ** புரத்தில் வசுதத்தர் என்றொர் அந்தணர் இருந்தார். அவரின் மகள் சுதேவா. வசுதத்தர் தனது மகளை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தார். மகளின் மீதுள்ள அளவற்ற அன்பால் தனது மகளுக்கு வீட்டோடு இருக்கக் கூடிய மாப்பிள்ளை ஒன்றைத் தேடினார். அவரது விருப்பத்தைப் பலர் ஏற்றுக் கொள்ளாததால் திருமணம் தள்ளிப் போய்க்கொண்டிருந்தது. அவரது மனைவி அவரை மகளுக்கு விரைவாகத் திருமணம் செய்து கொடுக்குமாறு வற்புறுத்திக்

கொண்டிருந்தாள். இருப்பினும் அவரது மனம் மகளைப் பிரிய விரும்பவில்லை. யாராவது ஓர் அந்தணன் வீட்டு மாப்பிள்ளையாக இருக்க விரும்புவான் என்று நினைத்துக் காத்திருந்தார்.

**நா**ட்கள் கடந்து கொண்டிருந்தனவே தவிரத் திருமணம் நடைபெறவில்லை. இறுதியாக சிவசர்மா என்ற பெற்றோர்கள் அற்ற ஓர் அநாதைக்குத் தனது மகளைத் திருமணம் செய்து வைத்தார். அவர்கள் மகிழ்வுடன் வாழவில்லை. சுதேவா தான் பெரும் பணக்காரி என்றும், சிவசர்மா யாருமற்ற ஏழையென்றும். அத்துடன் அநாதையென்றும் நினைத்துப் பெரும் வேதனையடைந்தாள். அதனால் அவள் தனது கணவனான சிவசர்மாவை ஒரு மனிதனாகக் கூட மதிக்கவில்லை. தனது பணத்திற்கும், தனது பேரழகிற்கும் அவன் பொருத்தமானவன் அல்ல என்று நினைத்துத் தனது கணவனுடன் தினமும் ஏதோ ஒருவகையில் பிரச்சினையைத் தொடங்கிச் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள்.

**பெ**ற்றோரும் உற்றார் உறவினரும் அவளுக்குப் புத்திமதிகள் கூறியபோதும் அவள் அதை ஏற்காது அவர்களை அவமதித்தாள். இதனால் உற்றாரும் உறவினர்களும் அவளை வெறுத்தனர்.

**ஆ**ரம்பத்தில் தனது மனைவி சுதேவா செல்லமாக வளர்ந்தமையால் வாழ்க்கை என்றால் என்னவென்று புரியாது குழந்தைப் பிள்ளைத்தனமாக நடக்கிறாள். காலப்போக்கில் திருந்தி தன்னை ஏற்றுக் கொள்வாள் என்று நினைத்த சிவசர்மா, காலம் கடந்தும் அவளின் மனம் மாற்றமடையாது விகாரப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்து, “இவள் கடைசிவரையும் திருந்தமாட்டாள்” என நினைத்து யாருக்கும் சொல்லாமல் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டான்.

**இ**தனால் மிக்க கோபங்கொண்ட வசுதத்தர் தனது மகளை வீட்டை விட்டுத் துரத்திவிட்டார். அவரது மனைவி வந்து தடுத்தபோது, “எனக்கு ஒரே ஒரு மகள் என்பதால் மிகவும் செல்லமாக வளர்த்துவிட்டேன். கல்லாணாலும் கணவன், புல்லாணாலும் புரிஷன் என்று நல்ல குலத்தில் பிறந்த பெண்கள் நினைப்பார்கள். அல்லது இதுதான் விதியென்று எல்லாவற்றையும் சகித்துக் கொள்வார்கள். நான் அவளின் மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாகத்தான் வீட்டோடு இருக்கக் கூடிய மாப்பிள்ளையைத் தேடினேன். அது பற்றிப் பலமுறை எடுத்துச் சொல்லியும் அவள் புரியாது தான் நினைத்தபடி வாழ விரும்புகிறாள். ஒரு பெண் குழந்தையை ஐந்து வயது வரை பெற்றோர் செல்லமாக வளர்க்க வேண்டும். எட்டு வயது வரை பெற்றோருடன் வாழ வேண்டும். பின் திருமணமானதும் கணவனுடன் பிரியமாக வாழ வேண்டும். அதன்பின் பெற்றோரின் வீட்டில் இருக்கக் கூடாதென்றும் பெரியவர்கள் கூறுவார்கள்” என்று சொல்லிவிட்டு உக்கிரசேனரது கதையைப் பெண்பன்றி சொன்னது.

## உக்கிரசேனனின் வரலாறு



**ம**துரை மாநகரை உக்கிரசேனன் என்ற மன்னன் நீதிநெறி தவறாது ஆண்டுவந்தான். அவனது வீரத்தையும், புகழையும் அறிந்து மகிழ்ந்த விதர்ப்ப நாட்டு மன்னனான சத்தியகேது தனது மகளான பத்மாவதியை உக்கிரசேனனுக்குத் திருமணம் செய்துவைத்தான். பத்மாவதி பேரழகி. அவளை பல தேசத்து மன்னர்கள் விரும்பியபோதும் சத்தியகேது தனது மனம் கவர்ந்த உக்கிரசேனனுக்குத் தனது மகளைத் திருமணம் செய்துவைத்தான் பத்மாவதி மிகுந்த அழகுடையவளாக இருந்ததால் உக்கிரசேனன் அவளைத் தனது உயிரினும் மேலானவளாகக் கருதினான், பத்மா கர்வம் மிக்கவள். அத்துடன் ஒரு பேரரசனின் மகள். அதனால் அவளிடம் செல்வச் செருக்கும். அழகானவள் என்ற திமிரும் காணப்பட்டது. அத்துடன் அவளது கணவனான உக்கிரசேனன் அவளைப் பிரிந்திருக்க மனமில்லாது எந்நேரமும் அவளுடனேயே பொழுதைக் கழிக்க விரும்பினான். இதுவும் பத்மாவதியின் திமிருக்குக் காரணமாக அமைந்தது. அவள் தனது கணவனைப் பெரிதாக நினைப்பதில்லை. ஆனால் உக்கிரசேனன் அவளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

**இ**ந்நிலையில் பத்மாவதியின் தந்தையான சத்தியகேது தனது மகளைத் தனது அரண்மனைக்கு அனுப்பி வைக்குமாறு உக்கிரசேனனுக்கு ஓலை அனுப்பினான். ஓலையைப் பெற்ற உக்கிரசேனன் துடிதுடித்துப் போனான். ஒரு கணம் கூடப் பிரிய மனமில்லாதிருந்த உக்கிரசேனன் மிகுந்த கவலையுடன் அவளது தந்தையின் அரண்மனைக்கு அனுப்பிவைத்தான். ஏற்கனவே செருக்குடன் இருந்த பத்மாவதி தனது கணவனின் நாட்டிற்குத் திரும்பிச் செல்லவிரும்பவில்லை.

**ச**த்தியகேதுவின் விதர்ப்ப நாட்டுக்கு அருகில் ஒரு பெரிய மலை இருந்தது. அழகான அந்த மலையைப் பார்த்து ரசிப்பதற்கு நாட்டுமக்கள் அங்கு செல்வர். இதை அறிந்த பத்மாவதி அந்த மலையில் அழகைக் காண ஒருநாள் அங்கு சென்றாள்.

**அ**ங்கு வந்து மலையின் அழகை ரசித்துக் கொண்டிருந்த குபேரனின் நண்பனான கோவலன் என்பவன் பேரழகுடன் ஒய்யாரமாக ஒரு பெண் பவனி வருவதைக் கண்டான். அவளது அழகு அவனைத் தடுமாற வைத்தது. இருந்த போதும் அவள் உக்கிரசேனனின் மனைவி பத்மாவதி என்று வீரர்கள் மூலம் அறிந்து கொண்டான். மாற்றானின் மனைவியானாலும் அவளைத் திருமணம் செய்ய விரும்பினான். ஆனால் அவள் அதற்கு

ஒப்புக்கொள்ள மாட்டாள் என்று அறிந்து அவளுடன் கூடி இன்பம் அனுபவித்தேயாக வேண்டும் என்று எண்ணினான். பின் அவளது கணவனான உக்கிரசேனனின் வடிவை எடுத்து மலையில் இருந்து பாயும் ஓர் அருவிக் கரையில் இருந்து இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தான். பாடலின் மூலம் அவளைக் கவரலாம் என்று எண்ணினான்.

**அ**வனது எண்ணம் நிறைவேறியது. பத்மாவதி அந்த இனிமையான பாடல் பாடும் இடத்தை நோக்கிச் சென்றாள். அங்கே அவளது கணவன் மிகமிக இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தான். தனது கணவன் இவ்வளவு இனிமையாகப் பாடுவதை அறியாத அவள் அவனருகே சென்றாள். இனிமையாகப் பாடிய உக்கிரசேனனின் அருகில் நாணத்துடன் அமர்ந்தாள்.

**இ**ருவரும் பேசி மகிழ்ந்தனர். பின் கூடிக்குலாவி மகிழ்ந்தனர். சில நாட்களின் பின் பத்மாவதி தன்னுடன் கூடிக்குலாவி இன்பம் அனுபவிப்பவன் தனது கணவன் அல்ல என உணர்ந்து அவனை யார் என்று கேட்டு விசாரித்தாள். உண்மையைக் கூறும் நேரம் வந்ததால் கோவலன் தன்னைப் பற்றிக் கூறினான். அதன்பின் அவளது அழகை வர்ணித்தான். பேரழகுமிக்க அவளின் தோற்றம் தன்னைக் கவர்ந்ததால்தான் தான் அவ்வாறு நடந்து கொண்டேன் என்றும் கூறினான். நீ உனது கணவனுடன் முரண்பட்டுப் பிரிந்து வந்தமையால் தான் இந்தநிலையேற்பட்டது. பெண்கள் ஒருபோதும் தனது கணவன்மாரை விட்டுப் பிரிந்து தனித்து வாழக் கூடாது" என்று கூறிவிட்டு மறைந்துவிட்டான்.

**ப**த்மாவதிக்குப் பெரும் வேதனையாக இருந்தது. அடுத்து என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை. கலக்கத்துடன் தனது கணவனான உக்கிரசேனனிடம் சென்றபோது அவன் மிக்க மகிழ்வுடன் அவளை வரவேற்று முன்புபோல அவளை விரும்பினான். சில நாட்கள் கழிய அவளுக்கோர் ஆண் குழந்தை பிறந்தது அது தனக்குப் பிறக்கவில்லை என்று பலருக்கும் தெரிந்துவிட்டது. அதனால் உக்கிரசேனன் பத்மாவதியை அவளது தந்தையிடம் அனுப்பிவைத்தான்.

**இ**ந்தக் கதையைக் கேட்ட வசுதத்தனின் மனைவி தனது மகளான சுவேதாவை கணவனின் வீட்டுக்குத் திருப்பி அனுப்பினாள். கணவனால் கைவிடப்பட்ட அவளை அனைவரும் வெறுத்தனர்.

## மீண்டும் பெண் பன்றி



**ப**ல நாடுகளுக்கும் சென்று அலைந்து திரிந்த சுதேவா சௌராஷ்டிராவில் உள்ள வனஷ்தலா என்ற ஊரை அடைந்தாள். அவள் பிச்சா பாத்திரம் ஏந்தி வீடுகள் தோறும் சென்று பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தாள். சில வீட்டுக்காரர் அவளின் அழுக்கான தோற்றத்தைக் கண்டு வெறுத்தனர். பலர் அவள் வீட்டுள் வருமுன்பே ஏதாவது கொடுத்து அனுப்பினர்.

**ஒ**ருநாள் அவள் ஒரு வீட்டுக்குப் பிச்சை கேட்பதற்காகச் சென்றபோது அவ்வீட்டுக்காரன் தனது மனைவியான மங்களாவை அழைத்து, "யாரோ, உணவு கேட்டு வந்துள்ளார்கள் அவர்களுக்கு வேண்டிய உணவைக் கொடு" என்று கூறினான்.

**ம**ங்களா சுதேவாக்கு நல்ல சுவையான உணவு வகைகளைக் கொடுத்தாள். அதை அவள் மிகவும் அவசரப்பட்டு உண்டாள். அவளது அலங்கோலமான தோற்றத்தைக் கண்டு இரங்கிய மங்களா, "பெண்ணே, நீ யார்? நீ எங்கே இருக்கிறாய். உனக்கேன் இந்தக் கொடிய நிலை உருவானது" என்று கேட்டாள்.

"**ம**ங்களா, உணவு கேட்டு வந்தவருக்கு உணவு கொடுத்துவிட்டாயா?" என்று அவளது கணவன் கேட்டான்.

**இ**ரண்டாவது முறை அவ் இல்லத் தலைவனின் குரலைக் கேட்ட சுதேவா அது தனது கணவனின் குரல் என்று தெரிந்து கொண்டாள். அதனால் அவளுக்கு வெட்கம் ஏற்பட்டது. தனது அறியாமையால் தனது கணவனை வெறுத்து ஒதுக்கியதை எண்ணி அவள் மிகுந்த கவலை கொண்டாள். அவளை அறியாது அவளது கண்கள் கலங்கின.

**அ**தைக் கண்ட மங்களா வியப்புடன் அவளைப் பார்த்து, "இப்போது என்ன நடந்தது என்று கவலைப்பட்டு அழுகிறாய். ஒருவர் காரணமின்றி அழமாட்டார். அதனால் நீ அழுததற்கான காரணம் ஒன்றுள்ளது அதை மறைக்காமல் எனக்குச் சொன்னாயேயானால் அக்குறையைத் தீர்த்து வைப்பேன்" என்றாள்.

**சு**தேவாவால் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தந்தை தேடித் தந்த கணவனை ஆணவத்தால் வெறுத்து ஒதுக்கிய எனக்குக் கடவுள் தகுந்த தண்டனையைக் கொடுத்துள்ளார் என எண்ணியபோது அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"**யோ**சிப்பதால் பயன் இல்லை. நீ எதையும் மறைக்காமல் என்னிடம் சொன்னால் நான் உனக்கு உதவி செய்வேன். என்னைப் போன்ற ஒரு பெண் வீட்டுக்கு வீடு சென்று யாசிப்பதைத் தான் விரும்பவில்லை. ஒரு பெண் உற்றார் உறவினர் இன்றி யாசிப்பதைப் பார்ப்பவர்கள் பாவிகள். அவர்கள் அப் பெண்ணுக்கு உதவாவிட்டால் நரகத்தை அடைவார்கள் என்று வேதங்கள் கூறுகின்றன. அதனால் தயங்காது சொல்" என்றாள் மங்களா.

**ம**ங்களா வற்புறுத்தியதால் சுதேவா அவளது கணவன் தான் தனது கணவன் என்று சொன்னாள்.

**ஆ**ச்சரியமடைந்த மங்களா, தனது கணவனிடம் சென்று அந்த யாசகி கூறியவற்றைக் கூற அவளது கணவன்தான் தான் என்று கூறினான். பின்பு, "அவள் என்னைத் தேடித்தான் வந்திருக்கிறாள். அதனால் அவளுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்" என்று கூறினான்.

**தா**ன் பல கொடுமைகள் செய்தும், தன்னை நல்ல முறையில் கவனிக்கச் சொன்ன தனது கணவனின் நற்பண்புகளை உணராதுவிட்டமைக்காக வருந்தி சுதேவா, மங்களா தன்னை யாரென்று தெரிந்தும் தான் தனது கணவனுக்குச் செய்த கொடுமைகளை மறந்து தனக்குதவியதை எண்ணி மகிழ்ந்தவாறு இறந்து போனாள்.

**சு**தேவா இறந்ததும் அவளை அழைத்துச் சென்ற யமதூதர்கள் அவளை யமன் முன் நிறுத்தினர். யமனின் கட்டளைப்படி நரகத்தில் அவள் அடைக்கப்பட்டு நரகவேதனையை அனுபவித்த பின்பு பல பிறவிகளில் அவள் பூச்சி, புழுக்கள், விலங்குகளாகப் பிறந்து பெரும் வேதனைகளை அனுபவித்த பின் ஒரு பெண்ணாகப் பிறந்தாள்" என்று பெண் பன்றி தனது கதையைக் கூறி முடித்துவிட்டு, "மகாராணி நீங்கள் புண்ணியவதி. பாவம் செய்யாதவள். உயிர்கள் மீது இரக்கமும் அன்பும் கொண்டவள். அதனால் என்னை நற்கதியடைய வைக்க உங்களால் முடியும். செய்யக்கூடாத பாவங்களையெல்லாம் செய்து பெரும் வேதனைகளை அடைந்துவிட்டேன். எனக்கு உதவுங்கள்" என்று பெண் பன்றி இரந்தது.

**அ**தைக் கேட்டு மிக்க வேதனை அடைந்த மகாராணி, "கவலைப்படாதே நான் ஒரு வருடம் செய்த புண்ணியங்களின் பலனை உனக்குத் தருகிறேன்" என்று கூறி அதன் தலையில் தனது கையை வைத்து மகாவிஷ்ணுவை வேண்டினாள். மகாவிஷ்ணுவின் பக்தையான மகாராணியின் விருப்பத்தை மகாவிஷ்ணு பூர்த்தி செய்தார். அப்போது குற்றுயிராகக் கிடந்து முனகிக் கொண்டிருந்த அந்தப் பெண் பன்றி ஓர் அழகிய தேவதையாக

மாறியது. அப்போது விண்ணில் இருந்து ஒரு விமானம் தரையிறங்கியது. மகாராணிக்கு நன்றி கூறிய அத்தேவதை விமானத்தில் ஏறிச் சொர்க்கம் சென்றது.

## மீண்டும் சுகலை



**த**னது கணவன் தனக்குத் தெரியாது தீர்த்தயாத்திரைக்குச் சென்றதால் மிக்க கவலையடைந்த சுகலை மகாவிஷ்ணுவை நினைத்து விரதமிருந்தாள். உணவை ஒருவேளை மட்டுமே உண்டாள். அவள் உண்ணும் உணவுகள் சாத்வீகமானவை. அதனால் அவளது மனதின் பலம் அதிகரித்ததே தவிர உடல் மெலியவில்லை. தனது கணவனின் நினைவைத் தவிர வெறெந்த நினைவுகளும் அவளது மனதில் இருக்கவில்லை. அதனால் அவளது மனம் உலகப் பற்றுக்களால் பாதிக்கப்படவில்லை. உடலின் உறுதி குறைவடைந்த போதும் அவள் சத்தான உணவு வகைகளை உண்ணவில்லை. மகாவிஷ்ணுவுடன் பேசுவாள். அவரை அவள் கண்டதில்லை. புராணங்களில் அவரது உருவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதாலும், கோவில்களில் கண்டதாலும் அவள் அந்த உருவை தினமும் நினைத்ததால் அவளது மனதில் மகாவிஷ்ணுவின் உருவம் சிலைபோல் பதிந்துவிட்டது. அதனால் அவள் மகாவிஷ்ணுவோடு பேசிக்கொண்டிருப்பாள்.

**அ**வளின் தவத்தை ஒத்த விரத்தைக் கண்ட மக்கள் வியப்படைந்தனர். அவ்வாறு ஒருவரால் விரதமிருக்க முடியாது என்று சொல்லிப் புகழ்ந்தனர். முதலில் அவளின் புகழ் அவள் இருந்த அந்தச் சிறிய கிராமத்தில் பரவியது. பின் அது பட்டணம் வரை பரவியது. அதன்பின் நாடு முழுவதும் பரவியது. அவளது விரதத்தை நாடே புகழ்ந்தது.

**மே**லும் சில நாட்களின் பின் தேவர்களின் தலைவனான இந்திரன் அவளது விரதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அவளைத் தரிசிக்க விரும்பினான். இந்திரன் சுகலையைச் சந்தித்த போது ஓர் உத்தமமான மனைவி தனது கணவனை எவ்வாறெல்லாம் மதித்துப் போற்ற வேண்டும் என்று விபரமாகச் சொன்னாள். அதைக்கேட்ட இந்திரன் மகிழ்ந்து, “உனது கணவன் விரைவில் வீடு திரும்பி வந்து உன்னை மகிழ்விப்பான்” என்று கூறிச் சென்றான்.

**இ**ந்திரன் சுகலையைச் சந்தித்து அவளை வாழ்த்தி மேன்னைப்படுத்திய சில நாட்களில் அவளது கணவனான கிரிகலன் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்ட சுகலை தான் வணங்கும் மகாவிஷ்ணுவாக அவனைக் கருதினாள். அப்போது ஓர் அசரீதி வானில் இருந்து எழுந்தது, “கிரிகலனே, நீ உத்தமமான பத்தினியாகிய உனது மனைவியான சுகலையை

விட்டு விட்டுத் தீர்த்தயாத்திரை செய்ததால் எந்தவிதமான பலனும் கிடைக்காது. ஒரு ஆண் தனது மனைவியுடன் தான் தீர்த்த யாத்திரைக்குச் செல்ல வேண்டும். அப்படிச் சென்றால் தான் தேவர்கள் மகிழ்ந்து அவர்கள் விரும்பியவற்றை அருள்வார்கள். உத்தமமான மனைவி வசிக்கும் வீடு புனிதத்தலங்களை விட மேலானது. உயர்ந்தது, சிறந்தது. அதனால் இனிமேல் நீ அந்தத் தவறைச் செய்யாதே. உனது இனத்தவர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்களுக்கும் இதைக் கூறு" என்றது.

**அ**தைக்கேட்ட கிரிகலன் தனது தவறை உணர்ந்து கொண்டான். அவன் மிக்க மகிழ்வுடன் அவளின் அருகே சென்றபோது அவள் அவனைத் தழுவினாள். இனம்புரியாத ஓர் இன்ப உணர்வு அவனது உடலெங்கும் சிலிர்த்துப் பரவியது.

**அ**ப்பொழுது அங்கே இந்திரன் தனது சுயரூபத்துடன் வந்து சொன்னான், "சுகலை உத்தமி. கற்புக்கரசி. கணவனின் மீது மட்டற்ற பேரன்பு கொண்டவள். இவள் தனது கணவன் மீது வைத்த பக்தி பூமியைக் கடந்து தேவலோகத்திலும் பரவியது. இவ்வளவு கணவன் மீது பற்றுள்ள பெண்ணா என நான் வியந்து ஒருமுறை மாறுவேடமிட்டு வந்து சந்தித்துச் சோதனை செய்தேன். நான் ஓர் அழகான வாலிபனாக மாறி இவளைத் திருமணம் செய்வதாகக் கூறி கணகற்ற வெகுமதியாகப் பொன்னும் மணியும் மணிக்கமும் வைடூரியமும் கொடுத்தேன். இவளது மனம் மாறவில்லை. நான் கொடுத்த பொருட்களை அவள் தொடக்கூட இல்லை. எவ்வளவோ தென்டித்தும் அவள் மனம் மாறவில்லை. நான் தோற்றுப்போய்விட்டேன் அதனால் நான் யார் என்பதை அவளுக்குக் காட்டி வாழ்த்தி ஆசி வழங்கிவிட்டுச் சென்றேன். இப்பொழுது நீ விரும்பிய வரத்தைக்கேள்" என்றான் இந்திரன்.

**சு**கலை திகைத்துப் போனாள். தான் தனது கணவன் மீது வைத்த உறுதியான அன்பால் தேவேந்திரனே அதைக் கேள்விப்பட்டுத் தன்னைக் காண வந்திருப்பதை எண்ணி மகிழ்ந்த அவள், "தேவர்களின் தலைவரே, நாம் தருமநெறியில் இருந்து ஒருபோதும் வழுவக் கூடாது. அத்துடன் கடவுள் மீதும், ரிஷிகள் மீதும் மாறாத பக்தியுடன் வாழவேண்டும். இவற்றை அருளுங்கள்" என்று வணங்கினாள்.

**தே**வேந்திரன் அவள் கேட்ட வரத்தை அளித்து விட்டு மறைந்தான். அவள் தவமிருந்த இடத்திற்கு 'நரி தீர்த்தம்' என்ற பெயர் ஏற்பட்டது.

## 8. பிப்பலன்



**கா**சியப முனிவருக்கு பிப்பலன் என்றொரு மகன் இருந்தான். அவன் மிக்க மனவலிமை உடையவன். அவன் ஓராயிரம் ஆண்டுகள் தொடர்ந்து எந்தத் தடைகளும் வராமல் தவம் செய்தான். அதன் பின்பும் அவன் தவம் செய்வதைக் கைவிடவில்லை. அதனால் மிக்க மகிழ்வடைந்த தேவர்கள் ஆகாயத்தில் இருந்து பூமாரி பொழிந்தனர். பின் அவனது தவத்தை மெச்சி, "உனக்கு என்ன வரம் வேண்டுமோ அதைக் கேள்" என்றனர். அதற்கு அவன் உலகில் உள்ள அனைத்தும் நான் சொல்வதைக் கேட்டு, சொன்னபடி வாழவேண்டும்" என்று கேட்கத் தேவர்கள் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தனர்.

**மி**க்க மகிழ்ச்சியடைந்த பிப்பலன் நடந்து சென்று ஒரு குளத்தின் அருகே அமர்ந்து தான் பெற்ற வரத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தான். தேவர்கள் கூட அவன் முன் வந்து கைகட்டி நிற்க அவன் அவர்கள் எதையெதைச் செய்ய வேண்டும் என்று கூற அவன் அதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி கொண்டு பலமாகச் சிரித்தான். அவனது மகிழ்வான சிரிப்பு அடங்கவில்லை தொடர்ந்து சிரிந்துக் கொண்டிருந்தான். தன்னைவிடப் பாக்கியசாலி உலகில் யாரும் இல்லை என்ற கர்வம் மனதில் தோன்றியது.

**அ**ப்போது குளக்கரையில் நின்ற ஒரு மரத்தின் மீது கொக்கு ஒன்று பறந்து வந்து இருந்தது. பின் அது அவனுக்கருகில் வந்து சொன்னது, "பிப்பலா, இப்போது ஏன் சிரிக்கிறாய். இவ்வாறு சிரிப்பதற்குக் காரணம் என்ன? தவம் செய்து மூவாயிரம் ஆண்டுகளை வீணாகக் கழித்துவிட்டாய். உனக்குத் தேவையில்லாத ஒரு செயல்" என்றது.

**கொ**க்குப் பேசியதை ஆச்சரியத்துடன் கேட்ட பிப்பிலன் அது கொக்கல்ல வேறு யாரோ ஒரு தேவர் என்று முடிவெடுத்தான். பின், "கொக்குருவில் வந்திருக்கும் நீ யார்? மும் மூர்த்திகளில் ஒருவரா. இல்லை இந்திரனா" என்று கேட்டான்.

"**பி**ப்பிலா, இது பற்றி நீ விபரமாக அறிய வேண்டும் என்று விரும்பினால் சுதர்மனிடம் கேட்டுத் தெரிந்து கொள்" என்று கூறிவிட்டுப் பறந்து சென்றுவிட்டது.

## சுதர்மன்



**கு**த்தலன் என்றோர் அந்தணனன் வாழ்ந்து வந்தான். அவன் சகல சாஸ்திரங்களையும் கற்று பெரும் கல்விமானாகத் திகழ்ந்தான். அவனது மகன் தான் சுதர்மன். குத்தலன் சுதர்மனுக்குக் கற்பிக்க வேண்டியவற்றையெல்லாம் கற்பிக்கவில்லை. அதனால் சுதர்மன் உயிர்கள் மீது மிக்க இரக்கமுள்ளவனாகவும், வேதங்கள் மீது அதீத பற்றுக் கொண்டவனாகவும் இருந்தான். அத்துடன் அவன் தனது வாழ்நாள் முழுவதையும் பெற்றோருக்குத் தொண்டாற்றுவதையே முக்கியகுறிக்கோளாக எண்ணித் தனது பெற்றோருக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் தவறாது செய்து கொண்டிருந்தான்.

**பி**ப்பலன், கொக்கு சொன்ன பின்பு அக் கொக்கு யார்? ஏன் அவ்வாறு சொன்னது? அதற்கான காரணம் என்ன என்று யோசித்துப் பார்த்தான். அவனுக்கு எதுவும் புரியவில்லை. அதனால் தான் பல ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தது வீணானது என்று கொக்குச் சொன்னது சரி என்று நினைத்து மிக்க கவலையுடன் சுதர்மனைத் தேடிச் சென்றான்.

**பி**ப்பலன் சுதர்மனின் வீட்டுக்குச் சென்ற போது சுதர்மன் தனது முதிய பெற்றோருக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் பிப்பலனைக் கண்டதும் அவன் யார்? அவன் எதற்காக வந்திருக்கிறான் என்பதைத் தனது ஞான சிருஷ்டியால் உணர்ந்து கொண்டான். பின் மகிழ்வுடன் அவனை ஆசனத்தில் அமர்த்திவிட்டு, "பெரியவரே, சற்றுப் பொறுத்திருங்கள். எனது பெற்றோரின் கடமைகளை முடித்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று தனது பெற்றோரின் கடமைகளை முடித்துவிட்டு வந்து சுதர்மனை வணங்கி, "தாங்கள் வந்த விசயத்தைச் சொல்லுங்கள்" என்றான்.

**பி**ப்பலன், சுதர்மனை வணங்கினான். பின், "பெரியவரே, நான் பல ஆண்டு காலம் எந்தவிதமான தடைகளுமின்றித் தவம் செய்து நான் விரும்பிய வரங்களைக் கேட்டுப் பெற்ற பின்பு ஒரு குளக்கரையில் ஓய்வாக இருந்து நான் பெற்ற வரங்களின் சிறப்பைப் பற்றி நினைத்து, மகிழ்ந்து கொண்டிருக்கையில் வானில் இருந்து பறந்து வந்த ஒரு கொக்கு, "நீ தவம் செய்து காலத்தை வீணாக்கி விட்டாய். நீ செய்த தவத்தால் எந்தப் பயனையும் அடையமாட்டாய்" என்று கூறியது.

"**ஒ**ரு பறவை நான் செய்த தவத்தை எப்படி அறிந்தது. அத்துடன் நான் பெற்ற வரத்தால் எந்தப் பயனையும் அடைய முடியாதென்றும் கூறியது. அவ்வாறு கொக்குக் கதைத்தது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. அதனால் நீ உண்மையான பறவை அல்ல.

மும்மூர்த்திகளில் ஒருவரா அல்லது தேவர்களா" என்று கேட்டேன். அதற்கு அக் கொக்கு, "நீ இதைப்பற்றி விரிவாக அறிய வேண்டும் என்று விரும்பினால் சுதர்மன் என்பவனைச் சந்தித்துக் கேள்" என்றது. "அதனால்தான் நான் தங்களைத் தேடி வந்தேன். உண்மையில் யார் அந்தக் கொக்கு என அறிய விரும்புகிறேன்" என்று சுதர்மனை வணங்கினான் பிப்பலன்.

**பி**ப்பலா கொக்கின் உருவில் வந்தது மும்மூர்த்திகள் அல்ல. தேவர்களுமல்ல. அது பிரம்மம் என்றான் சுதர்மன்.

"**பெ**ரியவரே, உலகில் நடப்பவை எல்லாவற்றையும் தாங்கள் அறிந்து வைத்துள்ளீர்கள். கொக்கு வடிவில் வந்தது பிரம்மம் என்றுகூறுகிறீர்கள். அதை நான் நம்புகிறேன். தங்களின் தவத்தின் மேன்மையைப் பாராட்டுகிறேன். உலகில் நடப்பவை அனைத்தையும் தங்களால் அறிய முடியுமா…? அத்துடன் அவற்றைத் தங்களால் கட்டுப்படுத்த முடியுமா…?" என்று பிப்பலன் கேட்டான்.

"**அ**வற்றை நான் சொல்வதால் எதுவும் நடவாது. நான் சொன்னவை நடைபெறுமா. நடைபெறாதா என்ற சந்தேகம் உனக்கு ஏற்படலாம். அதனால் நீயே அவற்றை நேரில் பார்த்து அறிந்து கொள். நேரில் பார்த்தால் தான் உனது சந்தேகங்கள் நீங்கும்" என்று சுதர்மன் கூறினான்.

**சு**தர்மன் தனது கண்களை மூடிவிட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பின்பு, "நான் இப்போது தேவர்கள் என் முன்னே வருமாறு அழைத்துள்ளேன். அவர்கள் சில கணங்களில் இங்கு வந்து சேர்வார்கள்" என்று சுதர்மன் கூறிக்கொண்டிருக்கையில் இந்திரன் தனது வாகனமான ஐராவதத்தில் வான வீதியூடாக வந்து அவனின் முன் நின்றான். இந்திரனுக்குப் பின்னால் அனைத்துத் தேவர்களும் மகிழ்வுடன் சுதர்மனை வணங்கியவாறு நின்றன.

"**சு**தர்மா, நீ அழைத்ததை எண்ணி நாம் மிக்க மகிழ்வடைந்தோம். பல வருடங்கள் தவம் செய்து பெரும் பயனைப் பெறுவதைவிடத் தமது பெற்றோர்களுக்குக் கடமை செய்து அவர்களை மகிழ்விப்பது தான் சிறப்பானது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது உலகினர்க்குத் தெரிந்தும், அவர்கள் பெற்றோரின் கடமைகளைச் செய்வதைவிடத் தவம் செய்வது தான் மேலானது என்று எண்ணுகின்றனர். அந்த வகையில் நீ தவம் செய்யாது சாத்திரங்களைக் கற்காது உனது பெற்றோருக்குக் கடமை செய்து தவப்பயனை விடப் பெரும் பயனைப் பெற்றுவிட்டாய். அதற்காக நான் உன்னை வாழ்த்துகிறேன். உனக்கு எந்த ஒரு குறையும் நேராது. அப்படியிருக்க என்ன காரணத்திற்காக எம்மை அழைத்தாய். நீ நினைத்தால் நினைத்தவுடன் யாவும் நடைபெறும் என்று தெரிந்தபின்பு எம்மை அழைத்தது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது" என்றான் இந்திரன்.

“**தே**வேந்திரா, நான் அழைத்தவுடன் தேவர்கள் அனைவருடனும் வந்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். எனக்கு அருகில் இருப்பவர் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தவம் செய்தவர். அவருக்கு எனது சக்தியைக் காட்டவே தங்களை அழைத்தேன்” என்றான் சுதர்மன். தேவர்கள் மிக்க மகிழ்வுடன் அவனை வாழ்த்திவிட்டுச் சென்றனர்.

**தே**வர்கள் சென்றபின்பு பிப்பலன் வியப்புடன் சுதர்மனைப் பார்த்தான். சுதர்மனால் தனது கண்களை நம்பமுடியவில்லை. பிப்பிலனின் நிலையை உணர்ந்த சுதர்மன் சொன்னான், “இதில் வியப்படைவதற்குக் காரணங்கள் இல்லை. ஒருவன் பற்றுக்கள் இன்றி அர்ப்பணிப்புடன், தனது சக்தி முழுவதையும் திரட்டி ஒரு செயலைச் செய்தானேயானால், அச் செயல் அவனுக்குப் பெரும் பயனையும் புகழையும் கொடுக்கும். புவியில் பெறத்தக்க பேறுகள் எல்லாவற்றிலும் சிறந்தது புகழுடன் வாழ்வதாகும். எனது சக்திக்கும், பெருமைக்கும், புகழுக்கும் காரணமானது நான் எனது பெற்றோருக்குச் செய்யும் தொண்டுகளே. பெற்றோரின் மனம் மகிழ்ந்தால் இறைவனும் அதைக்கண்டு மகிழ்வார். தாய், தந்தை, குரு ஆகியோருக்கு அடுத்ததாகத் தான் எமது சமயம் தெய்வத்தை வைத்துள்ளது. எமக்கு உயிரும் உடலும் தந்த பெற்றோர் கண் கண்ட தெய்வங்கள் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. ஒருவனுக்கு தன்நம்பிக்கை வேண்டும். தன்னை நம்புபவன் அறிஞர்கள் சொன்ன வார்த்தைகளைத் தெய்வ வாக்காகக் கருதுவான்”.

**மூ**ச்சை விட்டு விட்டு மீண்டும் சுதர்மன் சொல்லத் தொடங்கினான், “நான் குரு குலத்திற்குச் சென்று கல்வி கற்கவில்லை. பெற்றோருக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்துவிட்டு எமது வீட்டிற்கு அருகில் இருக்கும் குரு குலத்திற்குச் சென்று யாருக்கும் தெரியாது மறைந்திருந்தேன். அப்போது குருவானவர் தமது மாணவர்களுக்குப் பெற்றோருக்குச் செய்யும் சேவைகள் பற்றிச் சொன்னார். அதைக் கவனமாகக் கேட்டுவிட்டு அதன்படி சேவை செய்யத் தொடங்கினேனே தவிர வேறு எதுவும் செய்யவில்லை. முக்கியமாகத் தவம் செய்யவில்லை. மந்திரங்களை உச்சரிக்கவில்லை. விரதங்கள் இருந்ததில்லை. யாகங்கள் செய்யவில்லை. தீர்த்த யாத்திரைக்கும் செல்லவில்லை. மகாவிஷ்ணுவையும் திருமகளையும் என் தந்தை வடிவிலும், தாய் வடிவிலும் கண்டு தரிசித்து மகிழ்ந்தேன். வேதங்களைக் கற்ற ஓர் அந்தணன் தாய் தந்தையரை தவிக்க விட்டு விட்டுத் தவம் செய்வதிலும் பார்க்க, அவர்களுடன் கூட இருந்து அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்தால் தவம் செய்வதால் வரும் பயனை விட அதிகமான பயன் கிடைக்கும். கடவுள் மிக்க மகிழ்வடைந்து பெற்றோரைப் பேணுபவனுக்கு வேண்டியவற்றை அருள்வார். இதுதான் எனது வாழ்வில் நடைபெறுகிறது. ஒரு தவசி மகாவிஷ்ணுவை நோக்கிப் பல காலம் தவம் செய்தால் தான் அவர் அவனுக்கு முன்தோன்றி அருள்வார். பலன் கருதாது பற்றற்று ஒருவன் எச் செயலைச் செய்தாலும் மகாவிஷ்ணு அவற்றை அறிந்து அவனைத் தரிசிக்க நேரில் வருவார். இதை நீ

இன்று உனது கண்களால் கண்டாய். இதைத் தவிர உனக்கு உபதேசிக்க கூடியவை எதுவும் இல்லை” என்றான் சுதர்மன்.

“**கு**ருவே, கொக்குச் சொன்னது உண்மை. நான் தவம் செய்து மூவாயிரம் ஆண்டுகளை வீணாக்கிவிட்டேன் என்று கொக்குச் சொன்ன போது அதை நம்பவில்லை. எனது தவத்தைத் திசை திருப்ப விரும்பிய யாரோ ஒருவர் தான் கொக்கு வடிவத்தில் வந்து அவற்றைச் சொன்னதாக நினைத்தேன். அந்த உண்மையை அறியத்தான் உங்களைத் தேடி வந்தேன். இப்பொழுது எனது சந்தேகம் தீர்ந்து விட்டது. நான் எனது பெற்றோருக்கரிய கடமைகளைச் செய்யாது அவர்களைப் பிரிந்து எனது நன்மைக்காகத் தவம் செய்யப் புறப்பட்டது பெரும் பிழையானது என்பதை நேரிற் கண்டு உணர்ந்து கொண்டேன். எனது பெற்றோரை நான் விட்டு விட்டு வந்தபின் அவர்கள் எவ்வளவு துன்பப்பட்டிருப்பர்” என்று கவலைப்பட்டான் பிப்பலன்.

“**பி**ப்பலா, தெரியாமல் செய்யும் குற்றங்கள் குற்றங்களாகாது. இதைச் செய்வது பாவம் என்று தெரிந்தும் வாலிப மிடுக்கால் அச் செயலைச் செய்து அதில் இன்பங் காண்பது தான் பாவம். நீ இவற்றையெல்லாம் தெரியாது செய்துள்ளாய். அதனால் கவலை கொள்ளாதே. நான் உனக்கு சந்திரகுல மன்னனான யயாதியின் கதையைக் கூறுகிறேன் கேள்” என்று கூறிய சுதர்மன் யயாதியின் கதையைக் கூறத் தொடங்கினான்.

“**பி**ப்பலா, சந்திரகுல மன்னனான யயாதிக்கு தேவயானி, சர்மிஷ்டை என்று இரு மனைவியர் இருந்தனர். அவனுக்கு நான்கு புத்திரர்கள் இருந்தனர். அவன் நீதி தவறாது நாட்டை ஆண்டு வந்தான். அதனால் அவனது நாட்டில் செல்வம் பெருகியது. நாட்டு மக்கள் அனைவரும் சகல வசதிகளுடனும் மிக்க மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். அதனால் யயாதியின் புகழ் தேவருலகிலும் பரவியது. மிக்க புகழுடன் வாழும் யயாதி மன்னனைக் காணத் தேவர்களின் தலைவனான இந்திரன் விரும்பினான். அதனால் தனது தேர்ச்சாரதியான மாலதியை அழைத்து, யயாதி மன்னனைத் தேவருலகிற்கு அழைத்து வருமாறு கூறினான்.

**தே**ர்ச்சாரதியான மாலதி யயாதி மன்னனைச் சந்தித்து, “சகல மதிப்பு மரியாதைகளுடனும் தங்களைத் தேவருலகத்திற்கு அழைத்து வருமாறு தேவேந்திரன் என்னை அனுப்பினார்” என்று கூறினான்.

**அ**தற்கு யயாதி மன்னன் மறுப்புத் தெரிவித்தான். எனக்குப் பூவுலகில் இன்னும் பல வேலைகள் உள்ளன. நான் இளம் பருவத்தினன். என்னை நம்பி எனது மனைவி மக்களும், நாட்டு மக்களும் இருக்கின்றனர். அவர்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகள் பல உள்ளன. அவற்றையெல்லாம் நல்லபடி முடித்துவிட்டு வருகிறேன்” என்று யயாதி மன்னன் கூற அதைக்கேட்ட இந்திரனின் தேர்ச்சாரதியான மாலதி, “தாங்கள் சொன்னவற்றை நான் எமது தலைவனான இந்திரனுக்குக் கூறுகிறேன்” என்று சொல்லி விடைபெற்றான்.

**ய**யாதி ஒரு பெரும் விஷ்ணு பக்தன். அதனால் அவன் நாடெங்கும் பல விஷ்ணுவின் கோவில்களைக் கட்டி ஆகம முறைப்படி பூசைகள் செய்யுமாறு பணித்தான். அத்துடன் மக்கள் அனைவரையும் கோவிலுக்குச் சென்று விஷ்ணுவை வழிபடும் படி கட்டளையிட்டான். மக்கள் அனைவரும் விஷ்ணுவின் கோவிலுக்குச் சென்று முறைப்படி வணங்கி வந்தனர். அதனால் மகிழ்ந்த விஷ்ணு அந்நாட்டு மக்கள் எந்தவிதமான குறைகளுமின்றி மகிழ்வுடன் வாழ அருள்புரிந்தார்.

**ய**யாதி நீதியாக நாட்டை ஆண்டமையாலும் மக்கள் காலம் தவறாமல் விஷ்ணுவின் கோவிலுக்குச் சென்று பக்தியுடன் வழிபட்டதாலும் அந்நாடு சொர்க்கபுரியாகத் திகழ்ந்தது.

**ய**யாதியின் வளர்ச்சியில் பொறாமை கொண்ட இந்திரன் அவனது நாட்டைக் கெடுக்குமாறு கூறிக் காதல் தெய்வமான மன்மதனை யயாதியின் நாட்டுக்கு அனுப்பிவைத்தான். மிகுந்த இளமைத்துடிப்புடன் நாட்டை ஆண்டு வந்த யயாதி மன்னன் முதுமையடைந்தான். அதனால் அவனது செயற்பாடுகளில் தளர்வு ஏற்பட்டது.

**ஒ**ருநாள் அவன் தனது வீரர்களுடன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். காடு முழுவதும் அவனும், அவனது வீரர்களும் அலைந்து தேடியும் மிருகங்கள் எதுவும் காணப்படவில்லை. களைப்பும், தாகமும், பசியும் யயாதியை வாட்ட அவன் நடந்து வந்தபோது ஒரு மானைக் கண்டான். அதை வேட்டையாட யயாதி துரத்தி வந்தபோது அது ஒரு குளத்தை அடைந்து அதன் கட்டு வழியாக வேகமாக ஓடியது. மானை வேட்டையாடத் துரத்தி வந்த யயாதி மன்னன் குளத்துள் பெரியதொரு தாமரை மலர் மலர்ந்திருப்பதைக் கண்டான். அதன்மேல் ஓர் அழகிய இள மங்கை அமர்ந்திருப்பதையும் கண்டு திகைப்படைந்தான்.

**யா**ருமில்லாத அந்த இருண்ட காட்டில் ஒரு அழகான குளத்தில் மலர்ந்திருந்த அழகிய தாமரை மலரின் மேல் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணின் அழகு அவனை மெய்மறக்கச் செய்து காம உணர்வுகளைத் தூண்டியது. உணர்ச்சிப் பெருக்குடன் அவளின் அருகே சென்று அவளைப் பார்த்தான். அப்போது அவளின் அழகு பல மடங்கு அதிகரித்திருப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது அவளை அவன் திருமணம் செய்ய விரும்பினான்.

“**பெ**ண்ணே, நீ யார்? யாருமில்லாத இந்தப் பயங்கரமான காட்டிற்கு எப்படி வந்தாய்? உனது பெயர் என்னவென்று நான் அறியலாமா?” என்று கேட்டான்.

“**நா**ன் ரதியின் மகள். எனது பெயர் அஷ்ருவிந்தமதி. தேவருலகில் இருந்து மாலைவேளைகளில் வந்து இவ் அழகிய காட்டின் பல பகுதிகளையும் ரசித்துப் பார்த்துவிட்டு

இக்குளத்தில் நீராடுவது எனது வழக்கம். இக் குளத்தில் நீராடுவது எனக்கு விருப்பமாகும்” என்றாள். அவளது குரலின் இனிமை யயாதியைப் பித்தனாக்கியது.

“**நா**ன் சந்திரகுல மன்னன் யயாதி. எனது நாடு சொர்க்கபுரியை விட வசதியானது. உன்னைக் கண்டவுடன் நான் எனது மனதை உன்னிடம் பறி கொடுத்துவிட்டேன். நீ விரும்பினால் நான் உன்னை மணக்கத் தயாராகவுள்ளேன்” என்றான்.

“**எ**வ்வளவுதான் புகழ் பெற்ற மன்னன் என்றாலும் அவன் இளைஞனாக இருந்தால் தான் பெண்கள் விரும்புவர். நீ முதியவனாக இருப்பதால் எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை. நான் ஓர் இளமைத்துடிப்புள்ள வாலிபனையே திருமணம் புரிய எண்ணுகிறேன். அதனால் நீ முதுமையை அகற்றி இளமையுடன் வந்தால் உன்னை நான் திருமணம் செய்யச் சம்மதிப்பேன்” என்றாள்.

**அ**தைக்கேட்டு வேதனையடைந்த யயாதி சிறிது நேரம் யோசித்துவிட்டு, “நீ நாளைக்குக் குளிக்க இந்த நீரோடைக்கு வரும்போது ஓர் இளைஞனாக உன்னிடம் வருவேன். அப்போது நீ ஏற்பாய்தானே” என்று கேட்டான்.

“**தே**வருலகே போற்றிப் புகழும் மன்னனான நீ இளைஞனாக வந்தால் கட்டாயம் ஏற்றுத் திருமணம் செய்வேன்” என்றாள். அதைக் கேட்ட யயாதி மன்னன் மிக்க மகிழ்வுடன் அவளிடமிருந்து விடைபெற்றான்.

**நா**டு திரும்பிய யயாதி மன்னன் தனது அமைச்சர்களை அழைத்து நடந்தவற்றைக் கூறி என்ன செய்யலாம் என்று கேட்டான். அதற்கு அவர்கள், “அரசே, தங்களுக்கு அறிவும், பலமும், வீரமும் பெற்ற நான்கு புத்திரர்கள் இருக்கின்றனர். அவர்களில் ஒருவன்தான் தனது இளமையை உங்களுக்குத் தந்துவிட்டு முதுமையை ஏற்க வேண்டும். வேறு யாரும் இதைச் செய்ய முடியாது. அதனால் உங்களின் புத்திரர்களில் ஒருவரிடம் சென்று தானமாக அவரது இளமையைக் கேளுங்கள்” என்றனர்.

**ய**யாதி மன்னன் மிக்க மகிழ்வுடன் தனது மூத்த புத்திரனிடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவனது இளமையைக் கேட்டான். அவன் அதைக் கேட்டுவிட்டுச் சொன்னான், “ஒன்றிற்கு இரண்டு மனைவிகளைத் திருமணம் செய்து இன்புற்ற நீங்கள் இல்லற சுகத்தை அறியாத என்னிடம் எனது இளமையைக் கேட்பது நீதிக்குப் புறம்பானது. அதனால் நான் எனது இளமையைத் தர மாட்டேன்” என்று மறுத்து நீதியாக நடந்து கொள்ளும்படி புத்திமதி சொன்னான்.

**ய**யாதி மன்னன் மூத்த மகனின் பதிலைக் கேட்டு மிக்க வேதனையடைந்து ஏனைய மக்களிடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவர்களது இளமையைத் தரும்படி இரந்தான். ஏனைய மக்கள் இருவரும் தமது இளமையைத் தரமாட்டோம் என்று மறுக்க யயாதி மன்னன் அவர்கள் மீது கடுங்கோபங் கொண்டு அவர்களைச் சபித்தான். தனது இராஜ்ஜியத்தில் அவர்களுக்கு உருத்து இல்லை என்று கூறித் தனது இளைய மகனான பூருவிடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவனது இளமையைக் கேட்க, பூரு மிகுந்த மகிழ்வுடன் தனது தந்தையின் முதுமையை ஏற்றுவிட்டுத் தனது இளமையைத் தந்தைக்குக் கொடுத்தான். அதனால் மகிழ்ந்த யயாதி மன்னன் பூருவை வாழ்த்திவிட்டு காட்டில் தான் கண்ட அழகியைத் தேடிச் சென்றான்.

**அ**வள் அந்தக் குளத்தில் மலர்ந்திருந்த தாமரைப் பூவின் மீது ஒய்யாரமாகப் படுத்திருந்தாள். அந்த நேரம் அவளின் அழகு அதிகரித்திருப்பதைப் போல யயாதிக்கு இருந்தது. பூரு என்ற அவரது இளைய மகன் துடிப்பான இளைஞன். பேரழகன். பெரும் வீரன். அவன் தனது இளமையைக் கொடுத்ததால் யயாதி மன்னன் மிகமிகக் கம்பீரமான இளைஞராக மாறியிருந்தான். யயாதி மன்னன் அஷ்ருவித்தமதிக்கு அருகே சென்று தான் இளமை பெற்ற வரலாற்றை மிகவும் விரிவாகக் கூற அவள் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாது சொன்னாள், "நீங்கள் நான் சொல்லும் இரண்டு நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் மட்டும் தான் நான் உங்களைத் திருமணம் செய்வேன்" என்றாள்.

**கா**ம மயக்கத்தில் இருந்த யயாதி மன்னன், "நிபந்தனைகளைச் சொல்" என்றான்.


"**மு**தலாவது நிபந்தனை நீங்கள் திருமணம் செய்திருக்கும் இரண்டு பெண்களையும் இன்று முதல் விட்டுவிடல் வேண்டும். அடுத்தது நான் எதைச் சொன்னாலும் மறுப்பின்றி அதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்".

**அ**வளின் மீது மோகங் கொண்டிருந்த யயாதி மன்னன் அவள் சொன்ன நிபந்தனைகள் இரண்டையும் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டான். இருவரும் திருமணம் செய்து பலகாலம் மிகுந்த இன்பத்துடன் வாழ்ந்து வந்தனர்.

**ஒ**ருநாள் அவள் சொன்னாள், "இப்போது நாம் வாழும் வாழ்க்கை எனக்கு வெறுத்து விட்டது. அதனால் நான் சொர்க்கத்திற்குச் செல்ல விரும்புகிறேன்" என்றாள். அவள் கேட்பதை மறுக்கமாட்டேன் என்று சொன்ன யயாதி தனது மகனான பூருவை அழைத்து அவன் கொடுத்த இளமையை அவனுக்குத் திரும்பிக் கொடுத்துவிட்டுத் தனது மனைவியான அஷ்ருவித்த மதியையும் அழைத்துக் கொண்டு சொர்க்கத்திற்குச் சென்றான்.

**பு**த்திரன் என்றால் பூருமாதிரி இருத்தல் வேண்டும். பெற்றோருக்குச் செய்யும் தொண்டைத் தவிர மேலான தொண்டு எதுவும் உலகில் இல்லை" என்று சுதர்மன் பிப்பிலனுக்குச் சொன்னான்.

## 9. சியவன ரிஷியும் கிளிக் குஞ்சுகளும்



**பி**ருகு முனிவரின் வழி வந்தவர் சியவன ரிஷி. அவர் யாத்திரைகள் பல மேற்கொண்டவர். யாத்திரை செய்வதன் மூலம் தலங்களைப் பற்றியும் அங்குள்ள தலவிருட்சம், தீர்த்தம் என்பவற்றின் பெருமைகளையும் அறிந்து கொள்ளலாம். அத்துடன் தலத்தின் மூலமூர்த்தி பெருமைகளையும், மகிமைகளையும் அவரின் வரலாற்றையும் அவர் செய்த அற்புதங்களையும் அறிந்து கொள்ளலாம் என்று பல திருக்கோவில்களுக்கும் தீர்த்த யாத்திரை செல்வார். நர்மதை, சரசுவதி, கோதாவரி ஆற்றங்கரையில் உள்ள திருக்கோவில்களுக்கும் அதன் அருகே இருக்கும் தீர்த்தங்களிலும் நீராடி அவற்றின் வரலாற்றையும் பெருமைகளையும் அறிந்த பின்பு நர்மதை ஆற்றின் தென்கரையில் உள்ள அமரகாண்டா என்ற இடத்தை அடைந்தார். பல திருக்கோவில்களுக்குத் தொடர்ச்சியாகத் தீர்த்த யாத்திரை சென்றமையால் அவர் மிகவும் கடுமையாகக் களைப்படைந்திருந்தார். யாத்திரை செய்தமையால் மிகுந்த களைப்படைந்த அவர் ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து களைப்பாறினார்.

**அ**து ஒரு பெரிய ஆலமரம் சூரியனின் கதிர்கள் உள்ளே நுளையாத வண்ணம் அதன் இலைகள் பரந்து செழித்திருந்தன. வெண்மண் பரப்பில் நின்ற அந்த ஆலமரத்தின் நிழல் சியவன ரிஷிக்கு இதமாக இருந்தது. அங்கு வீசிய குளிரான காற்று அவரின் உடம்பில் பட்டுச் சிலிர்ப்பை உண்டாக்கியது.

**அ**ந்த மரத்தில் ஏராளமான விதம் விதமான இனத்தைச் சேர்ந்த பறவைகள் கூடுகட்டி மிகவும் இன்பமாக வாழ்ந்தன. குருவிகளின் இனிமையான ஒலி சியவன ரிஷியின் மனதை வருடியது.

**அ**ந்த மரத்தில் சகல சாத்திரங்களையும் கற்ற ஒரு கிளி குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. அதன் பெயர் குஞ்சால். அதற்கு மனைவியும், உஜ்வலா, சமுஜ்வலா, விஜ்வலா, கபிஞ்ஜ்லா என்று நான்கு புத்திரர்களும் இருந்தனர்.

**அ**ந்தக் கிளிக் குஞ்சுகள் நான்கும் அதிகாலையில் எழுந்து வெளியே செல்லும். மாலையில் தான் அவை தமது இருப்பிடத்திற்குத் திரும்பும். இது தினமும் நடைபெறும் நிகழ்வாகும். பின் அன்று முழுவதும் அவை சென்ற இடங்களில் கண்டவற்றையும், கேட்டவற்றையும் கலந்து பேசுவது வழக்கம். அந்த மரத்தின் கீழ்த்தான் சியவன ரிஷி களைப்பாறிக் கொண்டிருந்தார். அவர் களைப்பாறிக் கொண்டிருப்பதைப் பற்றி அக்கறைப் படாத கிளிகள் ஒன்று கூடிப் பேச ஆரம்பித்தன.

**உ**ஜ்வலா என்ற கிளி சொன்னது, "எமது ஊருக்கு அருகில் உள்ள பிளக்ஷ தீவுக்கு உணவு தேடிச் சென்றேன். அது ஒரு அருமையான அழகான தீவு. பல்வேறுபட்ட பல மரங்கள் அங்கு நிற்கின்றன. மரங்களில் ஏராளமான காய்களும் கனிகளும் இருந்தன. இயற்கை எழில் நிறைந்த தீவு அது. தீவு முழுவதும் பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கிறது. குறைவில்லாது மழை பெய்வதால் அத் தீவில் வாழ்வோர் வருடம் முழுவதும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவர். தானியங்கள் நிறைய விளைவதால் மக்கள் மிகுந்த மகிழ்வுடன் வாழ்கின்றனர். அவர்களுக்கு எந்தவிதமான குறைகளும் இருப்பதாகத் தெரியவில்லை. எவ்வேளையிலும் மகிழ்வுடன் இருப்பதைக் கண்டேன்.

**அ**ந்த அழகிய தீவை திவோதாசன் என்ற மன்னன் நீதிநெறி தவறாது ஆண்டு வந்தான். அவனுக்குத் திவ்யாதேவி என்றோர் அழகிய மகள் இருந்தாள்.

**தி**ருமண வயது வந்த அவளை திவோதாசன், ரூப நாட்டின் மன்னனான சித்திரசேனனுக்குத் திருணமம் செய்து கொடுக்க எண்ணினான். சித்திரசேனன் சகல சாத்திரங்களையும் கற்ற அறிவாளி. அத்துடன் பெரும் வீரன். அவனுடைய பெயரைக் கேட்டால் கேட்கும் அரசர்கள் மதிப்பும் மரியாதையும் கொடுப்பார்கள். திவோதாசன் ரூபா நாட்டுக்குச் சென்று சித்திரசேனனைக் கண்டு தனது மகளைத் திருமணம் செய்யுமாறு கேட்கச் சித்திரசேனன் பெரு மகிழ்வுடன் ஒப்புக் கொண்டான். அதனால் இரு நாட்டு மன்னர்களும் சேர்ந்து திருமண நாளைக் குறித்தனர். அதனால் திவோதாசன் மிக்க மகிழ்வுடன் தனது நாட்டுக்குத் திரும்பி வந்து திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான்.

**சி**த்திரசேனன் திவ்வியாதேவியைப் பற்றி தனது ஒற்றர்களை அனுப்பித் தெரிந்து கொண்டான். அவள் நல்ல அழகி. தயாளகுணமிக்கவள். அதனால் சித்திரசேனன் மிகுந்த மகிழ்வுடன் இருந்தான். திருமணத்திற்கு இன்னும் சில நாட்கள் இருக்கையில் சித்திரசேனன் திடீரென்று இறந்துவிட்டான். ரூபாநாட்டு மக்கள்பெரும் வேதனைப்பட்டனர். திவோதாசனால் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எல்லாம் விதிப்படி நடைபெறும் என்று நினைத்துத் தனது மனதைத் தேற்றிக் கொண்டான்.

**இ**வ்வாறு திவ்விய தேவிக்கு இருபத்தொரு தடவை திருமணம் நிட்சயிக்கப்பட்டு மணமக்கள் திருமணத்திற்கு முன்பு இறந்துவிட்டனர். அதனால் பெரும் வேதனையடைந்த திவோதரன் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தான்.

**ப**ல தேசங்களில் இருந்தும் பல அரச குமாரர்கள் சுயம் வரத்திற்கென அத் தீவுக்கு வந்து சேர்ந்தனர். சுயம்வரத்திற்கு வந்த அரச குமரர்கள் காரணமின்றி ஒருவரோடு ஒருவர் பகை கொண்டு தமக்குள் யுத்தம் செய்தனர். அதனால் சுயம்வரத்திற்கு வந்த அனைத்து அரச குமாரர்களும் கொல்லப்பட்டனர். அதனால் திவ்வியதேவியின் திருமணம் குழம்பி விட்டது.

**நா**ட்டு மக்கள் திவ்வியதேவி அதிஷ்டமில்லாதவள். அளுக்கென நிட்சயிக்கப்பட்ட ஓரிருவர் இறந்தாலே அபசகுனம். இவளுக்கு நிட்சயிக்கப்பட்ட இருபத்தொரு இளவரசர்களும் சுயம்வரத்திற்கு வந்து அனைவரும் இறந்தது பெரு அமங்கலமான செயல் என்றனர். அத்துடன் இளவரசர்கள் எவரும் இவளைத் திருமணம் செய்வதில்லை என்றும் தீர்மானித்தனர். அதனால் மனமுடைந்து வாழ்க்கையை வெறுத்த திவ்யதேவி காட்டுக்குச் சென்று தவம் செய்யலானாள். இவ்வாறு ஏன் நடைபெற்றது என்று ஒரு கிளி கேட்டது அது பற்றிய வரலாற்றைக் குஞ்சலக் கிளி சொல்ல ஆரம்பித்தது.

## திவ்வியதேவியின் முற்பிறப்பு வரலாறு



**வா**ரணாகி என்ற புண்ணிய பூமியில் சுதீரன் என்றொரு வர்த்தகன் வாழ்ந்து வந்தான். அவன் நீதிநெறி தவறாத தருமவான். அவனது மனைவி சித்திரா. இருவரும் தர்மநெறிக் கேற்ப வாழ்ந்து வந்தனர். யாராவது அவர்களிடம் யாசிக்க வந்தால் அவர்களது வாழ்க்கை நிலையைக் கேட்டறிந்து அதற்கேற்றவாறு உதவிகளை மனம் கோணாமல் செய்து வந்தனர். அதனால் வாரணாகி என்ற புண்ணிய நகரில் வாழும் மக்கள் போற்றிப் புகழ்ந்தனர். சித்திரா தனது கணவனைத் தெய்வமாக மதிப்பவள் போல் நடிப்பாள் சுதீரன் செய்யும் தருமகாரியங்களில் பங்கேற்றுத் தன்னால் முடிந்தளவு உதவிகளைத் தினமும் செய்து வந்தாள். சுதீரனும் தனது மனைவி மீது அளவுகடந்த அன்பை வைத்திருந்தான். யாசகர்கள் வீட்டுக்கு வந்தால் (சித்திரா) கணவன் தொழில் நிமித்தம் அயல் நாடுகளுக்குச் சென்றாலும் வந்தவர்களைக் கடுங்கோபத்துடன் ஏசி அனுப்பிவிடுவாள்.

**ச**மீப காலமாகச் சித்திராவின் போக்கில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவனது கணவனான சுதீரன் உணர்ந்து கொண்டான். தான் இல்லாத வேளையில் யாசிக்க அவளது வீட்டுக்கு வரும் யாசகர்களை அவமதித்து அனுப்புவாள். சுதீரன் செய்யும் தான தர்மங்களைத் தடை செய்வாள். கணவனது சொல்லைக் கேளாது தான் நினைத்தபடி நடப்பாள். உலகில் உள்ள அனைத்துத் தீய குணங்களும் அவளின் மனதில் குடி கொண்டிருந்து கணவனுக்கும், இனத்தவர்களுக்கும், சுற்றத்தவர்களுக்கும், யாசகர்களுக்கும் பிடிக்காத தீய செயல்களைச் செய்யுமாறு வற்புறுத்தும்.

**சு**தீரன் யாகங்களையும், கிரியைகளையும் ஆகம முறைப்படி செய்வான். எந்த ஒரு கிரியையையும் அவன் செய்யாது விட்டதில்லை. கிரியைகள் யாகங்கள் செய்வது சித்திராவுக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவன் செய்யும் கிரியைகளிலும் யாகங்களிலும் அவள் பங்கேற்பதில்லை. சுதீரன் முன்னோர்க்குச் செய்யும் பிதுர்க்கடன்களைக் கூட உரிய முறைப்படி செய்ய அவள் விடமாட்டாள்.

**அ**வளது தீய குணங்களுக்கேற்ற சினேகிதர்கள் பலர் சுதீரன் வீட்டில் இல்லாத போது சித்திராவைச் சந்திக்க வருவார்கள். அவர்கள் வந்தால் ஊரில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றி உரையாடுவார்கள். பிறர் நல்லவற்றைச் செய்தாலும் அவளும், அவளது நண்பிகளும் அவற்றில் பல குறைபாடுகளைக் கண்டு பிடித்துப் பகிரங்கமாக விமர்சிப்பர். இது ஊரவரின் சினத்தை அதிகரிக்கச் செய்யும். அவற்றை அறிந்து சுதீரன் அவளுக்குப் புத்திமதிகள் கூறினால் அவள் அதை அலட்சியம் செய்வாள். அதனால் சுதீரன் அவளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது வேதனைப்படுவான். மகாவிஷ்ணுவிடம் சொல்லி அழுவான். சித்ராவின் தீய செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தன. சுதீரன் எதைச் சொன்னாலும் கேட்காது தனது விருப்பப்படி தீயசெயல்களைச் செய்வாள். கணவன் கண்டித்தால் அதைவிடக் கூடுதலான தீயசெயல்களைச் செய்துவிட்டுத் தனது சினேகிதிகளிடம் அதைப் பெருமையாகச் சொல்வாள். அவள் சொல்வதைச் சிநேகிதிகள் பாராட்டுவர். அவர்களின் பாராட்டு அவளுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கும். சுதீரன் நல்ல பண்பாளன் நீதி நியாயம் தெரிந்த தர்மவான். அவனுக்குச் சித்திராவின் செயல்கள் மிகுந்த வேதனையைக் கொடுத்ததால் அவன் அவளை விட்டுப் பிரிந்து சென்று இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

**க**ணவன் அவளை விட்டுப் பிரிந்து சென்று இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்ததால் அவளைக் கட்டுப்படுத்தவோ, கண்டிக்கவோ யாரும் இருக்கவில்லை. அதனால் அவள் தீயவர்களுடனும், திருடர்களுடனும் சேர்ந்து செய்யக்கூடாத செயல்களையெல்லாம் செய்து வந்தாள். அவள் சொல்வதை வேதவாக்கெனக் கருதித் திருடர்களும் தீயவர்களும் அதைச் செய்து வந்தனர். தன்னைப் பற்றிக் குறையாக யாராவது பேசினால் அவள் தனது நண்பர்களான தீயவர்களுக்குச் சொல்லித் தன்னைத் தரக்குறைவாகப் பேசியவர்களுக்குத்

தண்டனை கொடுப்பாள். தனவந்தர்களின் வீடுகளுக்குத் திருடர்களை அனுப்பிக் கொள்ளையிட வைப்பாள். அதனால் வாரணாசியில் வாழ்ந்த மக்கள் பெருந்துன்பப்பட்டனர்.

**இ**வ்வாறு அவள் வாழ்ந்து வரும்போது ஒருநாள் மரணமடைந்துவிட்டாள். அவளை யமதூதுவர்கள் யமதர்மராசன் முன் கொண்டு சென்று நிறுத்தினர். சித்திரகுப்தன் அவள் செய்த பாவங்களை வாசித்தார். அவர் அவற்றை வாசித்து முடிக்கப் பல மணி நேரம் எடுத்தது. அவற்றைக் கேட்டுத் திகைத்த யமதர்மராசன், “ஒரு பெண்ணால் இவ்வளவு தீயசெயல்களைச் செய்ய முடியுமா” என்று ஆச்சரியப்பட்ட பின்பு, “இதுவரை இப்படியான தீயசெயல்களை எந்தப் பெண்ணும் செய்ததில்லை. அதனால் அவளுக்கு யமலோகத்தில் வழங்கப்படும் உச்சமான தண்டனைகளை வழங்குங்கள்” என்று யமதூதர்களுக்குக் கட்டளையிட்டான்.

**ய**மலோகத்தில் உயர்ந்த தண்டனைகள் பலவற்றை அனுபவித்த சித்திராதான் மறு பிறவியில் திவ்வியதேவியாகப் பிறந்தாள். அவள் முற்பிறவியில் செய்த கொடுமைகளால்தான் அவளுக்குக் குடும்ப வாழ்வு ஏற்படவில்லை. நிட்சயிக்கப்பட்ட இளவரசர்கள் அனைவரும் மரணமடைந்தனர்.

**அ**ப்போது குஞ்சுக் கிளி கேட்டது, “இவ்வளவு கொடுமைகளையும் செய்தவள். மற்றக் குடும்பங்களை வாழவிடாமல் கெடுத்தவள் அப்படியிருந்தும் எப்படி அவள் அரசவம்சத்தில் பிறந்தாள்”.

**அ**தைக் கேட்ட உஜ்வலாக் கிளி சொன்னது, “ஒருவர் பல தீமைகளைச் செய்தாலும் ஓரிரு நல்ல செயல்களைச் செய்தால் அதற்கான நற்பலனை மகாவிஷ்ணு கொடுப்பார். சுதீரனுடன் சித்திரா வாழ்ந்து வரும் போது ஒருநாள் சன்னியாசி ஒருவர் மிகுந்த பசியுடன் சுதீரனின் வீட்டுக்கு வந்தார். அவர் வரும்போது சுதீரன் அயல் நாடொன்றிற்கு வர்த்தக விடயமாகச் சென்றிருந்தான். சன்னியாசி சுதீரனைப் பற்றி அறிந்தமையால் அங்கு சென்றார். அவர் அங்கு செல்வதைப் பார்த்த அவ்வூரவர்கள், “சுவாமி, தாங்கள் சுதீரனின் தர்மங்களைப் பற்றிக் கேள்விப்பட்டதனால் சுதீரனது வீட்டுக்குச் செல்கிறீர்கள். சுதீரன் தர்மவான். கேட்டதைக் கொடுப்பவன். ஆனால் அவனது மனைவி கொடுமைக்காரி. தீயவள். அங்கு நீங்கள் சென்றால் அவள் உங்களை அவமானப்படுத்தித்தான் அனுப்புவாள். அதனால் அங்கு செல்லாதீர்கள்” என்று தடுத்தனர்.

**ச**ன்னியாசிக்குக் கடும் பசி அதனால் அவர்கள் சொல்வதைக் கேளாது சுதீரனின் வீட்டுக்குச் சென்றார். அன்று சித்திரா மிக்க மகிழ்ச்சியுடன் இருந்தாள். அவள் கொள்ளையிடச் சொன்ன செட்டியாரின் வீட்டில் அவளது கையாட்கள் கொள்ளையடித்திருந்தனர். அந்த மகிழ்ச்சியில் இருந்த சித்திரா சன்னாசியைக் கண்டதும் இன் முகத்துடன் அவரை வரவேற்று,

அவருக்கு அறுசுவை உணவுகளைக் கொடுத்து உபசரித்தாள். அவளது தோழிகள் சன்னாசிக்குச் சாமரை வீசினர். அதனால் மிக்க மகிழ்ச்சியடைந்த அந்தச் சன்னியாசி அவளை வாழ்த்தி, "நீ அடுத்த பிறப்பில் அரசியாகப் பிறப்பாய்" என்று கூறிவிட்டுச் சென்றார். அவள் ஒருநாள் மிக்க மகிழ்வுடன் சன்னியாசிக்கு உணவு கொடுத்தமையால்தான் அவள் சன்னியாசியின் மனதைக் கவர்ந்தாள். அதனால் அவர் மனம் மகிழ்ந்து வாழ்த்தியதால்தான் சித்திரா என்பவள் திவ்யதேவியாக அரச பரம்பரையில் பிறந்தாள் என்றது உஜ்வலா என்ற கிளி.

"**எ**னக்கு ஒரு சந்தேகம் உள்ளது. அவள் தற்போதுள்ள கணவன் எப்படி அடைய முடியும். பாவத்திற்கான பிராயச்சித்தமாக எவ்வாறு தவம் செய்தல் வேண்டும்" குஞ்சுக் கிளி கேட்டது.

**நா**ம் செய்யும் பாவங்களுக்குப் பிராயச்சித்தங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அறிந்தோ அறியாமலோ செய்யப்படும் தீயசெயல்கள் பாவமாகிச் செய்தவரை வந்தடைகிறது. இப் பாவங்களைப் போக்கச் சுலபமான வழி இடைவிடாது மகாவிஷ்ணுவைப் பிரார்த்திப்பதேயாகும். பிரார்த்திப்பவர் பற்றற்று நிபந்தனைகள் இன்றி விஷ்ணுவை ஆராதித்து வந்தால், அந்த ஆராதனை பாவங்களைச் சிறிது சிறிதாகக் குறைத்து இறுதியில் முற்றாக அழித்துவிடும். விஷ்ணுவை ஆராதிப்பவன் நாம சங்கீர்த்தனம் செய்யலாம். விஷ்ணுவுக்கான விரதங்களை முறைப்படி அனுஷ்டிக்கலாம். விஷ்ணுவை வணங்கிவிட்டு அவரின் ஏழை அடியவர்களுக்குத் தானதருமங்கள் செய்யலாம். விஷ்ணுவின் கோவில்களில் சரியைத் தொண்டுகள் செய்யலாம். விஷ்ணுவைப் புகழ்ந்து ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களைப் பிரதிபண்ணிக் கொடுக்கலாம். அவற்றை ராகத்துடன் சொல்லிக் கொடுக்கலாம். இவ்வாறு பற்றற்றுக் கடமைகளைச் செய்யும் போது செய்த பாவங்கள் தேய்ந்து அழிந்து விடும்" என்றது கிளி.

**ம**றுநாள் உஜ்வலா என்ற கிளி இளவரசியைக் கண்டு தனது தகப்பனார் கூறியவற்றைக் கூறியது. அதனால் மகிழ்ந்த இளவரசி உஜ்வலா சொன்னபடி மகாவிஷ்ணுவை நான்கு ஆண்டுகள் ஆராதித்தாள். அதனால் அவளுடைய எல்லாப் பாவங்களும் நீங்கிவிட்டன.

**சமுஜ்வலா**



**த**ந்தைக் கிளி இரண்டாவது கிளியான சமுஜ்வலாவிடம், "நீ கண்டவற்றையும், கேட்டவற்றையும் எமக்குக் கூறு" என்றதும் சமுஜ்வலா சொல்லத் தொடங்கியது.

"**நா**ன் உணவுதேட எப்பொழுதும் இயமலைச் சாரலுக்கே

செல்வேன் அது ஒரு ரம்மியமான பிரதேசம். வானத்தைத் தெரியாதபடி மரங்கள் மூடியுள்ளன. விதம் விதமான சுவையான பழ மரங்களும், மூக்கைத் துளைக்கும் வாசனை மிக்க பூமரங்களும் மலையெங்கும் உள்ளன. மலையின் சில பகுதிகள் வர்ண வர்ணப் பூமரங்களால் மூடப்பட்டிருக்கிறது. நிலம் முழுவதும் பல்வேறு நிறப் பூக்கள் உதிர்ந்து கிடப்பதால் நிலம் பட்டுக் கம்பளம் போல பளபளத்துக் கொண்டிருக்கும்.

**அ**ங்கு ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது. அதில் சில சிற்றருவிகள் பாய்கின்றன. அங்கு பல வர்ணக் கிளிகளும், பஞ்ச வர்ணக் கிளிகளும் ஏராளமாக வசிக்கின்றன. அவை மரங்களில் இருக்கும் அழகை யாராலும் வர்ணிக்க முடியாது. அதைவிட வேறு இனப் பறவைகளும் ஏராளமாக வசிக்கின்றன. அங்குள்ள பழ மரங்களில் உள்ள பழங்கள் மிக மிகச் சுவையானவை. அதனால் வெகுதூரத்தில் இருந்து பறவைகள் பழங்களை உண்பதற்காக அங்கு வருகின்றன. தூர இடங்களில் இருந்து வரும் பறவைக் குடும்பங்கள் அங்குள்ள மரங்களில் கூடுகட்டி நிரந்தரமாகத் தங்கி வாழ்கின்றன. அழகான ஓர் ஏரி அங்குள்ளது. என்றும் வற்றாத அந்த ஏரிப் பகுதிக்குள் ஏராளமான பறவைகள் தங்கியிருக்கின்றன. மிகவும் விஸ்தீரமான அந்த ஏரி நிறைய வெண்தாமரை மலர்களும், செந்தாமரை மலர்களும், நீலோற்பல மலர்களும், அல்லி மலர்களும் பூத்துக் குலுங்குகின்றன. அந்தக் காட்சியைக் கண்டுகளிக்க ஆயிரம் கண்கள் வேண்டும். அந்த ஏரிக்கு மாசை ரோ வரம் என்று பெயர். மிகவும் பெரிய சரித்திரப் புகழ்மிக்க ஏரி அது. அந்த ஏரிக்குள் நூற்றுக்கணக்கான அன்னப் பறவைகள் மிக்க மகிழ்வுடன் விளையாடி விளையாடி நீராடிக் கொண்டிருக்கும். அந்த அன்னங்கள் பல வர்ணங்களை உடையனவாகவும், அழகானவையாகவும் காட்சி தந்தன. கறுப்பு அன்னங்கள் அழகானவையா…? வெள்ளை அன்னங்கள் அழகானவையா…? நீல அன்னங்கள் அழகானவையா என்று என்னால் கணிப்பிட முடியவில்லை. ஒரு நிற அன்னத்தைப் பார்க்கும் போது அது தான் அழகானது என்று நினைக்கத் தோன்றும். அடுத்த நிற அன்னத்தைப் பார்த்தால் அது தான் அழகு மிக்கது என்று எண்ணத் தோன்றும். இவ்வாறு மனதை மயக்கும் பல காட்சிகள் அங்குண்டு.

**அ**ந்த அன்னங்களுக்குப் பின்புறமாக நான்கு பெண்கள் நின்றனர். அவர்களின் பற்கள் நீண்டிருந்தன. தலையில் ஊசியைப் போன்ற முடிகள் இருந்தன. மிகமிகக் கோரமாக அவர்களின் உடல் இருந்தது. எனக்குப் பயமாக இருந்த போதும், அவர்கள் யார்? அவர்கள் ஏன் அங்கு வந்தார்கள்? அவர்களுக்கும் அந்த அன்னங்களுக்கும் என்ன உறவு என்று சிந்தித்தேன். அவற்றை அறியும் ஆவலோடு அவற்றைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

**க**றுப்பு நிற அன்னப்பறவைகள் குளத்தில் நீராடிவிட்டு வெளியே வந்தன. அப்போது குளத்தில் இருந்து ஒரு பெரிய அன்னம் வெளியே வந்தது. அதன் தோற்றம் ஒரு யானையின் தோற்றமளவு இருந்தது. பெரிய அன்னம் வெளி வந்தபின் மூன்று அன்னங்கள் வெளிப்பட்டன. சிறிது நேரத்தில் அவையாவும் வானில் பறந்தன.

**க**றுப்பு அன்னங்களைத் தவிர ஏனைய அன்னங்கள் குளக்கரையைச் சுற்றிப் பறந்து விளையாடின. குரூர வடிவுடைய நான்கு பெண்களும் அக் குளத்தைச் சுற்றிச் சுற்றி வந்து ஏதேதோ பேசிப் பயங்கரமாகச் சிரித்தனர். அவர்களின் சிரிப்பால் காடு அதிர்ந்தது. மகிழ்வுடன் கீச்சிட்டு விளையாடி மகிழ்ந்த பறவைகள் அப் பயங்கரச் சத்தத்தால் அதிர்ச்சியடைந்து செயலிழந்து மௌனியாகின.

**இ**வ்வாறு அந்த நான்கு விகாரமான பெண்களும் பலமாகச் சிரித்துக் கொண்டிருக்கும் போது ஒரு வேடன் வந்தான். அவன் வந்த பின்பு அவனது மனைவியும் வந்தாள். ஆனால் அவளுக்குத் தனது கணவனை அடையாளம் காண முடியவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் தெரியாதவர் போல நடந்து கொண்டனர்.

**வே**டன் அனேகமாக தன்னைப் பேணாமையால் அழுக்குடன் இருப்பது வழக்கம். ஆனால் அங்கு வந்த வேடன் மிக்க அழகுடையவனாகவும், முகத்தில் இருந்து ஒளி வீசுபவனாகவும், கம்பீரமானவனாகவும் இருந்தான். அவனால் தனது மனைவியை அடையாளம் காண முடிந்தது. ஆனால் அவளால் அவனை யாரென்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

**த**டுமாறும் தனது மனைவியைக் கண்ட அந்த வேடன் அவளின் அருகே சென்று, “நீ என்ன செய்கிறாய். எனக்குப் பசிக்கிறது. உணவைத்தா” என்று கேட்டான்.

**அ**வள் பாம்பைக் கண்டவள் போலப் பயந்து நடுநடுங்கினாள். “நீ யார் என்று எனக்குத் தெரியாது. முன்பின் தெரியாத ஒரு பெண்ணிடம் உணவு கேட்கலாமா…? என்னருகே வராது தூரப்போ” என்றாள்.

“**நா**ன் உனது கணவன். உனக்கு என்னைத் தெரியவில்லையா?” என்று கவலையுடன் கேட்டான்.

“**ஐ**யா, நீ எனது கணவன் அல்ல. ஊர்பேர் தெரியாத ஓர் அழகான வாலிபன் வேடுவிச்சியான என்னைத் தனது மனைவி என்றால் நான் எவ்வாறு ஏற்றுக் கொள்வது. எனது கணவர் கரிய நிறமுடையவர். உடலெங்கும் காயங்கள் வந்து மாறிய அடையாளங்கள் இருக்கும். பலகாலமாகச் சீவப்படாத தலை. குழி விழுந்த கண்கள். இவைதான் எனது கணவனின் அடையாளங்கள். நீ மன்மதனைப் போல இருக்கிறாய். நல்ல சிவந்த நிறம். அழகான தலைமுடி, ஒளி வீசும் முகம். அதனால் நீ எனது கணவன் அல்ல. வீணாகப் பேசி எனது மனதை மாற்ற முயற்சிக்காது இவ்விடத்தை விட்டுச் சென்று விடு” என்று அழுதாள்.

**அ**ப்போது தனது உருவத்தைப் பார்த்த வேடன், முற்றாக மாறியதால் தான் அவள் தன்னை அடையாளம் காண முடியாது தவிக்கிறாள் என்பதை உணர்ந்து, “எனது அன்பான

மனைவியே, நான் வேட்டையாடி மிகவும் களைத்த நிலையில் நர்மதை ஆற்றில் நீராடினேன். அது நர்மதை ஆறும் ரேவா ஆறும் கலந்து பாயும் இடம். அதை நர்மதை சங்கமம் என்று சொல்வார்கள். அதன் அற்புதமான மகிமைகளைத் தெரியாது அதில் நீராடிவிட்டேன். நீராடிய பின் எனது உடலமைப்பு முற்றாக மாறிவிட்டது. நான் வரும்போது காட்டில் கண்டவர்கள் எல்லாம் என்னை விசித்திரமாகப் பார்த்து, "இவன் தேவகுமாரன் என்று சொல்லி வணங்கினர். அதனால் நீயும் வா நர்மதைச் சங்கமத்தில் நீராடுவோம்" என்று கூறித் தனது மனைவியை அழைத்துக் கொண்டு நர்மதைச் சங்கமத்தை நோக்கிச் சென்றான்.

**வே**டனும் மனைவியும் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தக் கோர வடிவுடைய நான்கு பெண்களும், அவர்களுக்குப் பின்னால் சென்றனர். அவர்களுடன் அன்னப்பறவைகளும் சென்றன. வேடனைப் போலத் தமது குரூர உருவங்களும் மாறினால் எவ்வளவு நல்லது என்று நினைத்தபடி சென்றனர்.

**ந**ர்மதையும், ரேவாசும் கலக்கும் அந்தச் சங்கமம் வந்தது. வேடன் தனது மனைவியை அழைத்துக் கொண்டு நர்மதை சங்கமத்துள் இறங்கி நீராடினான். சில நிமிடங்களில் வேடனின் மனைவி ஓர் அபூர்வ தேவதையாக மாறினாள். அந்த அழகிய தோற்றம் அவளுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அன்னங்களும் நர்மதை சங்கமத்தில் இறங்கி நீராடின. அவற்றின் அசிங்கமான அருவருக்கத்தக்க நிறங்களைக் கொண்ட அன்னங்கள் சுத்தமான வெள்ளை நிறத்தை அடைந்தன. அவற்றின் மேனி தங்கம் போலப் பளபளத்தது. அதைக் கண்டு மகிழ்ந்த அந்தக் குரூர உருவை உடைய நான்கு பெண்களும் நர்மதைச் சங்கமத்தில் இறங்கி நீராட, அவர்கள் மரணமடைந்து ஆற்றில் மிதந்தனர்.

"**இ**வ்வாறு ஏன் நடந்தது" என்று தந்தையிடம் கிளிக் குஞ்சு கேட்டது.

## குப்ஜ தீர்த்தம் நர்மதை, ரேவா சங்கமம்



**நா**ரத முனிவர் உலகெங்கும் சுற்றித் திரிந்து அங்கு நடப்பவற்றையெல்லாம் அறிந்து கொள்வார். பின்பு மகாவிஷ்ணுவிடமும் சிவபெருமானிடமும் சென்று அவர்களை வணங்கித் தான் சென்று வந்த இடங்களில் கண்டவற்றையெல்லாம் கூறுவார். அதனால் தேவருலகில் பெரும் சிக்கல்களும், பிரச்சினைகளும் உருவாகும். அதனால் நாரதரைக் கண்டால் தேவர்கள் பயந்து நடுங்குவார்கள். நாரதர் தம்மைப் பற்றி தவறாக ஏதாவது சொல்லித் தம்மைச் சிக்கலில் மாட்டிவிடுவாரோ என்று

பயப்படுவார்கள். ஆனால் நாரதரின் கலகம் எப்பொழுதும் நன்மையிலேயே முடிவடையும். ஒருபோதும் தீமை ஏற்படாது என்று எல்லோருக்கும் தெரியும்.

**ஒ**ருநாள் நாரத முனிவர் இந்திரனைச் சந்தித்துக் கதைப்பதற்காகத் தேவலோகம் சென்றார். இந்திரன் நாரதரைக் கண்டு பதட்டத்துடன் முகம் மலர்ந்து வரவேற்றான். இன்று நான் யாரின் முகத்தில் விழித்தேன். அதிகாலையிலேயே கலகமூட்டும் முனிவரான நாரத முனிவர் வந்துவிட்டார் என நினைத்தவாறு அவரைக் கை கூப்பி வணங்கி ஆசனத்தில் அமருமாறு பணித்தான்.

**எ**ங்கும் சுற்றித் திரிந்ததால் நாரதர் களைப்படைந்திருந்தார். இந்திரலோகத்திற்குச் சென்றால் இந்திரனது அன்பான வரவேற்புத் தனது களைப்பை நீக்கும் என்று நினைத்தே அங்கு வந்தார்.

"**உ**ங்களுக்கென்ன குறை உலகெல்லாம் சுற்றித் திரிந்து எல்லா உலகங்களினதும் வரவேற்பைப் பெற்றுள்ளீர்கள். தங்களின் வரவு நல்வரவாகட்டும்" என்று மகிழ்வுடன் இந்திரன் நாரதரை வரவேற்றான். அதன்பின், "தாங்கள் எங்கெல்லாம் சென்று வருகிறீர்கள்?" என்று கேட்டான்.

"**தே**வேந்திரா, பூவுலகில் உள்ள புனித தீர்த்தங்களையெல்லாம் தரிசித்து அதில் நீராட வேண்டும் என்று பல நாட்களாக நினைத்திருந்தேன். இப்பொழுதுதான் அந்தப் பாக்கியம் கிடைத்தது. புண்ணிய தீர்த்தங்களுக்கு அருகில் உள்ள புனிதத் தலங்கள் மிக்க மகிமை உள்ளவை. புனிதமான தீர்த்தங்களில் நீராடிவிட்டு அவற்றின் அருகே இருக்கும் புனிதத் தலங்களைத் தரிசித்து அங்கு கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானை வணங்கினால் மனதில் உள்ள அழுக்குகள் யாவும் மறைந்து மனம் ஒரு புனிதத்தமலமாகிவிடும். எம் பெருமானான மகாவிஷ்ணுவைத் தரிசிப்பது அபூர்வமானது. அதைவிடப் புனிதத் தீர்த்தக் கரையில் அமர்ந்து அடியவர்களுக்கு அருளும் மகாவிஷ்ணுவைத் தரிசிக்கக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். குப்ஜ தீர்த்தம், நர்மதை தீர்த்தம், ரேவா தீர்த்தம் என்பன புனிதமான தீர்த்தங்களாகும். அவற்றைக் கண்களால் காண்பவன் புண்ணியவான். அவற்றில் இறங்கி நீராடுபவன் தேவர்களை விட மேலானவன்" என்றார் நாரதர்.

"**தா**ங்கள் கூறியவற்றை நானும் அறிவேன். பூமியில் ஏராளமான புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் மேலானது எது. அந்தத் தீர்த்தத்தில் நீராடினால் செய்த கொடிய பாவங்களெல்லாம் நீங்கும். தாங்கள் உலகம் சுற்றுபவர். யாவற்றையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதனால் தான் கேட்கிறேன் எது சிறந்த புண்ணிய தீர்த்தம்" இந்திரன் கேட்டான்.

“**ஒ**வ்வொரு வகையில் ஒவ்வொரு தீர்த்தமும் புனிதமானவை. சிறந்தவை. உயர்ந்தவை. பாவங்களை நீங்குபவை” என்றார் நாரதர்.

**அ**தைக் கேட்ட இந்திரன் திருப்திப்படாமல், எல்லாத் தீர்த்தங்களையும் தேவருலகிற்கு அழைக்கிறேன்” என்று கூறி எல்லாத் தீர்த்தங்களையும் தன்முன்னே வரும்படி அழைத்தான். உடனே கங்கை முதல் வசுபுத்ரிகா வரை பூமியில் உள்ள அனைத்துத் தீர்த்தங்களும் இந்திரனின் முன் பிரசன்னமாகின. இந்த நதிக் கரைகளில் பிரயாகை, புஷ்கரம், வாரணாசி, மதுரா என்று பல புண்ணிய நகரங்களும், பல புண்ணியத் தலங்களும் உள்ளன.

**இ**ந்திரனின் அருகே வந்த புனித தீர்த்தங்கள், “தேவேந்திரனே, இதுநாள் வரை இல்லாதவாறு புண்ணிய தீர்த்தங்கள் அனைத்தையும் அழைத்துள்ளீர்கள். அனைத்துத் தீர்த்தங்களும் வந்துவிட்டன. அதனால் எம்மை அழைத்த காரணத்தைக் கூறினால் நாம் மகிழ்ச்சியடைவோம்” என்றன.

“**பூ**மியில் வாழ்வோர் பல்வேறு வகையான பாவங்களைச் செய்கின்றனர். பசுக்களைக் காரணமின்றி வருத்துகிறார்கள். அவற்றை இரக்கமின்றிக் கொன்று உண்கின்றனர். அப்பாவிகளான பெண்களைத் துன்புறுத்துகின்றனர். ஒரு பெண்ணைப் பலர் விரும்புகிறார்கள். ஆனால் அவள் விரும்புவதில்லை. அவள் விரும்பாததால் அவளுக்குப் பல தொல்லைகளைக் கொடுக்கின்றனர். பல ஆண்கள் பெண்களைத் துன்புறுத்துவதால், பெண்கள் கணவர்களைப் பிரிந்து வாழ்ந்து துன்பப்படுகின்றனர். போதை தரும் மதுபானங்களைத் தயாரித்து விற்பனை செய்து பல குடும்பங்களில் குழப்பங்களை உண்டுபண்ணுகின்றனர். பலர் கஷ்டப்பட்டுத் தேடிய பொருட்களை ஒரு சிலர் திருடிவிடுவதால் உழைப்பவர்கள் பெருங் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். தனக்குக் கல்வி கற்பிக்கும் குருவை அவமதிக்கின்றனர். கடவுள்களைச் சிலர் வாய்க்கு வந்தபடி திட்டுகின்றனர். பிறரின் வீட்டுக்குத் தீயிட்டுக் கொழுத்தி வீட்டாரைத் துன்பத்துக்குள்ளாக்குகின்றனர். அவர்களது பயிர்களை நாசம் செய்கின்றனர். போர் வீரர்கள் போரிடாது புறமுதுகு காட்டி ஓடித் தப்புகின்றனர் இது போன்ற மன்னிக்கமுடியாத பாவங்களைத் தயக்கமின்றிச் செய்துவிட்டு புனித தீர்த்தங்களில் நீராடுவதால் அக் கொடிய பாவங்கள் யாவும் நீங்கிவிடும் என்று நினைக்கின்றனர். இத்தகைய கொடிய பாவங்கள் நீங்க எந்தத் தீர்த்தத்தில் நீராட வேண்டும்” என்று இந்திரன் கேட்டான்.

“**தே**வேந்திரா, இவ்வாறு மனிதர்களும், தேவர்களும், முனிவர்களும் சொல்கிறார்களே தவிர அக் கொடிய பாவங்களை நீக்கும் சக்தி எந்தத் தீர்த்தத்திற்கும் இல்லை. புனிதத் தன்மையும் இல்லை. ஆனால் பிரயாகை, வாரணாசி ஆகிய இரு தீர்த்தங்களும் மிகவும் சிறந்தவை” என்று கூறி தேவேந்திரனிடமிருந்து விடை பெற்றுப் பூமிக்குத் திரும்பின.

## தீர்த்தங்களின் சரித்திரம்



**பா**ஞ்சால தேசத்தில் விதுரன் என்றொரு சத்திரியன் இருந்தான். அவன் மிகவும் கொடியவன். நாட்டு மக்களை பல்வேறு வரிகளைச் சுமத்தினான். வரி கொடாதவர்களையும், தனக்குப் பிடிக்காதவர்களையும் கொலை செய்துவிடுவான். பிராமணர்களை அழைத்துத் தான் கூறியபடி பூசைகளையும், யாகங்களையும் செய்யுமாறு கட்டளையிடுவான். அவ்வாறு செய்யாதவர்களைக் கொலை செய்துவிடுவான். பிராமணன் ஒருவனைக் கொல்வது நூறு பசுக்களைக் கொல்வதற்குச் சமம் அதனால் பிராமணர்களைக் கொலை செய்யாதே. அவர்களைத் துன்புறுத்தாதே என்று சொல்பவர்களையும் கொடுமையாகத் தண்டிப்பான். பிற்காலத்தில் கொலை செய்வது பாவம் என்று உணர்ந்து, அப் பாவத்தைப் போக்குவதற்காகப் பூமியில் உள்ள பல தீர்த்தங்களுக்குச் சென்று நீராடினான். தான தருமங்கள் செய்தான். இருந்த போதும் அவனது பாவங்கள் நீங்கவில்லை.

**ஒ**வ்வொரு தீர்த்தக்கரைக்கும் யாத்திரை சென்று அவன் அங்குள்ள புனித தீர்த்தங்களில் நீராடியவாறு மாவள நாட்டை அடைந்தான்.

**மா**ளவ நாட்டில் தனக்குக் கல்வி கற்பித்த குருவோடு முரண்பட்ட சந்திரவர்மன், தனது குருவைக் கொன்றுவிட்டான். அவன் ஓர் அந்தணன். அவன் மாளவ நாட்டில் வாழ்ந்து வந்தான். பிற்காலத்தில் தனது குருவைக் கொன்றது பெரும் பாவம் என்றுணர்ந்து அவன் பூமியில் உள்ள புண்ணிய தீர்த்தங்கள் பலவற்றிற்கும் சென்று நீராடியும் அவன் செய்த பாவம் தொலையவில்லை. அதனால் பெரும் வேதனை அடைந்த அவன் என்ன செய்தால் அப் பாவம் தொலையும் என்று சாத்திரங்கள் கற்ற பல அறிஞர்களிடம் சென்று கேட்டான். அவர்கள் தமக்குத் தெரிந்தவற்றைக் கூறினர். அவன் அவற்றைச் செய்தும் பாவம் தொலையவில்லை.

**ஒ**ருநாள் விதுரனும், சந்திரசர்மாவும் ஒரு பெரியவர் அந்தத் தீர்த்தத்தில் சென்று நீராடினால் செய்த பாவங்கள் தொலைந்துவிடும் என்று கூற இருவரும் அத் தீர்த்தக் கரையை நோக்கிச் சென்றார்கள். வழியில் அவர்கள் இருவரும் வேதகர்மா என்ற ஒரு பிராமணனைச் சந்தித்தனர். அவர்கள் அப் பிராமணனோடு பேசிய போது அவன் ஒரு துர்நடத்தையுள்ள தீய பெண்ணொருத்தியைத் திருமணம் செய்ததால் அவளின் விருப்பத்திற்காகப் பல தீயசெயல்களைச் செய்ததால் தன்னைப் பெரும் பாவம் சூழ்ந்துவிட்டதென்று கூறி அதற்குப்

பரிகாரம் செய்ய தீர்த்த யாத்திரைக்குச் செல்வதாகச் சொன்னான். மூவரும் தாம் தாம் செய்த பாவங்களைப் பற்றிப் பேசியபடி நடந்து சென்றனர்.

**அ**வர்கள் மூவரும் தீர்த்த யாத்திரைக்குச் செல்லும் வழியில் வன்சுவன் என்ற குடிகாரனைச் சந்தித்தனர். அவன் நன்றாகக் குடித்துவிட்டுத் தெருவால் செல்வோரை வம்புக்கிழுத்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு வர்த்தகன். பணம் அவனிடம் குறைவில்லாது இருந்தமையால் தனது குடிகார நண்பர்களோடு சேர்ந்து குடித்துவிட்டு அடாவடித் தனங்களில் ஈடுபட்டு வந்தான். ஊரவருக்கு அவனோடு பேசப் பயம். யாராவது ஏதாவது கதைத்தால் குடித்துவிட்டு வந்து கண்டபடி ஏசுவான். அவனுடன் அவனது குடிகார நண்பர்களும் சேர்ந்தால் பிரச்சினைப்படுபவர்களின் பாடு பெரும் பாடாகிவிடும். அதற்குப் பயந்து நல்லவர்கள் ஒதுங்கி வாழ்ந்தனர். அவர்கள் ஒதுங்கி வாழ்வதால் அவர்கள் எல்லோரும் தனக்குப் பயப்படுகிறார்கள் என்று பெருமையாகக் கூறிக் கொள்வான்.

**மூ**வரும் தாம் தாம் செய்த பழி பாவங்கள் நீங்குவதற்காகத் தீர்த்த யாத்திரை செய்கிறோம் என்று சொல்ல, “நானும் குடித்துவிட்டுப் பல பாவங்களைச் செய்துள்ளேன். அவையெல்லாம் இப்போது என்னை வந்தடைந்து வருத்துகின்றன. தீர்த்த யாத்திரைக்குச் சென்றால் செய்த பழி போய்விடும் என்கிறீர்கள். அதனால் நானும் உங்களுடன் தீர்த்த யாத்திரைக்கு வருகிறேன்” என்று சொல்லி அவர்களுடன் சென்றான்.

**அ**வர்கள் நால்வரும் ஒன்று சேர்ந்து அவ்வூரில் வாழும் முனிவர் ஒருவரைச் சந்தித்துத் தாம் செய்த பழி பாவங்களை அவரிடம் கூறி, தாம் செய்த பழி பாவங்கள் தீர என்னென்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர்.

**அ**வர்கள் செய்த பாவங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட அந்த முனிவர், “நீங்கள் நால்வரும் பெரும் பாவங்களைச் செய்துள்ளீர்கள். அப் பாவங்கள் நீங்க வேண்டுமானால் பிரயாகை, புஷ்கரம், அர்க்கிய தீர்த்தம், வாரண காசி ஆகிய புனித கங்கைகளுக்குச் சென்று நீராடுங்கள்” என்று கூறினார்.

**அ**தைக்கேட்ட அந்த நால்வரும் மிக்க மகிழ்ச்சியடைந்து முனிவர் கூறிய அந்த நான்கு தீர்த்தக் கரைகளுக்கும் சென்று பலமுறை நீராடிய பின் தாம் செய்த பாவங்கள் தொலையும் என்று நினைத்தனர். ஆனால் பாவங்கள் அவர்களை விட்டு அகலாமையால் அவர்கள் பெருந் துன்பப்பட்டனர். அவர்கள் நீராடிய அந்த நான்கு தீர்த்தக் கரைகளும் மாசடைந்தன. அதனால் பக்தர்கள் அதில் நீராட முடியாது போய்விட்டது. அவர்கள் செய்த அந்தப் பாவங்கள் நான்கு கரிய நிறங்களாக மாறி அந்த நான்கு பேரையும் பின் தொடர்ந்து சென்றன. அவர்கள் சென்று தீர்த்தக் கரையில் நீராடிய போது அவர்களின் உடலில் இருந்து வெளிப்பட்ட பாவ அழுக்குகளே நான்கு அன்னப் பறவைகளாக மாறின. மாசுபடாத தீர்த்தங்கள் வெள்ளை

நிறமுடைய அன்னப் பறவைகளாக மாறி அவர்களைப் பின் தொடர்ந்தன. அறுபத்து நான்கு தீர்த்தங்களும் அறுபத்து நான்கு அன்னப் பறவைகளாக மாறி ஒரு கூட்டமாகப் பறந்து சென்றன.

**அ**ந்த நான்கு பாவிகளும், அறுபத்தி நான்கு அன்னப் பறவைகளும் மானச ரோவரை தீர்த்தத்தை அடைந்து அங்கு நீராட அந்த தீர்த்தம் மாசுபட்டு மிகப்பெரிய கரிய அன்னப் பறவையாக மாறியது. கடைசியில் அவை அனைத்தும் நர்மதை, ரேவா சங்கமத்தை அடைந்தன.

**தீ**ர்த்தக் கரையை அடைந்த அந்த நான்கு பாவிகளும் தீர்த்தத்தில் இறங்கி நீராடினர். அதனால் அவர்கள் செய்த பாவங்கள் அனைத்தும் அவர்களை விட்டு விலகிச் சென்றன. அவர்களுடன் கூட வந்த கறுப்பு நிற அன்னப் பறவைகள் அத் தீர்த்தத்தில் இறங்கி நீராடியவுடன் அவற்றின் கருமை நிறம் நீங்கி, வெண்மை நிறம் உண்டானது.

**அ**ந்த நான்கு பாவிகளின் கொடிய பாவங்கள் தான் கோரமான கொடிய பெண்கள். அவர்கள் நர்மதைத் தீர்த்தத்தில் இறங்கி நீராடியதும், அவர்கள் செய்த கொடிய பாவங்கள் யாவும் பெண்ணுருப் பெற்றமையால் அவை புனிதத் தீர்த்தத்தில் நீராடியதும் மயங்கி விழுந்து இறந்தனர். பிரயாசை, புஷ்கரம், அர்க்கிய தீர்த்தம், வாரணாசி என்பன புனித தீர்த்தங்கள். அங்கு புகழ்பெற்ற திருத்தலங்கள் உண்டு. எனினும் கொடிய பாவங்களைச் செய்த மகாபாவிகள் இத் தீர்த்தத்தில் நீராடித் தமது பாவங்களைப் போக்கமுடியாது. இவற்றை விட நர்மதை ரேவா சங்கமமாகும் தீர்த்தம் தான் மிகமிகப் புனிதமானது. மேலானது. பெரும் பாவிகள் செய்த பாவங்கள் யாவற்றையும் நர்மதை ரேவா சங்கமத் தீர்த்தம் மிகச் சிறந்தது ஆகையால் இதைக் குப்ஜ தீர்த்தம் என்று அழைப்பர்.

## விஜ்வலா என்ற மூன்றாவது கிளிக்குஞ்சு சொன்னது



**வி**ஜ்வலா என்ற கிளிக்குஞ்சு தினமும் உணவு தேட சுமேருமலைப் பகுதிக்குச் செல்லும். சுமேருமலை மிகமிக அழகானது. மலைப்பகுதிகள் எங்கும் பலவர்ண நறுமணமுள்ள பூமரங்கள் உள்ளன. அழகும் நறுமணமும் மிக்க அந்த மலைச் சாரலில் தேவர்கள் வந்து தமது பொழுதைக் கழிப்பார்கள். அந்த மலைச் சாரலில் மிகமிக அழகானதும் அற்புதமானதுமான இடம் அதற்கு ஆனந்தகானகம் என்று பெயர். பெயருக்கேற்றது போல அந்த இடத்தைக் கண்டதும் மனதில் ஒரு ஆனந்த பரவசம் உண்டாகும். அழகான நீரோடைகள். சலசலத்துப் பாயும்

அருவிகள். அவ் அருவிகளில் நீந்தி விளையாடும் காட்டு மிருகங்கள். யானைகள் நீராடுமிடங்கள் மிகமிக அழகாக இருக்கும். தாய் யானைகள், குட்டி யானைகள், தந்தை யானைகள் யாவும் நீரில் இறங்கித் தமது தும்பிக்கையால் நீரை உறிஞ்சி மற்ற யானைகளுக்குப் பீச்சியடிக்கும் காட்சி மிகமிக ரம்மியமானது. ஏரிகளில் வெண்தாமரைப் பூக்களும், செந்தாமரைப் பூக்களும், அல்லி, நீலோற்ப மலர்களும் நிறைந்திருக்கும்.

**தே**வர்களும் அப்ஸ்சரஸ் பெண்களும் வானவீதியூடாக விமானங்களில் வந்து இறங்குவார்கள். விமானங்களில் வந்து இறங்கி ஏரிகளில் நீராடி, ஏரிகளில் மலர்ந்துள்ள தாமரை மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டிக் கழுத்தில் போட்டு நடனமாடும் அப்ஸ்சரஸ்சுகளும் தேவர்களும் விமானங்களில் ஏறித் தேவருலகிற்குச் செல்வார்கள். அதனால் தேவர்களின் விமானங்கள் எந்நேரமும் அங்கு வந்தும் சென்றும் கொண்டிருக்கும்.

**அ**ப்ஸ்சரஸ் பெண்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி அழகாக நடனமாடுவார்கள். தேவலோகத்தில் இருந்து வந்த இசைக்குழுவினர் அப்ஸ்சரஸ் பெண்களின் நடனங்களுக்கேற்றவாறு இசையை இசைப்பார்கள். குதூகலம் மிக்க ஒரு குட்டித் தேவருலகாக அவ்விடம் எவ்வேளையிலும் காட்சியளிக்கும்.

**சு**மேருமலைச் சாரலில் எனக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள். அங்கு போனால் அழகான இயற்கைச் சூழலும், அருமையான பழங்களையும் கண்டால் ஒரு புதிய உற்சாகம் மனதில் தோன்றும். இந்த மரத்தில் இருந்து பறந்து செல்லும் நான் விதம் விதமான கனிகளை உண்டு விட்டு நண்பர்களுடன் வானில் பறப்போம். அன்று மிக்க மகிழ்வுடன் நாம் பறந்து கொண்டிருக்கையில் ஒரு விமானம் பறந்து வந்து தரையில் இறங்கியது. அந்த அழகான விமானத்தைப் பார்ப்பதற்காக விமானம் நின்ற இடத்திற்கு அண்மையில் இருந்த மரத்தில் போயிருந்தேன்.

**அ**ந்த அழகிய விமானத்தில் இருந்து ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இறங்கினர். அவர்கள் கணவன் மனைவியாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அவர்கள் விமானத்தால் இறங்கி ஏரிக்குச் சென்று அதில் நீராடி மகிழ்ந்தனர். ஏரியில் மலர்ந்திருந்த தாமரைப் பூக்கள் சிலவற்றைப் பறித்துக் கையில் கொண்டு வந்தனர். பின் விமானத்தில் ஏறி இரண்டு வாள்களை இருவரும் எடுத்துக் கொண்டு ஏரிக்கருகில் வந்தனர். ஏரிக்கரையில் ஓர் ஆண் பிணமும், ஒரு பெண்ணின் பிணமும் கிடந்தன. வாளுடன் சென்ற ஆண் ஆண் பிணத்தில் இருந்து தசையை வெட்டினான். பெண், பெண் பிணத்தில் இருந்து தசையை வெட்டினான். பின் அத் தசையை இருவரும் உண்டனர். நான் அதிசயத்துடன் அவர்களின் செயலைப் பார்த்துப் பயந்துவிட்டேன். அதனால் உற்றுநோக்கினேன். என்ன அதிசயம் பிணங்களும், பிணங்களில் இருந்து தசையை வெட்டி உண்டவர்களும் ஒரேமாதிரி இருந்தனர். எந்த வித்தியாசத்தையும் என்னால் காண முடியவில்லை.

**அ**ப்பொழுது இரண்டு அழகிய பெண்கள் அத் தம்பதியினர் மாமிசம் உண்ணும் இடத்திற்கு வந்தனர். அந்த இரண்டு அழகிகளும் பிணம் தின்னும் தம்பதிகளுடன் கதைத்துச் சிரித்தனர். என்ன நடக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. பயமாக இருந்தபோதும் அங்கு என்ன நடைபெறப்போகிறது என்பதை அறியும் ஆவாலக அவ்விடத்திலேயே இருந்தேன். அதன்பின் கோரமான தோற்றத்தை உடைய இரு பெண்கள் அங்கு வந்தனர். அவர்கள் நரமாமிசம் உண்ணும் தம்பதிகளின் அருகே சென்று தமக்கும் மாமிசம் தரும்படி கேட்டனர். தம்பதிகள் இருவரும் வயிறு நிறைய மாமிசத்தை உண்டபின் மிக்க மகிழ்வுடன் பேசிச் சிரித்தபடி விமானத்தில் ஏறிச்சென்றுவிட்டனர். அவர்கள் சென்றபின் சிறிது நேரம் அங்கு உலாவிய அந்த நான்கு பெண்களும் மாயமாக மறைந்துவிட்டனர். அவர்கள் சென்றபின் நான் பிணத்தின் அருகே சென்று பார்த்தேன். பிணங்கள் முழுமையான வடிவத்தைப் பெற்றுக் காணப்பட்டன. இது தினமும் நடைபெறுவதாக அங்குள்ள பறவைகள் பேசிக் கொள்கின்றன. இதுபற்றிய விபரங்களை நான் அறியவிரும்புகிறேன். தந்தையே அவற்றை விபரமாகச் சொல்லுங்கள்" என்று விஜ்வலா கேட்டது. அது பற்றிய விபரங்களைத் தந்தைக் கிளி சொல்ல ஆரம்பித்தது.

## சுவாகாவின் கதை



**சோ**ழ நாட்டைச் சுவாகா என்ற மன்னன் ஆண்டு கொண்டிருந்தான். அவன் தருமவான். மிகுந்த பலசாலி. அயல் நாட்டு மன்னர்கள் அவனது பெயரைக் கேட்டால் நடுநடுங்குவர். அவன் அதர்மமான எந்தச் செயலையும் செய்வதில்லை. நீதியாக நாட்டை ஆண்டு வந்தான். அவனது ஆட்சி தர்ம ஆட்சியாக இருந்தமையால் தேவர்கள் மிக்க மகிழ்வுடன் சோழ நாட்டுக்கு உதவி வந்தனர். வருணபகவான் வருடம் முழுவதும் குறைவில்லாத மழையைக் கொடுத்துக் கொண்டிருந்தான். அதனால் நாட்டில் உள்ள குளங்கள், ஏரிகள், கிணறுகள் யாவும் எவ்வேளையிலும் நிரம்பியிருக்கும். தானியங்கள் பெரு விளைச்சலைக் கொடுப்பதால் அங்கிருந்து தானியங்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும். அதனால் சோழநாட்டு திறைசேரி எப்போதும் பொன்னாலும், நவரத்தினங்களாலும், பெறுமதிமிக்க இரத்தினங்களாலும் குவிந்திருக்கும். அவனது பட்டத்தரசி தர்க்ஷயி. அவளும் கணவனுடன் சேர்ந்து தானதர்மங்களைச் செய்து வந்தார்.

**சு**வாகு கிரியைகள், யாகங்களில் பெரும் நம்பிக்கை உடையவன். முறைப்படி யாகங்களைச் செய்பவன். எந்த நாளும் அரண்மனையில் உள்ள விஷ்ணுவின் கோவிலிலும்,

நாட்டில் உள்ள அனைத்து விஷ்ணு கோவில்களிலும் மிகவும் சிறப்பாக முறைப்படி பூசைகளும், கிரியைகளும் நடைபெறும். எந்நேரமும் வேதங்கள் ஒலித்துக் கொண்டிருக்கும்.

**ஒ**ருநாள் பெரியதொரு யாகத்தை சுவாகா பல ஆயிரம் பிராணமர்களைக் கொண்டு முறைப்படி செய்தான். அதனால் அவனது மனம் திருப்தியடைந்தது. அவன் பெரு மகிழ்வுடன் இருந்தபோது அவனது குருவான ஜை முனிவர் கிரியைகளால் திருப்தியடையாது அவனின் அருகே வந்து, “பெரும் பெரும் யாகங்கள் செய்வதால் பயன் இல்லை. முனிவர்களுக்கும், பிராமணர்களுக்கும் கொடுக்கும் பெரும் பெரும் தானங்கள் தான் புண்ணியத்தையும், பலனையும் கொடுக்கும். இதை மன்னர்கள் உணர்ந்து கொள்வதில்லை. நீ பெரும் யாகம் செய்துவிட்டு எனக்குத் தானமாகத் தந்த பொருட்கள் போதாது. இன்னும் பொன் பொருள் தந்தால் தான் நீ அழியாத புண்ணியத்தைப் பெறுவாய்” என்றார்.

“**கு**ருவே, தானம் செய்வதால் பெரும் புண்ணியம் வரும் என்று சொன்னீர்கள். அதனால் என்ன லாபம் எனக்குக் கிடைக்கும் என்று சொல்லுங்கள்” என்றான்.

“**நீ** செய்யும் தான தர்மங்களால் உனக்கு மோட்சம் கிடைக்கும். மோட்சமடைந்தவர்கள் சொர்க்கத்தில் சகலபோகங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். வேறு எதனாலும் மோட்சம் கிடைப்பது கடினம். தான தர்மம் செய்பவன் இறந்தவுடன் மோட்சமடைவான்” என்றார்.

“**கு**ருவே, நான் மோட்சமடைந்து சகல போகங்களையும் அனுபவித்தவாறு எப்போதும் அங்கு தங்கியிருக்க முடியுமா?” என்று சுவாகா மன்னன் கேட்டான்.

“**அ**ரசே, ஒருவர் செய்யும் தான தர்மங்களின் அளவுக்கேற்பவே மோட்டச வாழ்வு கிடைக்கும். உழைக்கும் ஒருவன் பணத்தைத் தேடிய பின் இன்பமாக வாழ்ந்தானேயானால் அவன் தேடிய சொத்துக் கரைந்துவிடும். அதன்பின் அவன் உழைக்க வேண்டும். அதுபோல செய்த புண்ணியங்களின் பலன் முடிவடைந்தும் அவன் பூமியில் பிறந்து உழைத்துத் தான தர்மம் செய்தல் வேண்டும்” என்றார் குரு.

“**கு**ருவே, மோட்ச வாழ்வும் நிலையற்றது என்று தாங்கள் கூறுகிறீர்கள். ஒருவன் செய்த தான தர்மங்களால் வரும் புண்ணியம் முடிவடைந்தால் மீண்டும் நரகலோகமான பூமியில் பிறக்க வேண்டும் என்றால் எனக்குத் தான தர்மங்களால் வரும் மோட்சம் தேவையில்லை. விஷ்ணுவைத் தினமும் பற்றற்று ஆராதிப்பவர்கள் விஷ்ணுவின் லோகத்திற்குச் சென்று அங்கு நிலையாக இருந்து சகல இன்பங்களையும் அனுபவிப்பார்கள் என்று கேள்விப்பட்டுள்ளேன். அதனால் எனக்கு மோட்ச உலகமான சொர்க்கம் தேவையில்லை. விஷ்ணுவை ஆராதித்து விஷ்ணுவின் லோகத்திற்குச் செல்ல விரும்புகிறேன்” என்றான்.

**அ**ரசனும் அரசியும் விஷ்ணுவை முறைப்படி வணங்கி, விஷ்ணுவை குறித்துக் கடும் தவம் செய்து விஷ்ணுவின் லோகத்தை அடைந்தனர். விஷ்ணு லோகத்தில் அவர்கள் இருவரும் இருந்தும் அவர்களால் விஷ்ணுவைச் சந்திக்க முடியவில்லை. அவர்கள் இருந்த விஷ்ணுலோகம் ஓர் அதிசய உலகமாக இருந்தது. அவர்களுக்குத் தாகமெடுத்த போது தண்ணீர் கிடைக்கவில்லை. பெரும் பசியெடுத்த போதும் ஒரு பிடி சோறு கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை அதனால் அவர்கள் தினமும் பெருந்துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் பசியாலும், தாகத்தாலும் துடிதுடித்துக் கொண்டிருக்கும் போது வாமதேவர் என்ற தவ வலிமை உள்ள முனிவர் வந்து அவர்களைச் சந்தித்தார்.

**அ**வரை வணங்கிய அரசனும், அரசியும் தங்களது நிலையை எடுத்துக் கூறித் தமக்கு உணவும், தண்ணீரும் பெற்றுத் தருமாறு இரந்தனர். அப்போது வாமதேவ முனிவர் சொன்னார், “அரசே, நீ மிகமிக நல்லவன். சிறந்த விஷ்ணு பக்தன். நீதிநெறி தவறாது ஆட்சி புரிந்தாய். ஆனால் தான தருமங்கள் எவற்றையும் நீ செய்யவில்லை. குறிப்பாகத் தானங்களில் எல்லாம் மிகச் சிறந்த தானமாகிய அன்னதானத்தை நீ செய்யவில்லை. புனித தீர்த்த தலங்களுக்குச் சென்று தீர்த்தமும் ஆடவில்லை. அதனால்தான் உங்களுக்கு உணவும், நீரும் கிடைக்கவில்லை. அத்துடன் விஷ்ணுவையும் தரிசிக்க முடியவில்லை. பக்தி என்பது வேறு தானம் செய்தல் என்பது வேறு. தான தர்மங்கள் தான் உயிர்களைக் காப்பது. நீ எதை நினைத்தாயோ அதை அடைந்துவிட்டாய். நீ நினைத்தது என்ன?”.

**மு**னிவர் தொடர்ந்து சொன்னார், “நீ விஷ்ணுவின் லோகத்தை அடைய வேண்டும் என்ற வெறியில் தவம் செய்தாயே தவிரத் தானம் எவையும் செய்தாயா?” என்று வாமதேவ முனிவர் சொன்னார்.

“**நா**ங்கள் விஷ்ணு லோகத்தை அடையவேண்டும் என்று வெறித்தனமாக நினைத்துக் கடுந்தவம் செய்தோம். அதனால் வேறு எதையும் சிந்திக்கவில்லை. இந்நிலை மாற வேண்டுமானால் நாங்கள் என்ன செய்தல் வேண்டும்” என்று மன்னன் கேட்டான்.

“**நீ**ங்கள் இருவரும் சுமேருமலைச் சாரலுக்குச் செல்லுங்கள். அங்கே ஓர் ஏரிக்கு அருகே உங்களது சடலங்கள் இரண்டும் அழுகிப் பழுதடையாது அப்படியே இருக்கின்றன. விஷ்ணுலோக விமானத்தில் அங்கு சென்று உங்களது பிரேத வடிவங்களில் இருந்து மாமிசத்தை வெட்டி எடுத்து உண்ணுங்கள். இதை நீங்கள் யாராவது ஒரு விஷ்ணுவின் பக்தன் விஷ்ணுவுக்குரிய பிரார்த்தனைப் பாடலைப் பாட அது உங்களுக்குக் கேட்கும். அதுவரை நீங்கள் நான் கூறியவாறு நடந்து கொள்ள வேண்டும்” என்றார் வாமதேவ முனிவர்.

**தே**வலோகத் தம்பதிகளான சோழ மன்னன் சுவாகாவும் மகாராணி தார்க்ஷ்சியும் தினமும் வாமதேவ முனிவர் சொன்னதைச் செய்து வரும்போது அவர்களிருவரையும் பார்த்துச் சிரித்தது

ஞானமும் சிரத்தையுமாகும். உண்ண மாமிசம் கேட்டுத் தவித்த இரு கோரமான பெண்கள் பசியும் தாககுமாகும்.

"**அ**ப்படியானால் அரசனுக்கும் அரசிக்கும் விமோசனம் கிடைத்ததா" என்று கேட்ட விஜ்வலா, விஷ்ணுவுக்கான பிராத்தனைப் பாடல்களை தனக்குச் சொல்லித் தந்தால் தான் சென்று அரசனும் அரசியும் மாமிசம் உண்ணும் போது அப் பாடல்களைப் பாடி அவர்களுக்கு விமோசனம் அளிப்பேன்" என்றது. அதற்குத் தந்தைக் கிளி விஷ்ணுவினது பாடல்களைச் சொல்லிக் கொடுக்க அது சென்று அரசனுக்கும் அரசிக்கும் முன்னால் நின்று பாடியது. அதனால் அரசனும் அரசியும் பாவம் நீங்கப் பெற்றனர்.

**அசோக சுந்தரி, நாகாஷன் கதை**

**அழும் பெண்ணும் சிவபூசை செய்யும் முனிவரும்**



**க**பிஞ்சலா என்ற கிளி கைலாயமலைக்குச் செல்வது வழக்கம். நீண்டு அகன்று பரந்து கிடந்த கைலாய மலைக் காடுகள் வானை நோக்கி உயர்ந்து வளர்ந்திருக்கும். அங்கு வரும் தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்வார்கள். அதைவிட கைலாய நாதரைத் தரிசிக்கத் தேவர்களும் முனிவர்களும் அங்கு செல்வார்கள். மலைச் சாரலில் மிகப் பெரிய ஏரி ஒன்று உள்ளது. அதனுள் ஏராளமான மீன்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கும். ஏரியில் பூத்த தாமரை மலர்களைப் பறித்து முனிவர் ஒருவர் சிவனுக்குப் படைத்துத் தவம் செய்வர். அழகான பல வர்ணக் குருவிகள் அங்குள்ள மரங்களில் இருந்து இனிய நாதத்தை எழுப்பிக் கொண்டிருக்கும்.

**அ**ந்த அழகான பெரிய ஏரிக்கு அருகில் ஒரு பெரிய பாறை இருக்கிறது. அப் பாறை மீது ஒரு பெண் இருந்து அழுது கொண்டிருந்தாள். அவள் அழும் கண்ணீர்த்துளிகள் அந்த ஏரியின் நீரின் மீது விழுந்தவுடன் அழகான நறுமணம் மிக்க தாமரை மலர்களாக மாறி அக் குளத்தை அழகுபடுத்தின.

**அ**ந்த ஏரிக் கரையில் ஒரு பிரசித்தி பெற்ற சிவாலயம் இருந்தது. முனிவர் காய்கனிகளையோ பழங்களையோ உண்பதில்லை. மரங்களால் பழுத்து விழுந்து சருகாகிய

இலைகளைப் பொறுக்கி அவற்றை உண்டு வந்தார். அதனால் அவர் எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தார். எழுந்து நடக்கும் போது அவர் தள்ளாடித் தள்ளாடித் தான் நடப்பார்.

**தி**னமும் காலை முதல் மறுநாட் காலை வரை அப் பெண் ஓய்வின்றி அழுவதால், அவள் வடிக்கும் கண்ணீர் துளிகள் தாமரைப் பூக்களாக மாறி ஏரியை மூடி இருந்தன. அந்த அழகான நறுமணம் மிக்க தாமரைப் பூக்களைப் பறித்து முனிவர் சிவனுக்குத் தினமும் பூசை செய்வார். அதன்பின் சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடுவார். பாடிப் பாடி ஆடுவார். பின் சிவனின் திருக்கோவிலில் இருந்து பலமாகக் கத்தி அழுவார். இது தினமும் நடைபெறும். இவ்வாறு ஏன் முனிவரும் அந்தப் பெண்ணும் தினமும் அழுகிறார்கள்" என்று கபிஞ்சலா என்ற கிளி தனது தந்தையிடம் கேட்டது.

## சிவபெருமானும் பார்வதியும்



**கை**லாய மலையில் கோவில் கொண்டிருக்கும் சிவபெருமானும் பார்வதிதேவியாரும் ஓய்வான நேரங்களில் கைலாய மலையில் உள்ள பூந்தோட்டங்களிலும், ஆற்றங்கரைகளிலும் பொழுதுபோக்குவது வழக்கம். கைலாய மலையில் பல ஆறுகள் பாய்கின்றன. ஓர் ஆற்றின் கரையில் ஒரு பெரிய பூந்தோட்டம் உள்ளது. அங்கு சிவபெருமானுடன் பார்வதிதேவி சென்று அதன் அழகைப் பார்த்து ரசிப்பார். அங்கிருந்தால் அவர்களுக்கு நேரம் செல்வதே தெரியாது. பூந்தோட்டத்தில் அழகும் நறுமணமும் மிக்க பல மலர்கள் பூத்திருக்கும். அவற்றைப் பறித்து அழகான மாலை கட்டிப் பார்வதியாரின் தோழிகள் அவர்கள் இருவருக்கும் சூடி மகிழ்வர். அழகான மாலைகளைச் சூடிய படி சிவபெருமானுடன் இருந்தால் உமாதேவியார் மிக்க மகிழ்வடைவார்.

**இ**வ்வாறு அவர்கள் தினம் தினம் வெவ்வேறு இடங்களுக்குச் செல்வர். ஒருநாள் சிவனும் பார்வதியும் 'நந்தனக் கானகம்' என்ற பூந்தோட்டத்திற்குச் சென்றனர். மலைச் சாரலில் அப் பூந்தோட்டம் அமைந்து இருந்ததால் பல வர்ணப் பட்டுக்களால் போர்த்தியது போல அந்த மலைச் சாரல் காணப்பட்டது. பார்வதிதேவி மிக்க மகிழ்வுடன் அப் பூந்தோட்டத்தில் நின்ற மரங்கள் ஒவ்வொன்றையும் அதன் அருகில் சென்று பார்த்து ரசித்துக் கொண்டு வரும்போது ஒரு மரம் ஏனைய மரங்களைவிட வித்தியாசமாகவும், மிகவும் உயரமாகவும் இருந்தது. அது என்ன மரம் என்று பார்வதிக்கும் அவளது தோழியார்க்கும் தெரியவில்லை.

**பா**ர்வதிதேவி சிவனுக்கு அருகில் சென்று, நந்தன கானகத்தில் உள்ள மரங்களில் ஒன்றைத் தவிர ஏனையவற்றை நான் கைலாய மலையின் பல பகுதிகளில் கண்டுள்ளேன். ஆனால் இங்கு வித்தியாசமான ஒரு மரம் நிற்கிறது. மிகவும் உயரமாகவும், சடைத்தும் மிக்க அழகோடும் காணப்படும் இம் மரத்தின் பெயரென்ன?" என்று கேட்டாள்.

**சி**வபெருமான் பார்வதிதேவி காட்டிய மரத்தைப் பார்த்து விட்டு, "இது கற்பக விருட்சம். இதன் அருகில் நின்று இம் மரத்திடம் எதைக் கேட்டாலும் அதைத் தரும் நல்ல குணமுடையது. தேவர்கள், முனிவர்கள் இம் மரத்தின் அருகே வந்து விரும்பியவற்றைக் கேட்டுப் பெற்றுச் செல்வர்" என்றார்.

**அ**தைக் கேட்டு அதிசயித்த பார்வதிதேவி அந்த மரத்தின் அருகே சென்று, "எனக்கு ஒரு அழகிய பெண் வேண்டும். தருவாயா?" என்று கேட்டார் உடனே அந்த மரத்தின் அருகே தேவலோகப் பெண்ணைப் போன்ற அழகிய பெண் ஒருத்தி வந்து, பார்வதியின் அருகில் வந்து, "என்னைத் தோற்றுவந்த காரணம் என்ன? எனக்குக் கட்டளையிட்டால் அதை உடனே நிறைவேற்றுவேன்" என்றாள்.

"**எ**னது கணவரான சிவபெருமான், அந்த மரத்தின் பெயர் கற்பகவிருட்சம் என்று கூறி, அதனிடம் எதைக் கேட்டாலும் தரும் என்று கூறினார். அதைப் பரிட்சித்துப் பார்க்கவே ஓர் அழகிய பெண் வேண்டும் என்று கேட்டேன். நான் கேட்டு நீ வந்தமையால் நான் உனக்கு அசோக சுந்தரி என்று பெயர் வைக்கிறேன். உனக்குச் சந்திர வம்சத்தில் தோன்றிய நகுசன் என்பவன் கணவனாக வந்தமைவான். அதுவரை நீ இந்த நந்தன கானகத்தில் வசிப்பாயாக. உனக்குத் தேவையானவையாவும், தேவையேற்படும் போது கிடைக்கும். எமது பூதகணங்கள் உனக்கு உதவியாகவும் காவலாகவும் இருப்பார்கள். அச்சமின்றி இங்குவாழ்" என்றாள் பார்வதி. அந்த வனத்தில் அசோக சுந்தரி மிகவும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தாள்.

## குண்டா



**வி**ப்பிரசித்து என்று ஒரு கொடிய அரக்கன் இருந்தான். அவன் மக்களைக் கொடுமைப்படுத்துவான். தேவர்களுடன் போர் தொடுப்பான். மிகுந்த பலசாலியான அரக்கனுக்குக் குண்டா என்றொரு மகன் இருந்தான். அவன் தினமும் நந்தன கானகத்திற்குச் சென்று அதன் அழகை ரசித்துப் பார்ப்பான். அங்குள்ள ஏரியில் நீராடுவான். அவ் ஏரியில் மலர்ந்திருக்கும் அழகான நறுமணம் மிக்க தாமரைப் பூக்களால் மாலை கட்டி

அதை அணிந்து அழகு பார்த்து மகிழ்வான்.

**அ**வன் அன்று நந்தன கானகத்திற்குச் சென்றபோது மிகமிக அழகிய பெண் ஒருத்தி அந்த தந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். அவளின் அழகு அவனைத் திகைக்க வைத்தது. அவளின் அழகில் மெய்மறந்து அவளின் அருகே சென்றான். தூர இருந்து பார்த்ததை விட அருகில் இருந்து பார்க்கும் போது அவளின் அழகு பல மடங்கு அதிகரித்திருந்தது. பித்துப் பிடித்தவனைப் போல அவளின் அருகே சென்று தனது காதலை வெளிப்படுத்தினான்.

“**நீ**ர் யார் என்று எனக்குத் தெரியாது. பார்வதிதேவியின் விருப்பப்படி உருவானவள் நான். சந்திரவம்ச மன்னனான நகுசன் தான் எனது கணவன். அதனால் அவனைத் தவிர வேறு எவரையும் நான் திருமணம் செய்யமாட்டேன்” என்று சொல்லிப் பார்வதி தன்னை உருவாக்கியதில் இருந்து நடந்தவற்றைச் சொன்னாள்.

**கு**ண்டா மாயஜால வித்தைகளைக் கற்றவன். அவன் காலத்துக்குக் காலம் வெவ்வேறு உருவங்களை எடுப்பான். அவ்வுருவத்துடன் சென்று தீயசெயல்கள் பலவற்றைச் செய்வான். அன்று குண்டாவின் மனதில் ஒரு திட்டம் உருவானது. அவன் ஒரு அழகான பெண் போல மாறி அசோக சுந்தரியின் அருகில் வந்து அழுதழுது சொன்னான், “பெண்ணே, எனது கணவனை அரக்கனான குண்டா கொன்றுவிட்டான். நாமிருவரும் பல காலமாகக் காதலித்து வந்தோம். பல காரணங்களால் எமது திருமணம் நடைபெறவில்லை. திருமணத்திற்கு இருவரினதும் பெற்றோர்கள் தயாரான போது குண்டா என்னைக் கண்டு காமங்கொண்டு தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தினான். கொடுமைகள் பலவும் செய்தான். பரிசுகள் தந்தான். நான் அவனை முற்றாக நிராகரித்தேன். இருப்பினும் அவன் அடிக்கடி வந்து தொந்தரவுகள் செய்வான். அதைக் கேட்கச் சென்ற எனது காதலனை ஈவு இரக்கமின்றிக் கொன்றுவிட்டான். அதனால் இந்த நந்தவனக் கானகத்தில் வீற்றிருக்கும் மகாவிஷ்ணுவை ஆராதித்துத் தவம் செய்யப் போகிறேன். எனக்கு நீ துணை செய்ய வேண்டும்” என்று அழுதான்.

**அ**வனது அழுகையை உண்மையென்று நினைத்த அசோக சுந்தரி அவளுடன் சேர்ந்து தவம் செய்யச் சம்மதித்தாள். குண்டா அசோக சுந்தரியைத் தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டு அரக்கனாக மாறி அவளைப் பலாத்காரமாக அடைய முயற்சித்தான். அதனால் மிக்க சினமடைந்த அசோக சுந்தரி, “நான் தவம் செய்து நகுசனைக் கொண்டு உன்னைக் கொல்வேன்” என்று சூழுரைத்தாள்.

**ம**ன்னனான ஆயுவுக்கும், ராணி இந்துமதிக்கும் திருமணம் செய்து பலகாலமாகியும் குழந்தைகள் பிறக்கவில்லை. அவர்கள் குழந்தைக்காகத் தவம் செய்தனர். அவர்களது

கடுந்தவத்தால் மகிழ்ந்த தத்தாத்திபேரயம் அவர்களுக்கு மிகவும் பலம் வாய்ந்த தருமநெறி தவறாது வாழும் ஓர் உயர்ந்த மகன் பிறப்பான் என்று வரமளித்தார்.

**அ**ரசனும் அரசியும் மிகவும் மகிழ்ச்சியடைந்து தமக்குக் குழந்தை பிறக்கும் நன்நாளை எதிர்பார்த்திருந்தனர். அன்று அழகான ஒரு குழந்தை இந்துமதிக்குப் பிறந்தது. மன்னனான ஆயு மிகுந்த மகிழ்ச்சியுடன் கோவில்களில் பூசைகளைச் செய்வித்தான். தான தர்மங்களைத் தாராளமாக வழங்கினான். இதுவரை காலமும் தமக்கு உதவிகளைத் தவிர வேறு எதையும் செய்யாத மன்னனுக்கு வாரிசு பிறந்தது மக்களுக்கு அளவு கடந்த மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுத்தது. அதனால் மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

**ம**ன்னனுக்குப் பிள்ளை பிறந்ததை அறிந்த குண்டா மாய வேடம் தாங்கி அரண்மனைக்குச் சென்று குழந்தையை யாரும் காணாதவாறு தூக்கிச் சென்று தனது சமையற்காரனிடம் அதைக் கொடுத்து அதைக் கொன்று சமைக்குமாறு கட்டளையிட்டான். குழந்தையின் அழகைக் கண்டு அதனைக் கொல்ல விரும்பாத சமையற்காரன் அக் குழந்தையை இரகசியமாகக் கொண்டு சென்று வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் வைத்துவிட்டு வந்து அதற்குப் பதிலாகப் பெரியதொரு முயலைக் கொன்று அது குழந்தையை வெட்டிச் சமைத்த கறி எனக் கூற அசுரன் நம்பிவிட்டான்.

**கு**ழந்தையைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்த வசிட்டர் தனது ஞான திருஷ்டியால் அக் குழந்தையின் வரலாற்றை அறிந்து கொண்டார். வசிட்டர் அக் குழந்தைக்கு நகுசன் எனப் பெயரிட்டு அதற்குக் கற்க வேண்டியவற்றையெல்லாம் கற்பித்தார்.

**அ**வனுக்கு உரிய வயது வந்ததும் அவனை அழைத்து அவனது வரலாறு முழுவதையும் கூறி, அசுரனான குண்டாவைக் கொன்றுவிட்டு, பார்வதிதேவியால் உனக்கு நிட்சயம் செய்யப்பட்ட அசோக சுந்தரியைத் திருமணம் செய். அதற்காகத் தான் பார்வதிதேவியின் ஆசியுடன் நீ பிறந்திருக்கிறாய்" என்றார்.

**அ**சுரனான குண்டாவுடன் போர் செய்யப் படைகளுடன் நகுசன் புறப்பட்டான். இலட்சக்கணக்கான அசுர வீரர்கள் அவனுக்குத் துணையாக வந்தனர். குண்டா அடிக்கடி தேவர்களுடன் போர் செய்வான். அவர்களை வருத்துவான். அவர்களைச் சிறைப் பிடித்துக் கொடுமையாகச் சித்திரவதைப் படுத்துவான். நகுசன் மிகுந்த பலசாலி. அவனது மனைவி அசோக சுந்தரி பார்வதிதேவியால் உருவாக்கப்பட்டவள். அதனால் தேவர்களுடன் சேர்ந்து பார்வதிதேவியும் உதவுவாள் என்று நகுசன் நினைத்தான். தேவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அவனுக்கு ஆசி கூறியதோடு தேவையான ஆயுதங்கள் முழுவதையும் கொடுத்தனர். இந்திரன் அவனுக்கு அருகில் வந்து சொன்னான், "நீ அசுரர்களை

அழிப்பதற்காகப் பிறந்தவன். அதனால் குண்டாவைக் கட்டாயம் கொல்வாய். நாம் உனக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்வோம்" என்றான்.

**போ**ர் ஆரம்பமாகி உக்கிரமாக நடைபெற்றது. நகுசனின் படைவீரர்கள் உற்சாகத்துடன் அசுரர்களைத் தாக்கி அழித்துக் கொண்டிருந்தனர். நகுசன் அர்ச்சுனனைப் போல அம்புகளைத் தொடுத்துக் கொண்டிருந்தான். ஒரு அம்பு விட அது ஆயிரமாக பெருகி அசுரர்களைத் தாக்கியது. அதனால் பயந்த அரக்கர்கள் பாதாள லோகத்தை நோக்கி ஓட்டம் பிடித்தனர். குண்டாவை நகுசன் கொன்றான்.

**அ**சுரர்களை வென்ற நகுசன் முறைப்படி அசோக சுந்தரியைத் திருமணம் செய்தான். அசுரர்களால் பல கொடுமைகளை அனுபவித்த தேவர்கள், அசுரர்கள் அழிந்ததும் மகிழ்ச்சிப் பெருக்குடன் நகுசனின் திருமணத்திற்கு வந்து அவர்களை வாழ்த்திப் பரிசுகள் அளித்துவிட்டுச் சென்றனர். சிலகாலம் செல்ல அசோக சுந்தரி ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அதற்கு நகுசன் யயாதி எனப் பெயரிட்டு பாசத்துடன் வளர்த்து வந்தான். உரிய வயது வர யயாதிக்கு அவ் வயதுக்குரிய கல்வியை நகுசன் முனிவர்களைக் கொண்டு கற்பித்தான்.

**அ**டுத்துத் தந்தைக் கிளியான குஞ்சலா அழுது கொண்டிருந்த பெண்மணி பற்றியும், அவள் ஏன் இடைவிடாது அழுகிறாள் என்றும், அத்துடன் நதிக்கரையில் இருந்த சிவன் கோவிலில் சிவபூசை செய்துவிட்டு ஏன் அழுகிறாள் என்றும் கேட்டது.

**கு**ண்டாவின் மகனான விகுந்தன் தனது தந்தையை அனியாயமாக நகுசன் கொன்றுவிட்டான் என்று ஆத்திரங்கொண்டு அவனை அழிப்பதற்குத் தவம் செய்தான். அவனது உக்கிரமான தவத்தைக் கண்ட தேவர்கள் அஞ்சி நடுநடுங்கியவாறு விஷ்ணுவிடம் சென்று தம்மைக் காப்பாற்றுமாறு கேட்டு அவரை வணங்கினர்.

**அ**வர்களைக் கவலை கொள்ள வேண்டாம், அவனை அழித்து நான் உங்களைக் காப்பேன் அஞ்சாது செல்லுங்கள் என்று விஷ்ணு கூற தேவர்கள் மீண்டும் அவரை வணங்கிவிட்டு மிகுந்த நம்பிக்கையுடன் சென்றனர்.

**தே**வர்கள் சென்ற பின்பு விஷ்ணு அழகிய மோகினி வடிவம் எடுத்து நந்தன கானகத்திற்குச் சென்று அங்குள்ள இயற்கைக் காட்சிகளை ரசித்தபடி ஒய்யாரமாக நடந்தார். அந்த மாய அழகியின் அழகால் தன்வசமிழந்த விருத்தன் அவளின் பின்னால் சென்று அவளது அழகை ரசித்தான். நேரம் செல்லச் செல்ல அந்த அழகு அவனைக் காமவசப்படுத்தியது. அதனால் அவளின் அருகே சென்று, "பெண்ணே, நீ யார். இதற்கு முன் நான் இந்த நந்தன கானகத்தில் உன்னைக் காணவில்லை. நீ ஒரு தேவருலகப் பெண்ணாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். உனது அழகு என்னை மிகமிகக்

கவர்ந்துவிட்டது. நீயில்லாமல் என்னால் நிம்மதியாக வாழ முடியாது. அதனால் நீ என்னைத் திருமணம் செய்து கொள்" என்று இரந்தான்.

"**அ**ப்படியா மிகவும் நல்லது. நான் ஒரு வீரமுள்ள தைரியவனைத் தான் தேடியலைகிறேன். என்னைத் திருமணம் செய்ய விரும்புபவர் யாராக இருந்தாலும் எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்தால் அவரை நான் மணப்பேன்" என்றாள்.

**அ**தைக் கேட்ட விகுந்தன் மிக்க மகிழ்ச்சியடைந்து, "நீ சொல்லும் நிபந்தனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதனால் உனது நிபந்தனையைக் கூறு" என்றான்.

**நீ** ஏழு கோடி காமோத மலர்களால் சிவபெருமானை அர்ச்சிக்க வேண்டும். அதன்பின் அந்த ஏழு கோடி மலர்களாலும் ஓர் அழகான மாலை கட்டி எனக்குத் தரல் வேண்டும். அப்படித் தந்தாயேயானால் உன்னை நான் திருமணம் செய்வேன்" என்றாள்.

**வி**குந்தன் அதைக் கேட்டுவிட்டு காமோத மலர்களைத் தேடி எங்கும் சென்றான். ஆனால் அம் மலர்களை யாரும் காணவில்லை. அதனால் அம் மலர்களைத் தேட முடியாதிருந்தது. அதனால் அவன் அசுர குருவான சுக்கிராச்சாரியாரிடம் சென்று, "குருவே, தங்களை வணங்குகிறேன்" என்று கூறி அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினான். அசுரர்களுக்குக் கல்வியுடன் சகல வித்தைகளையும் கற்பிப்பவர் சுக்கிராச்சாரியார். கல்வி கற்கும் காலங்களில் அவன் சுக்கிராச்சாரியார் மீது அளவு கடந்த பக்தி வைத்திருந்தான். அவரின் குருகுலத்தில் தங்கியிருந்து கல்வி கற்ற அவன் ஏனைய அசுர மாணவர்களை விட வித்தியாசமானவனாக இருந்தான். குருவுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பு மரியாதையை அவன் அளவுக்கதிகமாகக் கொடுப்பான். ஏனைய சகல மாணவர்களையெல்லாம் கல்வியிலும், ஆயுதப் பயிற்சியிலும் விஞ்ச வேண்டும் என நினைத்து அதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவான். அவனது தன்னடக்கத்தையும், தன்னை மதிக்கும் தன்மையையும் கண்டு சுக்கிராச்சாரியார் மிகுந்த மகிழ்ச்சியடைவார். அதனால் அவருக்கு அவனின் மேல் தனியான ஒரு பாசம் இருந்தது.

**மி**க்க மகிழ்வுடன் விகுந்தனை அணைத்தெடுத்த சுக்கிராச்சாரியார், "கற்கும் போதே நீ சிறந்த பண்பாளனாகவும், குருவின் மீது அதீத பற்றுக் கொண்டவனாகவும் இருந்தாய். பல காலம் உன்னைக் காணவில்லை. இருப்பினும் உன்னை என்னால் மறக்க முடியவில்லை. அடிக்கடி நினைவில் வந்து என்னை மகிழ்விப்பாய். இப்பொழுது உன்னைக் கண்டதால் மிக்க மகிழ்வடைகிறேன். எனினும் உனது முகம் வாட்டமடைந்துள்ளது. அதற்கான காரணத்தைச் சொல்" என்றார்.

"**கு**ருவே, நந்தக கானகத்தில் ஒரு அழகான பெண்ணைக் கண்டு காதல் கொண்டேன். அவளிடம் நான் எனது காதலைக் கூறியபோது அவள் ஒரு நிபந்தனை விதித்தாள். ஏழு

கோடி காமோதர மலர்களால் சிவனை அர்ச்சிக்க வேண்டும் என்னும், பின் அந்த மலர்களை மாலையாகக் கோர்த்துத் தனக்குத் தரவேண்டும் என்று கூறினாள். நான் அம்மலர்களைத் தேடி எங்கும் சென்றேன் கிடைக்கவில்லை. நான் விசாரித்தவர்களெல்லாம் அப்படியான பெயரில் ஒரு மலர் இல்லை என்று கூறுகிறார்கள். அப்படியானால் என்னை அவள் ஏமாற்றிவிட்டாளா…?" என்று மீண்டும் சுக்கிராச்சாரியாரை வணங்கினான் விகுந்தன்.

"**ம**கனே, காமோதர மலர் மரங்களில் பூக்கும் மலரல்ல. காமோதரா என்றொரு பெண் இருக்கிறாள். அவள் மகிழ்வுடன் சிரித்தால் மஞ்சள் நிறமுள்ள நறுமணம் மிக்க காமோதர மலர்கள் உதிரும். அம் மலர்களைக் கொண்டு ஒருவன் சிவபெருமானை அர்ச்சித்தால் அவன் நினைத்தவையெல்லாம் உடனே நடைபெறும். கோரியது கிடைக்கும். ஆனால் அவள் அழுதாளேயானால் அவளது கண்ணீர் துளிகளில் இருந்து உதிரும் மலர்கள் சிவப்பு நிறத்தில் இருக்கும் அவற்றைத் தொடக்கூடாது. தொட்டால் பாவம் உண்டாகும். அதனால் மிக்க அவதானமாக அவளுடன் பழகுதல் வேண்டும். அவளின் மனதை ஆனந்தப்படுத்த வேண்டுமே தவிர துவளச் செய்தலாகாது" என்றார் சுக்கிரார்சாரியார்.

"**கு**ருவே, அவள் எங்கே வசிக்கிறாள்? அவளை எப்படிச் சந்திப்பது"? என்று விகுந்தன் கேட்டான்.

"**அ**வள் கங்கைக் கரையில் வசிக்கிறாள். சமுத்திரத்தில் இருந்து அவள் தோன்றியவள்" என்றார்.

**வி**குந்தனைக் கண்காணித்துக் கொண்டிருந்த தேவர்கள் அவன் காமோதராவைச் சந்திக்கும் போது அவளை அழவைக்கத் தீர்மானித்தனர். அந்த நோக்கத்துடன் தேவர்கள் நாரதரைச் சந்தித்து விகுந்தன் காமோதராவைச் சந்திக்காமல் இருக்கும் படி ஏதாவது சூழ்ச்சி செய்யுமாறு கூறினர். அதனால் நாரதர் விகுந்தனிடம் சென்று, "விகுந்தா, காமோதராவைச் சந்திப்பது இயலாத காரியமாகும். அவளை யாரும் சந்திக்காவிட்டால் அவள் மகிழ்வுடன் இருந்து சிரிப்பாள். அப்போ உதிரும் பூக்கள் சமுத்திர நீரில் மிதந்து கரையை வந்தடையும். அவற்றைப் பொறுக்கிச் சிவனை ஆராதனை செய். பின் அம் மலர்களால் மாலை கட்டி அவளுக்குக் கொடு" என்று கூறிவிட்டுச் சென்றார்.

**வி**குந்தனைச் சந்தித்து விட்டு நாரதர் காமோதராவிடம் சென்று, "பெண்ணே, பகவான் மகாவிஷ்ணு சிலகாலம் பூமியில் அவதாரம் எடுத்துப் பூமியில் வாழ நினைக்கிறார். அது உனக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கும் செய்தி. இனிமேல் சில ஆயிரம் ஆண்டுகள் நீ விஷ்ணுவைக் காண முடியாது" என்று கூறக் காமோதா மிகுந்த கவலையுடன் அழ ஆரம்பித்தாள். அப்போதும் நாரதரின் சூழ்ச்சியால் அவள் அழும்போது உதிர்ந்த பூக்கள் சிவப்பாக இராமல் மஞ்சள் நிறமாக இருந்தன. அத்துடன் அவை நறுமணம் அற்றவையாகவும்

இருந்தன. இவற்றை அறியாத விகுந்தன் பயபக்தியுடன் அவற்றைச் சேகரித்துச் சிவபெருமானை அர்ச்சித்து வந்தான். அது பார்வதிதேவிக்குப் பெரும் சினத்தை உண்டாக்கியது. அதனால் அவள் விகுந்தனைக் கொன்றுவிட்டாள். இதைக் கேட்ட கபிஞ்சலா தான் கேட்ட கேள்விக்கான விடையை அறிந்து மகிழ்ந்தது.

## குஞ்சலன் வரலாறு



**அ**ந்த ஆலமரத்தில் இருந்து தந்தைக் கிளியும் பிள்ளைகளும் பேசியவற்றைக் கேட்ட சியவன முனிவர் மிகுந்த ஆச்சரியத்துடன் குஞ்ஜலனைப் பார்த்து, "குஞ்ஜலனே, நீ கிளியாக இருக்கிறாய். அப்படி இருக்கும் நீ எப்படி இவ் வரலாற்றை அறிந்தாய். அதைப் பற்றி விபரமாக எனக்குச் சொல்வாயா?" என்று கேட்டார்.

"**மு**னிவரே, எனது வரலாற்றை உமக்குக் கூறுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வித்தியாதரன் என்ற ஓர் அந்தணன் கங்கைக் கரையில் வாழ்ந்து வந்தான். அவன் முறைப்படி வேதங்களைக் கற்றவன். மிகமிக ஒழுக்கமாக வாழ்ந்து அந்தணர்கள் செய்யும் கிரியைகளையும், யாகங்களையும் சிறப்பாகச் செய்து வந்தான். அவனுக்கு வாசுசர்மா நாமசர்மா, தர்மசர்மா என்று மூன்று புத்திரர்கள் இருந்தனர். அம் மூன்று பிள்ளைகளையும் வித்தியாதரன் மிக்க அன்போடு வளர்த்து வந்தான். அவன் சகலவிதமான கல்வியையும், வேதங்களையும் கற்றமையால் மக்கள் அவனைப் பெரும் பண்டிதன் என்று நினைத்து அவனுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து வந்தனர். வித்தியாதரன் தன்னைப் போல தனது மூன்று பிள்ளைகளும் நன்றாகச் சகல கல்விகளையும் கற்றுப் பண்டிதர்களாகி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று விரும்பிக் கற்பித்தான். அவர்களில் முதலாவது புத்திரனும், இரண்டாவது புத்திரனும் தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்று நினைத்து மிக்க அவதானத்துடன் கல்வி கற்றுப் பண்டிதர்களாயினர். ஆனால் அவனது மூன்றாவது மகனான தர்மசர்மா என்பவன் தந்தையின் சொற்களைக் கேளாது தீயவர்களுடன் சேர்ந்து தீயசெயல்களைத் தயக்கமின்றிச் செய்து கொண்டிருந்தான். இது தந்தைக்குப் பெரும் கவலையை அளித்தது. அதனால் அவர் தனது மூன்றாவது மகனுக்குத் தர்ம உபதேசம் செய்தார். அதையும் அவன் கேட்கவில்லை. மக்கள் அவனது மூத்த சகோதரர்கள் இருவரையும் மதித்தனர். அவர்களைக் கண்டால் கைகூப்பி வணங்கி ஆசனத்தில் இருத்தி


மதிப்புடன் வரவேற்று உபசரித்தனர். ஆனால் தர்மசர்மாவைக் காண்பதையே வெறுத்தனர். திட்டினர். அவமானப்படுத்தினர்.

**அ**தனால் மிகவும் வருந்திய தர்மசர்மா, தான் வேதங்களைக் கற்காமையால்தான் இந்தநிலை தோன்றியது என்று வருந்தி ஊரைவிட்டு வெளியேறி ஓர் ஆசானைக் கண்டு தனது வரலாற்றைக் கூறித் தனக்குக் கற்பிக்குமாறு வேண்ட அவர் மிக்க மகிழ்வுடன் அவனுக்குச் சகல சாத்திரங்களையும் கற்பித்தார். அதனால் அவன் எம்மைவிட சிறந்த கல்விமானாகிவிட்டான்.

**அ**வன் பெருங் கல்விமானாக வந்ததால் அவனை அவனது தந்தை மதித்தார். தனது மூத்த இரு பிள்ளைகளுக்கும் கொடுத்த மதிப்பை மூன்றாவது மகனுக்கும் கொடுத்ததால் ஊரவரும் அவனை மதித்தனர். வேதங்களைக் கற்ற பண்டிதர்கள் செய்யும் யாகங்களின் போது இடம்கொடுத்தனர்.

**த**ர்மசர்மா பெரு மகிழ்வுடன் வாழ்ந்து வரும்போது ஒரு வேடன் ஒரு கிளியைப் பிடித்து அதை விற்பதற்காக எங்கும் கொண்டு திரிந்தான். அக் கிளியைக் கண்ட தர்மசர்மா மிக்க மகிழ்வு கொண்டு அதை வாங்கி மிகவும் அன்புடன் வளர்த்து வந்தான். அத்துடன் வேதங்களையும் கற்பித்தான். அது சாத்திரங்களைக் கற்று தர்மசர்மா ஓதும் போது தானும் ஓதும். தர்மசர்மா அக் கிளியின் மீது உயிரை வைத்திருந்தான். ஒருநாள் எதிர்பாராத நேரத்தில் அக் கிளியைக் கண்ட பூனை ஒன்று அதைப் பிடித்துத் தின்றுவிட்டது. அதனால் பெருந்துன்பப்பட்ட தர்மசர்மா இறக்கும் போது அந்தக் கிளியின் நினைவாகவே இருந்து இறந்தான். அதனால் அடுத்த பிறவியில் அவன் கிளியாகவே பிறந்தான். அந்தக் கிளி வேறு யாருமல்ல நான் தான் என்று முனிவருக்குக் கிளி கூறியது.

## காந்தர்வ புத்திரிகள்



**தே**வலோகப் பாடகர்களான கந்தவர்கள் ஐந்து பேர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புத்திரிகளைப் பெற்றிருந்தனர்.

**சு**கசங்கீதி என்ற கந்தர்வனின் மகள் பிரமோகினி. மிகுந்த அழகி. நன்றாகப் பாடுவாள். அவளது பாடல்களைத் தேவர்கள் ரசித்து மகிழ்ந்து அவளைப் பாராட்டுவார்கள். அதனால் அவள் மிக்க மகிழ்ச்சியடைவாள். சுசீலன் என்ற கந்தர்வனின் மகள் சுசீலை. இவளும் நல்ல அழகி. குரல்வளம் மிக்க இவளது பாடல்களைத் தேவர்கள்

மகிழ்வுடன் கேட்டு ரசிப்பர். ஸ்வரவேதி என்ற கந்தர்வனின் மகள் சுஸ்வரா. இவளும் ஒரு பேரழகி. அவள் பாடத் தொடங்கினால் கந்தர்வர்களும் தேவர்களும் வந்து கூடி நின்று ரசிப்பர். சந்திரகாந்தன் என்ற கந்தர்வனின் மகள் சுதானை. இவளும் பேரழகி. நல்ல குரல்வளமுள்ள இவள் எந்நேரமும் மகாவிஷ்ணுவின் தோத்திரப் பாடல்களை மிகமிக இனிமையாகப் பாடிக்கொண்டிருப்பாள். சுப்பிரபன் என்ற கந்தர்வனின் மகள் சுதாரை. இவளும் ஒரு பேரழகி. இவளும் இனிமையாகப் பாடுவாள். இவர்கள் ஐவரும் தனித்தனியாகவும் சேர்ந்தும் பாடுவார்கள். இவர்கள் ஐந்துபேரும் சேர்ந்து பாடினால் தேவரின் உலகம் மௌன உலகமாகிவிடும். தேவர்கள் மிகவும் அமைதியாக இருந்து இவர்களது பாடல்களை ரசித்து மெய்மறப்பர்.

**வ**ருடா வருடம் வைகாசி மாதத்தில் இவர்கள் ஐவரும் பார்வதிதேவியைப் பூசை செய்து பாடல்களைப் பாடுவர். அந்த வருடமும் பார்வதிதேவிக்குப் பூசை செய்ய நினைத்த ஐவரும் காட்டுக்குப் பூக்கள் சேகரிக்கச் சென்றனர்.

**கா**டெங்கும் பூமரங்கள் பூத்துக் குலுங்கின. அவற்றைப் பறித்தெடுத்த ஐவரும் அங்கொரு ஏரி இருப்பதைக் கண்டனர். அதில் நீராடிவிட்டு அவ் ஏரியில் பூத்திருந்த செந்தாமரை மலர்களையும், வெண்தாமரை மலர்களையும், நீலோற்பலம், அல்லி முதலிய மலர்களையும் பறித்து வந்து களி மண்ணால் பார்வதியின் உருவத்தைச் செய்து அதனைப் பூசிக்கத் தொடங்கினர்.

**அ**ந்த வனத்தில் வேதநிதி என்ற முனிவர் நெடுங்காலமாகத் தவம் செய்து கொண்டிருந்தார். அவரது ஒரே மகனான தீர்த்தப்ரவரன் தந்தைக்குத் துணையாக முனிவரின் ஆச்சிரமத்தில் இருந்து தவம் செய்து கொண்டிருந்தான்.

**தீ**ர்த்தப்ரவரன் தந்தை பூசை செய்வதற்காக ஏரியில் தாமரை மலர்களைப் பறித்துச் செல்ல வந்தான். ஏரியில் நீராடிவிட்டு பூக்களுடன் ஏரியை விட்டு வெளியே வந்த தீர்த்தப்ரவரனைக் கண்ட பார்வதியைப் பூசித்துக் கொண்டிருந்த கந்தர்வப் பெண்கள் ஐவரும் அவனின் உடல் அமைப்பிலும், அழகிலும் மயங்கி, அவனின் அருகே வந்து தங்களைத் திருமணம் செய்து கொள்ளுமாறு இரந்தனர்.

**தீ**ர்த்தப்ரவரன் அந்தப் பெண்களின் பேச்சைக் கேட்டு அதிர்ச்சியடைந்தான். பின், "எனது தந்தை இவ் வனத்தில் தவம் செய்கிறார். அவருடன் சேர்ந்து நானும் தவம் செய்கிறேன். எனக்கு இல்லற வாழ்வில் அக்கறை இல்லை. அதனால் நான் பிரமச்சாரியாகவே வாழ விரும்புகிறேன்" என்று சொன்னான்.

**அ**வனது அழகிய தோற்றத்தால் மயங்கிய ஐவரும் காம உணர்வுடன் அவனின் அருகில் வந்து பேசியபோது அதை விரும்பாத அவன் தனது தவ வலிமையால் தன்னை மறைத்துக்

கொண்டான். அதனால் அந்த ஐந்து பெண்களும் மிக்க கவலையுடன் தமது இருப்பிடத்திற்குச் சென்றனர்.

**ம**றுநாள் அந்த ஐந்து கந்தர்வப் பெண்களும் தீர்த்தப்ரவரனைக் காண்பதற்காக நேரத்துடன் வந்து ஏரிக்கரையில் அமர்ந்திருந்தனர். தீர்த்தப்ரவரன் நீராடுவதற்காக ஏரிக் கரைக்கு வந்தான். ஐந்து கந்தர்வப் பெண்களும் அவனைக் கண்டதும் உணர்வுகள் மேம்பட அவனின் அருகில் வந்து காமங்கலந்த ஒரு வசீகரமான பார்வை பார்த்தனர். அதன் பின் காதல் மொழிகள் பேசினர். அதைக்கேட்ட தீர்த்தப்ரவரனுக்குக் கடுங்கோபம் வந்தது. எனினும் கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, “சகோதரிகளே, நான் தவம் செய்வதையே விரும்புகிறேன். அதனால் அதைக் குழப்பாது சென்று விடுங்கள்” என்றான்.

**கா**ம மயக்கத்தில் இருந்த அவர்களுக்கு அவன் சொன்னது விளங்கவில்லை. அதனால் அவனைத் தொட்டுப் பேச முற்பட்டனர். அதனால் பெருங்கோபங் கொண்ட தீர்த்தப்ரவரன், “நான் சொல்பவற்றைப் புரிந்து கொள்ளாது எனது தவத்தைக் குழப்ப நினைக்கும் நீங்கள் பிசாசுகளாக மாறக் கடவீர்கள்” என்று சபித்தான்.

**தா**ங்கள் அவனுக்கு எந்தத் தீங்கும் செய்யாது தமது மன உணர்வை வெளிப்படுத்தியமைக்குக் கொடிய சாபம் கொடுத்த அவனை, “நீயும் ஆண் பிசாசாக மாறி அலையக் கடவாய்” என்று சபித்தனர்.


**இ**வ்வாறு பிசாசாக மாறிய ஐந்து பெண்களும் தீர்த்தப்ரவரனும் பிசாசுகளாக மாறி அக் கானகமெங்கும் உணவு தேடியலைந்தன. இவ்வாறு பலநூறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆறு பிசாசுகளும் பசியாலும் தாகத்தாலும் வருந்தியபடி அக்காடு முழுவதும் அலைந்து திரிந்தன.

**ஒ**ருநாள் லோமசர் என்ற முனிவர் அக் காட்டு வழியாக வந்தார். அவரைக் கண்ட பிசாசுகள் பல காலங்களுக்குப் பின் தமக்கு நல்ல உணவு கிடைத்துவிட்டது என்ற மகிழ்வுடன் அவரைக் கொல்வதற்காக வந்து அவரின் மீது பாய்ந்தன. பிசாசுகள் பாய்ந்தனவே தவிர முனிவருக்கு எந்தக் கெடுதியும் ஏற்படவில்லை. அவரது தவப்பயன் அவரைப் பிசாசுகளில் இருந்து காப்பாற்றியது. தாம் கொன்று தின்ன முற்பட்டது. ஒரு பெரும் தவவலிமை உள்ள முனிவர் என உணர்ந்து அவரை வணங்கித் தமது வரலாற்றைக் கூறித் தம்மை அச் சாபங்களில் இருந்து விடுவிக்குமாறு மன்றாடின.

“**அ**வை சொன்னவற்றைக் கேட்டு மனம் வருந்திய முனிவர், “நீங்கள் ரேவா என்ற புனிதத் தீர்த்தத்திற்குச் சென்று நீராடுங்கள். உங்களது சாபம் நீங்கும். நீங்கள் உங்களது சுய உருவைப் பெறுவீர்கள்” என்றார்.

**அ**தைக் கேட்ட ஆறு பிசாசுகளும் ரேவா தீர்த்தக் கரைக்குச் சென்று அதில் நீராடித் தமது சுய உருவத்தைப் பெற்றன.

## 11. விகுந்தலனின் கதை



**ச**த்திய யுகத்தில் கங்கை நதிக்கரையில் கோமகுந்தன் என்றொரு வைசிகன் வாழ்ந்து வந்தான். அவன் கடல் கடந்தும் சென்று வியாபாரம் செய்ததால் அவனிடம் கோடிக்கணக்கான பொருள் இருந்தது. அவன் பெரும் தர்மவான். கேட்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாது கேட்டவற்றைக் கொடுக்கும் வள்ளல் தன்மை உள்ளவன். பிராமணர்கள் மீது பெரும் அன்பு கொண்டு அவர்களுக்குத் தான தர்மம் செய்வான். அவர்களைக் கொண்டு கிரியைகள் செய்வான். அவர்களுக்கு விளைநிலங்களையும் நல்ல இனப் பசுக்களையும் தானமாக வழங்குவான். இவ்வாறு தானதர்மங்களையும் கிரியைகளையும் முறைப்படி செய்து வந்தான்.

**த**னக்கு இறுதிக்காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்த அவன் தனது சொத்தில் ஆறில் ஒரு பங்கை ஆலயங்களைக் கட்டுதல், பாழடைந்த கோவில்களைப் புணரமைத்தல், குளங்கள் வெட்டுதல், கவனிப்பாரற்றுக் கிடக்கும் குளங்களைப் புனரமைப்புச் செய்தல் போன்றவற்றிற்குச் செலவு செய்தான். மிகுதிச் சொத்தில் அரைவாசியைத் தான தர்மங்கள் செய்தான். அதன்பின் எஞ்சிய சொத்துக்களைத் தனது இரு மகன்களான ஸ்ரீகுந்தலனுக்கும், விகுந்தலனுக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுத்து விட்டு தவம் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றான்.

**த**ந்தையால் கொடுக்கப்பட்ட பெருஞ் சொத்தைப் பெற்றுக் கொண்ட குந்தலனுக்கும், விகுந்தனுக்கும் பொருட்களின் பெறுமதியை விளங்கிக் கொள்ளாமையால் அவர்கள் கண்டபடி செலவு செய்தனர். அவர்களுடன் தீயவர்கள் பலரும் சேர்ந்து கொண்டனர். அதனால் அவர்கள் இருவரும் தமது மனம் போனபடி செலவு செய்தனர். தீய நண்பர்கள் அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்தமையாலும், நல்லவர்களும், இனத்தவர்களும், அறிஞர்களும் அவர்களை விட்டு விலகிச் சென்றதாலும் அவர்கள் விரைவில் வறியவர்களாயினர்.

**அ**வர்கள் இருவரும் வறியவர்களாகியதால் அவர்களுடன் சேர்ந்திருந்த தீய நண்பர்களும் அவர்களை விட்டு நீங்கிப் போய்விட்டனர். வறுமை கொடுமையாக அவர்களைத் தாக்கியது. உதவி செய்ய எவரும் முன்வரவில்லை. உணவு தேட முடியாது கஷ்டப்பட்ட அவர்கள்

இறுதியாகக் காட்டுக்கு வேட்டையாடச் சென்றனர். வேட்டையாடும் போது ஸ்ரீ குந்தலனை ஒரு புலி கொன்றுவிட்டது. விகுந்தலனை ஒரு பாம்பு தீண்ட அவனும் இறந்துவிட்டான்.

**அ**வர்கள் இருவரையும் யமகிங்கரர்கள் யமதர்மராசாவின் முன் கொண்டு சென்றுவிட்டனர். யமதர்மராசா அவர்களின் வரலாற்றையும், பழி பாவங்களையும் சித்திரபுத்திரரிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்பு சொன்னார், "ஸ்ரீ குந்தலனைக் கொடிய நாகங்கள் வாழும் நரகத்திற்கு அனுப்புங்கள். விகுந்தலனைச் சொர்க்கத்திற்கும் அனுப்புங்கள்" என்று கூறினான்.

**அ**தைக் கேட்ட விகுந்தலன் மிகவும் மனம் வருந்தி, 'யமதர்மராசாவே, நாங்கள் இருவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். இருவரும் சேர்ந்தே தீயசெயல்கள் பலவற்றையும் செய்தோம். இருவரும் எதிர்பாராதபடி புலியாலும், பாம்பாலும் கொல்லப்பட்டோம். அப்படியிருக்கும் போது ஏன் அவனை நரகத்திற்கும் என்னைச் சொர்க்கத்திற்கும் அனுப்புகிறீர்கள். இது நீதியான தீர்ப்பல்ல" என்று பணிவுடன் கேட்டான்.

**ய**மதர்மராசா அதைக் கேட்டுவிட்டுச் சொன்னார், "விகுந்தா, இங்கு பூலோகத்தைப் போல நீதி வழங்கப்படுதில்லை. பூலோகத்தில் பல வழிகளாலுல் நீதி மறுக்கப்படுகிறது. நீ கேட்டமையால் கூறுகிறேன். உனக்கு ஒரு பிராமணன் நண்பனாக இருந்தான். ஒருநாள் நீங்கள் இருவரும் யமுனைக் கரையில் உள்ள 'பாபபிராணஷணா' என்ற புனித தீர்த்தத்தில் நீராடினீர்கள். அது புண்ணிய தீர்த்தம். அதில் நீராடினால் ஒருவன் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும். உனக்கு அதைப் பற்றித் தெரியாது. உனது பிராமண நண்பனுக்கு யாவும் தெரியும். நீ அவனுடன் அன்பாகவும், பண்பாகவும் பழகியமையால் மகிழ்ந்து உனக்கு அந்த விபரங்களைக் கூறாது அழைத்துச் சென்று வற்புறுத்தி நீராடவைத்தான். தெரிந்தோ தெரியாமலோ செய்யும் செயல்கள் கட்டாயம். பாவத்தையும் புண்ணியத்தையும் கொடுக்கும். நீ எதையும் அறியாமல் நீராடினாலும் அதன் பயன் உன்னை வந்து அடைந்துவிட்டது" உனது சகோதரன் எந்தப் புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடாமையால் அவன் செய்த பாவங்கள் தொலையவில்லை. அதனால் தான் அவனை நரகத்திற்கு அனுப்பினேன்" என்றான்.

"**த**ர்மராஜர் தாங்கள் நீதி தவறாதவர் என்று உலகமக்கள் பேசுவதை நான் கேட்டுள்ளேன். தற்போது தாங்கள் வழங்கிய தீர்ப்பு நீதியானதல்ல. எனது சகோதரன் மீது அளவில்லாத பாசத்தை வைத்திருக்கும் நான் எனது சகோதரன் நரகலோகத்திற்குச் செல்வதால் மிகுந்த வேதனைப்படுகிறேன். அவனைக் காப்பாற்ற ஏதாவது வழியிருந்தால் சொல்லுங்கள். நீங்கள் சொல்வதை நான் செய்கிறேன்" என்றான் விகுந்தலன்.

"**வி**குந்தலா, எட்டுப் பிறவிகளுக்கு முற்பட்ட பிறவியில் நீ பெரும் புண்ணியம் செய்துள்ளாய். அப் புண்ணியத்தை நீ உனது சகோதரனுக்குக் கொடுத்தால் அவன் நரகத்தில் இருந்து வெளியேறுவான்" என்றான் யமதர்மராசன்.

“அப்படியா? அவைபற்றி எனக்கு எதுவும் தெரியாது. அது பற்றித் தாங்கள் எனக்குச் சொல்ல வேண்டும்” என்றான் விகுந்தலன்.

எட்டுப் பிறவிக்கு முற்பட்ட பிறவியில் நீ வாழ்ந்து வந்த ஊருக்கு சகுனி என்ற அந்தணனின் எட்டுப் பிள்ளைகளில் நான்கு பிள்ளைகளான நிர்மோகன், தியான கஸ்தன், ஜிதகாமன், குணாதிகன் என்ற நால்வரும் உன்னிடம் வந்தனர். அவர்கள் தவம் செய்து பெரும் பயனைப் பெற்றவர்கள். அவர்கள் யாகம் செய்வதற்காக உன்னிடம் பொருள் கேட்டு வந்தனர். அவர்களை மகிழ்வுடன் வரவேற்று அவர்களுக்கு உண்ண உணவும், தங்குவதற்கு இடம் ஆகியவற்றைக் கொடுத்து பொருளும் கொடுத்தாய். அது ஒரு பெரும் புண்ணியமாகும். அப் புண்ணியத்தை நீ உனது சகோதரனுக்குக் கொடு. அப்படிக் கொடுத்தாயேயானால் அவனும் உன்னைப் போலச் சொர்க்கத்திற்குச் செல்வான்” என்று யமதர்மராசன் சொல்ல விகுந்தலன் எட்டுப் பிறவிகளுக்கு முன் செய்த புண்ணியத்தைச் சகோதரனுக்குக் கொடுக்க இருவரும் சொர்க்கத்திற்குச் சென்றனர்.

## 12. ஆலயத்தை தூய்மை செய்தல்



துவாபர யுகத்தில் தண்டகன் என்றொரு திருடன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் கொடியவன் தான் திருடப்போகும் வீடுகளில் உள்ளவர்கள் எதிர்த்தால் அவர்களைக் கொடுமையாகத் தண்டிப்பான். திருட்டுப்பற்றி யாராவது பேசினால் அவர்களைக் கடுமையாகத் தண்டிப்பான். அதனால் அவனுக்கு எதிராக யாரும் கதைப்பதில்லை. பிராமணர்களின் வீடுகளுக்கும் சென்று அவர்களைப் பயமுறுத்தி அல்லது தண்டித்து அவர்களது பொருட்களைக் கவர்ந்து சென்றுவிடுவான். நண்பர்களோடு நல்ல முறையில் பழகுவான். அவர்கள் கஷ்டப்பட்டுப் பொருள் சேர்த்தால் அதையும் திருடிவிடுவான். பறவைகளையும், மிருகங்களையும் ஈவு இரக்கமின்றிக் கொன்று தின்பான். தினமும் மது அருந்துவான்.

ஒருநாள் அவன் விஷ்ணுவின் கோவில் ஒன்றுக்குள் திருடுவதற்காகச் சென்றான். அவனது கால்களில் மண்ணும் தூசிகளும் இருந்ததால் அவற்றை வாயிற்படியில் துடைந்தான். அதனால் தூசியும், மண்ணும் படிந்திருந்த அந்த வாயிற்படி சுத்தமானது. உள்ளே வீற்றிருந்த பெருமாளின் விக்கிரகத்தில் பெறுமதியான நகைகள் எதுவுமில்லாததால் அவன் விக்கிரகத்தை விட்டு விட்டு பெட்டகங்களில் இருந்த பூட்டை உடைத்து, அவற்றுள் இருந்த பெருமானின் நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள், பொன், நவரத்தின மாலைகள், பாத்திரங்களைத் திருடி அவற்றை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

**அ**ப்போது மூட்டை அவிழ்ந்து சில பாத்திரங்கள் வெளியே பெரும் சத்தத்துடன் விழுந்தன. அந்தச் சத்தத்தைக் கேட்டு கோவிற்காவற்காரர் அவனைப் பிடிக்க ஓடி வந்தனர். அவன் தப்பி ஓடுகையில் வழியின் குறுக்கே சென்று கொண்டிருந்த ஒரு பாம்பை அவன் மிதிக்க அது அவனைக் கடித்துவிட்டது. அந்த இடத்திலேயே அவன் இறந்து விட்டான்.

**அ**வனை யமதூதுவர்கள் யமனின் முன்னே கொண்டு வந்து நிறுத்தினர். சித்திரபுத்திரன் அவன் செய்ய பாவங்களையும், புண்ணியங்களையும் யமனுக்கு வாசித்துக் காட்டினான்.

“**இ**வன் ஒரு பயங்கரமான திருடன். பழி பாவங்களுக்கு ஒருபோதும் அஞ்சமாட்டான். எந்தப் பாவத்தையும் அச்சமின்றி செய்வான். இருந்தாலும் ஒரே ஒரு புண்ணியத்தைச் செய்துள்ளான். அவன் திருடச் சென்றபோது விஷ்ணு ஆலயத்தின் வாசற்படி அழுக்காக இருந்தது. அதை அவன் தனது கால்களால் சுத்தம் செய்தவன். அது அவனது எல்லாப் பாவங்களையும் நிக்கிவிட்டது”.

**அ**தைக் கேட்ட யமன் தனது சிங்காசனத்தில் இருந்து இறங்கி வந்து அவனை வணங்கிவிட்டு, “இவனை விஷ்ணு லோகத்திற்கு அனுப்பி வையுங்கள்” என்று ஆணையிட்டான். அத் திருடன் மகிழ்வுடன் விஷ்ணு லோகத்திற்குச் சென்றான்.

## ஓர் எலி செய்த புண்ணியச் செயல்



**தி**ரேதாயுகத்தில் வைகுந்தன் என்றோர் அந்தணன் வசித்து வந்தான். அவன் பெரும் விஷ்ணு பக்தன். தினமும் அவன் விஷ்ணுவின் கோவிலுக்குச் சென்று விளக்கேற்றி விட்டு, விஷ்ணுவை வழிபடுவான். ஒருநாள் அவன் விஷ்ணு கோவிலுக்குச் சென்று விளக்கேற்றி வணங்கிவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டான். சிறிது நேரத்தில் திரி கருகியதால் விளக்கின் ஒளி குறைய ஆரம்பித்தது. அந்த விஷ்ணு கோவிலில் பல எலிகள் வாழ்ந்து வந்தன. ஓர் எலி கருகிக் கொண்டிருக்கும் திரியை உண்ண எண்ணி அதை வாயால் கௌவி இழுந்தது. அதனால் மங்கிய ஒளி பிரகாசித்தது. விஷ்ணுவின் விக்கிரகம் மிகவும் தெளிவாகத் தெரிந்தது அப்படிச் செய்யும் போது ஒரு விஷ்ணுவின் பக்தன் உள்ளே நுழைந்தமையால் எலி பயந்து ஓடி விட்டது. அந்தப் பக்தன் விஷ்ணுவின் உருவத்தை முழுமையாகப் பார்த்து வணங்கினான்.

**சி**ல நாட்கள் செல்ல அந்த எலியை ஒரு பாம்பு பிடித்துத் தின்றுவிட்டது. அதை யமதூதுவர்கள் கயிற்றால் கட்டி இழுக்க முற்பட்டபோது அங்கு வந்த விஷ்ணுவின் தூதுவர்கள் அங்கு வந்து, "யமதூதுவர்கள் இந்த எலி விஷ்ணுவின் மிகப் பெரிய பக்தன். ஒருநாள் விஷ்ணுவுக்கு ஏற்றப்பட்ட தீபம் மங்கிய போது இவ் எலி திரியைப் பிடித்து இழுத்ததால் திரி பிரகாசமாக எரிந்தது. அதனால் முன்பு வழிபட்ட பக்தர்களால் விஷ்ணுவின் அருளைப் பெற முடியவில்லை. அதன் பின்பு வந்த பக்தர்கள் விஷ்ணுவின் விக்கிரகம் பெரும் ஒளிபட்டுத் தெளிவாக இருந்ததால் அவரை வழிபட்டு அவரின் அருளைப் பெற்றனர். அதனால் அதை எம்மிடம் ஒப்படையுங்கள். அதை நாம் விஷ்ணு லோகத்திற்கு அழைத்துச் செல்கிறோம்" என்றனர். அதை ஏற்ற யமதூதுவர்கள் எலியை விஷ்ணுவின் தூதர்களிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றனர்.

## லீலாவதியும் ராதாஷ்டமி விரதமும்



**ப**ல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் லீலாவதி என்றொரு கொடியவள் வாழ்ந்து வந்தாள். அவள் ஒருபோதும் நற்செயல்களைச் செய்ததில்லை. எப்போதும் யாருடனாவது பிரச்சினைப்படுக் கொண்டிருப்பாள். மாமிச வகைகளை அளவுக்கதிகமாக உண்பாள். மதுவும் குடிப்பாள். அத்துடன் நல்லவர்களை வெருட்டுவாள். சில சமயம் தாக்கியும் விடுவாள். அதனால் அவளைக் கண்டால் பெண்கள் ஒதுங்கி விடுவார்கள்.

**அ**வள் ஒருநாள் விஷ்ணுவின் கோவிலுக்கருகாமையால் சென்று கொண்டிருந்தாள். அங்கு பலர் கூடியிருந்து ராதாலச்சுமி விரதத்தை முறைப்படி அனுஷ்டித்துக் கொண்டிருந்தனர். ராதையின் விக்கிரகத்திற்கு பூ, பழம், சாம்பிராணி, வஸ்திரம் போன்றவற்றைப் படைத்து ராதாவை வணங்கிக் கொண்டிருந்தனர். சிலர் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு இருந்தனர். பலர் ராதாவின் தோத்திரப் பாடல்களை இசையுடன் பாடினர். சிலர் அப் பாடல்களுக்கேற்றவாறு நடனமாடிக் கொண்டிருந்தனர்.

**லீ**லாவதி அவற்றைப் பார்த்தாள். அது அவளுக்குப் புதுமையாக இருந்தது அதனால் அங்கிருந்த ஒரு வயோதிப மாதிடம், "இங்கு என்ன நடைபெறுகிறது. அந்த விக்கிரகத்தில் இருப்பவர் யார்? ஏன் உணவு வகைகளை விக்கிரகத்திற்கு முன்னால் படைத்திருக்கிறார்கள். இவர்கள் ஏன் பாடுகின்றனர், ஆடுகின்றனர்" என்று கேட்டாள்.

**அ**தற்கு அந்த வயோதிபப் பெண், "இன்று பாத்ரமாத சுக்கிலபட்ச அட்டமி தினமாகும். இன்று தான் ராதா பிறந்தாள். அதனால் மக்கள் எல்லோரும் ஒன்று கூடி ராதையின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்கள். அதற்காகத் தான் பழங்களையும், உணவு வகைகளையும் படைத்திருக்கின்றனர். இவ் விரதத்தை அனுஷ்டித்தால் நாம் தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாவங்கள் யாவும் அகன்றுவிடும்" என்று அவள் மகிழ்வுடன் கூறி அந்த விரதத்தை அவர்கள் கூறியபடி அனுஷ்டித்தாள்.

**சி**ல நாட்களின் பின் லீலாவதி பாம்பு தீண்டி இறந்துவிட்டாள். அதை அறிந்த யமதூதர்கள் வந்து அவளை இழுத்துச் சென்றனர். லீலாவதியை மதிப்போடும் கௌரவமாகவும் அழைத்துச் செல்ல வந்த விஷ்ணுவின் தூதுவர்கள் யமதூதர்களைத் தடுத்து, "யமதூதுவர்களே லீலாவதி ராதாஷ்டமி விரதத்தை முறைப்படி அனுஷ்டித்தாள். அதனால் அவள் யமலோகத்திற்குச் அழைத்துச் செல்லத் தேவையில்லை நாம் விஷ்ணுவின் தூதுவர்கள். அவளை அழைத்துச் செல்லவே வந்துள்ளோம். அதனால் அவளை எம்மிடம் ஒப்படையுங்கள்" என்று கேட்டனர். யமதூதர்கள் விஷ்ணுவின் தூதர்கள் சொன்னதைக் கேட்டு லீலாவதியை விஷ்ணுவின் தூதுவர்களிம் ஒப்படைத்துவிட்டு யமபுரிக்குச் சென்றனர்.

**கி**ருஷ்ணனின் இடப் பக்கத்தில் இருந்து தோன்றிய ராதா அங்கு வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறாள். கிருஷ்ணர் அவதரித்தபோது ராதையும் பிறந்தாள். விருஷபாணு என்பவர் அவளது தந்தை. கலாவதி என்பவள் அவளது தாயார். அவளை அயணகோஷர் என்பவர் மணந்தார். இந்தியாவில் இச் சரித்திரம் நாட்டுப்புறப் பாடல்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வரலாறு பத்மபுராணத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளது.

## மகாலட்சுமி விரத மகிமை



**து**வாபரயுகத்தில் சௌராஷ்டிராவில் 'பாத்ரச்ரவன்' என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனது மனைவி சுரதிசந்திரிக்கா. இவர்களுக்கு வேதசியாமபாலா என்றொரு மகள் இருந்தாள்.

**பா**த்ரச்ரவன் நீதியான அரசன். குடிமக்களைத் தனது மக்களாக நினைத்து அன்புடன் ஆட்சி செய்பவன். அந்நாட்டில் எந்த விதமான குறைகளும் இருக்கவில்லை. மக்கள் மிகுந்த மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். மிகச் சிறந்த விஷ்ணு பக்தனான அரசன் விஷ்ணுவின் கோவில்களை நல்ல முறையில் பராமரித்து வந்தான். அதனால் நாட்டில் மழைக்குக் குறைவில்லை. ஆறுகள் வற்றாது பாய்ந்தன.

நீர்நிலைகளில் நீர் வற்றாது நிற்கும். பசுக்கள் மிகவும் கொழுத்திருப்பதால் சத்தான பாலைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

**சி**யாமபாலா கோவிலுக்குச் சென்றிருந்தபோது மகாலட்சுமி ஒரு கிழவி வேடந்தாங்கி அரண்மனைக்கு வந்தாள். அவள் கிழவியாக இருந்தமையால் ஏதாவது உதவி கோரி அரசிடம் வந்திருப்பாள் என்று வாயிற்காவலன் நினைத்தான். “அதனால் உனக்கு உதவி தேவையானால் விஷ்ணுவின் பெயரால் அமைக்கப்பட்டு ஏழைகளுக்கும், பக்தர்களுக்கும் உதவி செய்யும் மடத்திற்குப் போ. அம் மடம் அரண்மனையின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கிறது. உதவிகோரி வருபவர்களை அங்கு அனுப்பும்படி அரசர் கட்டளையிட்டிருக்கிறார்” என்றான்.

**கி**ழவி பொக்கை வாயைத் திறந்து சிரித்தாள், “வாயிற் காவலனே, நான் எந்த உதவியையும் நாடி வரவில்லை. அரசியான சந்திரிக்காவைக் காண வந்தேன்” என்றாள்.

**கா**வலன் உள்ளே விட மறுத்துவிட்டான், “அரசியை யாரும் சந்திக்க வேண்டுமானால் அரசரிடம் அனுமதி பெற வேண்டும். அத்துடன் நீ யார்? உனது பெயர் என்ன? நீ எங்கே வசிக்கிறாய்? என்று கேட்டான்.

**அ**தற்கு கிழவி எனது பெயர் கமலா. எனது கணவரின் பெயர் புவனேசன். நான் துவாரவதியில் வசிக்கிறேன். அரசியிடம் அவளது முற்பிறப்பின் வரலாற்றைச் சொல்ல வேண்டும்” என்றாள்.

**க**மலம் என்பது தாமரை. அத் தாமரையில் வீற்றிருப்பவள் கமலா. புவனேசன் என்றால் உலகின் தலைவன். துவாரவதி என்றால் துவாரகை. கிழவி தான் யார் என்பதை காவலாளிக்கு வெளிப்படுத்திய போதும் அதை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

**வா**யிற் காவலன் கிழவியை உள்ளே செல்ல அனுமதிக்காததால் கிழவி சொன்னாள், “நீ என்னை உள்ளே செல்ல அனுமதிக்காததால் மகாராணியின் முற்பிறப்பைபற்றி உனக்குக் கூறுகிறேன். கேட்டுவிட்டு உள்ளே செல்ல அனுமதி” என்றாள்.

**வா**யிற் காவலன் என்ன செய்வது என்று தடுமாறும் போது கிழவி மகாராணியின் முற்பிறப்பைப் பற்றிக் கூற ஆரம்பித்தாள், “மகாராணியான சுரதிசந்திரிகா முற்பிறப்பில் ஒரு வைசிய குடும்பத்தில் பிறந்தாள். அவளது குடும்பத்தினர் அவளை செல்லமாக வளர்த்து பெரியதொரு வணிகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். கணவனுடன் சுரபிசந்திரிகா அடிக்கடி முரண்படுவாள். அவளுக்குக் கணவனைக் கண்டால் பிடிக்காது. அவள் கணவனுடன் முரண்படும் வேளைகளில் அவளது பெற்றோர் அவளைச் சமாதானம் செய்து வைப்பர். அவர்கள் சமாதானம் செய்து வைத்தாலும் சுரபிசந்திரிகாவின் மனம் சமாதானமடையாது

வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும். அவள் சிறந்த லட்சுமி பக்தை. மகாலட்சுமியை எந்நாளும் பூசை செய்து வழிபடுபவள். அன்று கணவனோடு பிரச்சினைப்பட்ட சுரபிசந்திரிகா இனிமேல் அவனுடன் வாழக்கூடாது என்று நினைத்து யாருக்கும் தெரியாது வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள்.

**வீ**ட்டை விட்டு வெளியே வந்த பின்பு அவளுக்குப் பயமாக இருந்தது. எங்கு செல்வது என்று புரியாமல் தான் தினமும் வணங்கும் லட்சுமிதேவியை நினைத்துத் தனது நிலையை எண்ணி மிகுந்த வேதனையுடன் அழுதாள். அப்பொழுது லட்சுமிதேவி நேரில் வந்து அவளைச் சந்தித்து, "எனது பக்தையான நீ துயரப்பட்டு அழலாமா? நான் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டேன். நீ மகாலட்சுமி விரதத்தை முறைப்படி அனுட்டி" என்று கூறிவிட்டு மறைந்தாள். அதன்பின் சுரபிசந்திரிகா மகாலட்சுமி விரதத்தை முறைப்படி அனுட்டிக்க மகாலட்சுமி மனம் மகிழ்ந்து விஷ்ணுவின் தூதுவர்களை அனுப்பி அவளை விஷ்ணு லோகத்திற்கு அழைப்பித்தாள். அங்கு அவள் நெடுங்காலம் இன்பமாக வாழ்ந்த பின் இப்போது மகாராணி சுரபிசந்திரிகாவாகப் பிறந்திருக்கிறாள். இதை மகாராணிக்குச் சொல்லவே நான் வந்தேன். அவள் முன்புபோலத் திமிருடன் தான் வாழ்கிறாள். இப்போது அவள் மகாலட்சுமியின் விரதத்தை அனுட்டிப்பதில்லை. அதனால் அவளுக்குப் பெருந்துன்பங்கள் வரக்காத்திருக்கின்றன" என்றாள் கிழவி.

"**அ**ம்மையே, மகாராணியின் முற்பிறப்பின் வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்கும் தாங்கள் மிகப் பெரிய மேதை என்று தெரியாது தங்களை அவமதித்துவிட்டேன். தயவு செய்து அதை மன்னித்து எனக்கு மகாலட்சுமியின் விரத மகிமையைக் கூற வேண்டும். அவ் விரதத்தை எவ்வாறு அனுட்டிக்க வேண்டும்" என்று காவலாளி கேட்டான்.

"**ம**கனே, அவ் விரதத்தைப் பற்றி அறிய விரும்பும் உனக்கு நான் அதைப்பற்றி விரிவாகச் சொல்லுதல் வேண்டும். மகாலட்சுமி விரதம் மார்கழி மாதத்தில் வருகிறது. அப்போது விஷ்ணுவுக்கும் லட்சுமிக்கும் பொங்கலைப் படைத்து கற்பூரதீபம் காட்டுதல் வேண்டும். நான்கு தினங்கள் தொடர்ந்து லட்சுமியைப் பூசித்தல் வேண்டும். கோதுமையால் செய்த பலகாரங்கள், தயிர், பழம், பூக்கள் ஆகியவற்றை லட்சுமிக்குப் படைக்க வேண்டும்" என்றாள்.

**வா**யிற்காவலன் அந்த முதிய பெண்ணை வணங்கிவிட்டு மகாராணிக்கு அப் பெண் வந்த செய்தியைச் சொல்லச் சென்றான்.

"**ம**காராணி, ஒரு முதிய பெண் தங்களைத் சந்தித்து உங்களது பூர்வீக வரலாற்றைக் கூற வேண்டுமாம். தனது பெயர் கலமா என்றும், தனது கணவனின் பெயர் புவனேசன் என்றும் சொன்னாள். தான் துவாரகையில் வசிக்கும் கிருஷ்ணனுடைய பக்தை என்றும் சொன்னாள்.

அவளது முகத்தில் ஒரு தெய்வீக ஒளி வீசுகிறது. தேவருலகப் பெண் போலத் தெரிகிறாள். தாங்கள் உத்தரவிட்டால் அவளை அழைத்து வருகிறேன்" என்றான் வாயிற்காவலன்.

"**வி**டிந்தால் இவர்களின் தொல்லைகளைத் தாங்க முடியவில்லை. சோதிடம் சொல்ல எனப் பலர் வருகிறார்கள். சாந்திகள், கிரியைகள் செய்ய வேண்டும் என்று சிலர் வருகிறார்கள். இவா எனது முற்பிறவி பற்றிச் சொல்லப் போகிறாவாம். முதலில் தன்னுடைய பிறவியைப் பற்றி அறியச் சொல், பின் அவளது கணவனான புவனேசனது பிறப்புப் பற்றி அறியச் சொல். உள்ளே அவளை விட்டால் இன்று முழுவதும் எதை எதையோ சொல்வாள். பின் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்பாள். அதனால் அவளை ஏசித்துரத்தி விடு" என்றாள் மகாராணி.

**வா**யிற்காவலன் சிறிது நேரம் நின்று யோசித்தான். அந்த மூதாட்டியைப் பார்த்தால் லட்சுமிதேவி போல இருக்கிறது. மகாராணி ஆராயாது கோபங்கொள்பவள். திமிராகப் பேசுபவள். அதனால் மூதாட்டி அவளைச் சந்தித்து முரண்படுவதை விடுத்து அவளுக்கு ஏதாவது சாட்டுச் சொல்லி அனுப்புவோம் என்று நினைத்து மூதாட்டியின் அருகே சென்று, "இன்னொரு நாள் வரும்படி கூறினான். மூதாட்டி செல்லும்போது மாகாராணி உப்பரிகையில் நிற்பதைக் கண்டாள். அந்த மூதாட்டி பலமாக அழுதுகொண்டு போவதைக் கண்டு வாயிற்காவலனை அழைத்து அம் மூதாட்டியை அழைத்து வருமாறு கூறினாள்.


**மூ**தாட்டி வந்து அவளின் முற்பிறப்புக் கதையைக் கூறி அவளை மகாலட்சுமி விரதத்தை முறைப்படி அனுஷ்டிக்குமாறு கூறி அதை எப்படி அனுஷ்டிப்பதென்றும் கூறிவிட்டுச் சென்றாள். தான் அந்த விரதத்தை அனுஷ்டிப்பதாகக் கூறினாள்.

**சி**ல ஆண்டுகள் கழிய சியாமபாலாவை மன்னனான சித்தேஸ்வரனின் மகனுக்குத் திருமணம் செய்துவைத்தனர். சியாமபாலா தனது கணவனுடன் புகுந்த வீட்டுக்கு வந்த போது பாத்ரச்ரவனும் சுரதிசந்திரிக்காவும் தங்கியிருந்த வீட்டை விட்டு மகாலட்சுமி சென்றுவிட்டாள். அதனால் அவர்கள் வறுமைப்பட்டு நடுத்தெருவுக்கு வந்துவிட்டனர். அன்றன்று உணவுக்கே பெரும் துன்பப்பட்டனர்.

**பா**த்ரச்ரவன் தனது மகளைப் பார்ப்பதற்காக அவளது வீட்டக்குச் சென்றான். **த**ந்தையைக் கண்ட அவள் பெரும் வேதனையடைந்தாள். தந்தைக்கு உணவு கொடுத்த பின் நிறையப் பொன்னும், பொருளும் கொடுத்தாள். பாத்ரச்ரவன் மகள் கொடுத்த ஏராளமான பொருட்களுடன் தனது வீட்டுக்கு வந்த போது அவனது மகள் கொடுத்த பொன்னும் திரவியமும் கரிக்கட்டிகளாக மாறிக்கிடந்தன.

**க**ணவன் கொண்டு வந்த பொருட்கள் யாவும் கரியாக மாறியதால் மிகுந்த வேதனைப்பட்ட சுரதிசந்திரிகா மகளைப் பார்ப்பதற்காக மகளின் வீட்டுக்குச் சென்றாள். அவள் வந்த நாள் லட்சுமி விரதம் அனுஷ்டிக்க வேண்டிய நாள். அதனால் தாயும் மகளும் சேர்ந்து முறைப்படி மகாலட்சுமி விரதத்தை அனுஷ்டித்தனர். அதன் பலனால் அவர்களுக்குப் பெரும் பொருள் கிடைத்தது.

## 16. தினநாதனும் விசுவாமித்திரரும்



**து**வாபரயுகத்தில் தினநாதன் என்ற வலிமை மிக்க ஓர் அரசன் இருந்தான். அவன் சிறந்த விஷ்ணுபக்தன். நாட்டை நீதிநெறி தவறாது ஆண்டு வந்தமையால் மக்கள் எந்த விதமான குறைகளும் இன்றி மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். கோவில்களில் சிறப்பாகப் பூசைகள் நடைபெற்றன. அதனால் அந்தணர்கள் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்தனர். பருவமழை தவறாது பெய்வதால் நீர் நிலைகளில் வற்றாது நீர் நின்றது. ஆறுகள் அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தன. தானியங்களின் விளைச்சலுக்குக் குறையில்லாது இருந்தது. சோலைகள் எங்கும் கனிதரு மரங்கள் நிறைந்து காணப்பட்டன. முனிவர்கள் அச்சமின்றி நிம்மதியாகத் தவம் செய்து கொண்டிருந்தனர்.

**இ**வ்வளவு இருந்தும் தினநாதனுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. பூசைகள், தானதர்மங்கள் செய்தபோதும் பலன் ஏற்படவில்லை.

**ம**ன்னன் மிகுந்த கவலையுடன் இருக்கும் போது காலவ முனிவர் அவனது அரண்மனைக்கு வந்தார். மன்னன் உரியமுறைப்படி அவரை வணங்கி வரவேற்று ஆசனத்தில் அமர்த்திவிட்டுத் தனக்குப் பிள்ளைகள் இல்லாத குறையை எடுத்துச் சொல்லிக் கவலைப்பட்டான். அத்துடன் தனக்கு ஒரு பிள்ளை பிறக்கத் தான் என்ன செய்ய வேண்டும் என்று கவலையுடன் கேட்டான்.

**மு**னிவர் கண்களை மூடி தியானம் செய்துவிட்டுச் சொன்னார், “மன்னவா உனக்கு முன் செய்த பாவங்கள் சூழ்ந்தமையால் தான் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் ஒரு பெரிய யாகம் செய்தல் வேண்டும் அப்போது எல்லா வகையிலும் சிறந்த ஒருவரைப் பலியிட வேண்டும். அப்படிப் பலி கொடுத்தால் உனக்கு மிக்க வலிமையுடைய ஒரு மகன் பிறப்பான். இல்லாவிட்டால் உனக்குக் குழந்தைப் பேறு கிடையாது” என்றார்.

**அ**தைக்கேட்ட மன்னன் திகைத்துப் போனான். தான தர்மங்களை அளவின்றிச் செய்யும் நான் நரபலி கொடுக்க வேண்டுமா என நினைத்து மனம் குழம்பினான். அதனால் அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. எந்நேரமும் அதைப்பற்றி நினைத்து நினைத்துக் கவலைப்பட்டதால் அவனால் ஒழுங்காக அரசாட்சி செய்ய முடியவில்லை.

**ம**ன்னனுக்குப் பிள்ளை ஒன்றைப் பெற்றெடுக்கும் ஆசை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வந்தது. அதனால் பழிபாவங்களுக்கஞ்சாது நரபலி கொடுக்கக் கூடிய ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தான். அவனது சேவகர்களும் நாடு முழுவதும் தேடினர். கடைசியாக தசிபுரம் என்ற கிராமத்தில் கிருஷ்ணன் அன்றன்று உணவுக்கே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள் இருந்தனர். சேவகர்கள் மன்னனின் விருப்பத்துக்கு அழைத்து வந்தனர். அவர் மூத்த மகனையும் இளைய மகனையும் தர மாட்டேன் என்று மறுத்துத் தனது இரண்டாவது மகனைக் கொடுத்தார். மன்னன் அவனுக்குத் தேவையான பொன்னை அள்ளிக் கொடுத்தான்.

**ம**கனைப் பிரிந்த துக்கத்தில் பிராமணனும் அவனது மனைவியும் அழுது அழுது வேதனைப்பட்டமையால் அவர்களது கண்கள் குருடாயின. அரச சேவகர்கள் அச் சிறுவனை யாகம் நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லும் போது விசுவாமித்திரரது ஆச்சிரமத்தைக் கடந்து சென்றனர். அவர்களைக் கண்ட விசுவாமித்திர முனிவர் அவர்களை அழைத்து, “இந்தச் சிறுவனை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்” என்று கேட்டார். அதற்குச் சேவகர்கள் நடந்தவற்றை விபரமாகக் கூறினார். அதனால் மிக்க வேதனை அடைந்த விசுவாமித்திர முனிவர் அச் சிறுவனை விட்டு விட்டுத் தன்னைப் பலியிடுமாறு சொன்னார். அவர்கள் அதை ஏற்காமையால் விசுவாமித்திர முனிவரும் அவர்களுடன் சென்றார்.

**அ**வனைக் கண்ட மன்னன் திகைப்படைந்தான். முனிவரால் தனக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ எனப் பயந்து அவரை வணங்கி வரவேற்றுத் தனக்குப் பிள்ளை ஒன்று தேவை என்று அழுதான்.

**தா**ன தரும வள்ளலான மன்னன் பெரும் துயரத்துடன் அழுவதைக் கண்ட விசுவாமித்திரரின் மனம் இழகியது, “மன்னா, யாகத்திற்கு எந்தப் பலியும் தேவையில்லை. உயிர்களைப் படைக்கும் இறைவன் தான் உயிர்களை அழிக்கும் உரிமையை உடையவன். அதனால் பலி கொடாது யாகத்தை நடத்தி உனக்கு பிள்ளை பிறக்க ஆவன செய்வேன்” என்று கூறி யாகத்தைப் பலி கொடுக்காது நடத்தி முடித்தார்.

**ம**ன்னன் பிராமணனை அழைத்து அவனது புத்திரனை அவனிடம் ஒப்படைத்தார். அந்த மகிழ்ச்சியால் பிராமணனுக்கும் மனைவிக்கும் இழந்த பார்வை மீண்டும் கிடைத்தது. மன்னனுக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

## சித்திரசேனன்



**கி**ருஷ்ணாஷ்டமி விரதம் ஒவ்வொரு வருடமும் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தநாளாகிய பாசுரபதமாதம் கிருஷ்ணபட்சம் அட்டமித்திதியன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

**சி**த்திரசேனன் என்றொரு கொடுங்கோல் அரசன் தருமநெறிகளில் இருந்து விலகி தீயவர்களுடன் சேர்ந்து நாட்டு மக்களுக்குத் தீயசெயல்கள் பலவற்றைச் செய்து வந்தான். அதிக வரி பெறுதல், கோவில்களுக்குப் போதிய உதவிகள் செய்யாமை, தனவந்தர்களை அச்சுறுத்திப் பணம் பெறல், மதுபான வகைகளை நாட்டுக்குள் பிறதேசத்தவர்கள் விற்பதற்குப் பணம் வாங்கிக் கொண்டு அனுமதித்தல், அழகான பெண்களைக் கெடுத்தல் போன்ற தீயசெயல்களைச் செய்து வந்தான்.

**ஒ**ருநாள் வேட்டைக்குச் சென்ற அவன் ஒரு புலியைக் கண்டு அதைத் துரத்திக் கொண்டு சென்றான். புலி மிகவும் வேகமாக ஓடியது. அவன் புலியைப் பின் தொடர்ந்து சென்றான். புலி யமுனை ஆற்றுப் பக்கம் ஓடிச் சென்று மறைந்து விட்டது. அரசன் புலியைத் தேடினான். அன்று ஜன்மாஷ்டமி. அன்று பகவான் கிருஷ்ணர் அவதரித்த நாள். தேவருலகில் இருந்து வந்த அப்ஸ்சரஸ் பெண்கள் ஒன்று கூடி கிருஷ்ணனது பாசுரங்களை இனிமையாகப் பாடி ஆடியபடி விரதத்தை அனுஷ்டித்து பகவானின் பிறந்த தினத்தை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட சித்திரசேனன், அப்ஸ்சரசுகளிடம் சென்று தானும் கிருஷ்ணனது பிறந்தநாளில் கலந்து கிருஷ்ணாஷ்டமி விரதத்தை அனுஷ்ட்டிக்கப் போவதாகச் சொன்னான். அவர்கள் மிக்க மகிழ்வுடன் ஒத்துக் கொண்டனர். அவன் அன்று முழுவதும் விரதமிருந்து கிருஷ்ணனது பிறந்தநாளை மகிழ்வுடன் கொண்டாடினான். அதனால் அவன் செய்த அனைத்துப் பாவங்களும் நீங்கி விட்டன. அவன் இறந்ததும் விஷ்ணு லோகத்தில் இருந்து வந்த தூதுவர்கள் விஷ்ணு லோகத்திற்கு அவனை அழைத்துச் சென்றனர்.

## பீமனும் விஷ்ணு லோகமும்



**து**வாபரயுகத்தில் பீமன் என்ற சூத்திரன் வாழ்ந்து வந்தான். அவன் பஞ்சமா பாதங்கள் அனைத்தையும் அச்சமின்றிச் செய்வான். பிறரிடம் பணம், பொருள் பெற்றுக் கொண்டு அவர்கள் கூறும் நபரை அவர்கள் கூறிய படி தண்டிப்பான். கொலையும் செய்வான்.

**ஒ**ருநாள் ஒரு பிராமணனின் வீட்டுக்குக் கொள்ளையடிப்பதற்காக யாசகனைப் போல வேடமிட்டுச் சென்றான். அவன் பிராமணனிடம் பிச்சை கேட்ட போது அப் பிராமணன் சொன்னான், "நான் முதியவன். எனக்கென்று யாருமில்லை. அதனால் தனித்து வாழ்கிறேன். அதனால் உள்ளே அரிசி, பருப்பு குழம்புக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் இருக்கின்றன. அவற்றை எடுத்துச் சமைத்துச் சாப்பிடு".

**அ**ந்தப் பிராமணனின் வீட்டில் இருந்த பொருட்களை எடுத்துச் சமைத்துச் சாப்பிட்ட பீமன், "அந்தணரே, எனக்கும் யாரும் இல்லை. எனது மனைவி இறந்துவிட்டாள். எனக்குப் பிள்ளைகளும் இல்லை. நீங்கள் வயோதிபராகிவிட்டதால் உங்களுக்கு உதவியாக நான் உங்களுடன் இருக்க விரும்புகிறேன்" என்று கூறி அங்கேயே தங்கிவிட்டான்.

**பி**ராமணனது வீட்டில் தங்கிய பீமன், பிராமணனுக்குச் சமைத்துக் கொடுத்தான். குளிப்பாட்டினான். அவரது உடைகளைத் துவைத்துக் கொடுத்தான். இவ்வாறு பிராமணனுக்குச் சிறு சிறு உதவிகளைச் செய்து கொண்டிருந்தான். காலப்போக்கில் அவன் திருடுவதை விட்டுவிட்டு பிராமணனுக்கு உதவியாக இருந்தான். பிராமணன் வசதியானவன். அவனிடம் பணமும் இருந்தது.

**பி**ராமணன் பணக்காரன் என்று அறிந்தவேறொரு திருடன் பிராமணனின் வீட்டுக்குத் திருடவந்தான். அதைக் கண்ட பீமன், "பிராமணனது வீட்டில் திருடுவது பாவம். அந்தப் பழி ஒருபோதும் நீங்காது. அதனால் சென்று விடு" என்றான். வந்த திருடன் அதை ஏற்காமையால் இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது. அதனால் மிக்க கோபம் கொண்ட திருடன் ஓர் ஆயுதத்தால் பீமனைத் தாக்க அவன் இறந்து விட்டான். அவன் இறந்ததை அறிந்த விஷ்ணுவின் தூதுவர்கள் அங்கு வந்து சகல மதிப்பு மரியாதையுடன் அழைத்துச் சென்று விஷ்ணு லோகத்தில் விட்டனர். பீமன் அங்கு நெடுங்காலம் இன்பமாக வாழ்ந்தான்.

## 19. கேமப் பிரபா விஷ்ணு லோகம் அடைதல்



**கா**ஞ்சன் என்ற நகரில் வல்லபன் என்பவன் தனது மனைவியான கேமப் பிரபாவுடன் வாழ்ந்து வந்தான். அவன் பெரும் தனவந்தன். சகல வசதிகளும் அவனுக்கு இருந்த போதும் அவன் தனது மனைவியைக் காரணமின்றித் துன்புறுத்துவான். பெற்றோர், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் மனைவியைத் துன்புறுத்துவது பாவம் என்று சொன்னால் அவர்களையும் தாக்குவான். அவனுக்குப் பயந்து யாரும் எதுவும் சொல்வதில்லை.

**அ**ன்று வல்லபன் தனது மனைவியைக் கடுமையாகத் தாக்கிவிட்டான். அதனால் அவள் மிகவும் மனம் வருந்தினாள். யாரிடமும் எதைச் சொன்னாலும் அதைக் கணவனுக்குச் சொல்ல எல்லோரும் பயப்படுவார்கள் என்று உணர்ந்த அவள் அன்று முழுவதும் உணவு உண்ணாமலும், நீரைப் பருகாமலும் இருந்து விஷ்ணுவிடம் சொல்லி அழுதாள். அன்று ஏகாதசி சிரதநாள். விஷ்ணுவுக்கு மிகவும் பிடித்த நாள் ஏகாதசி. அன்று ஏகாதசி என்று கேமப் பிரபாவுக்குத் தெரியாது. தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ விசேட தினங்களில் விரதமிருந்தால் அதற்கான பயன் சம்பந்தப்பட்டவர்களைச் சென்றடையும். இது விஷ்ணுவின் கட்டளையாகும். அதனால் ஏகாதசி விரதமிருந்த புண்ணியம் கேமப் பிரபாவைச் சென்றடைந்தது. அவள் இறந்ததும் விஷ்ணுவின் தூதுவர்கள் வந்து அவளை அழைத்துக் கொண்டு விஷ்ணு லோகத்திற்குச் சென்றனர்.

**தி**ரோதா யுகத்தில் சுதர்சன் என்றோர் அந்தணன் வாழ்ந்து வந்தான். அவன் அந்தணர்களுக்கு என விதிக்கப்பட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பதில்லை. தீயவர்கள் பலர் அவனது நண்பர்களாக இருந்தனர். அதனால் அவன் தீயவர்களுடன் சேர்ந்து தீயசெயல்கள் பலவற்றையும் செய்து வந்தான். வேதங்களை அவன் கற்கவில்லை. வேதம் ஓதும் பிராமணர்களைக் கேலி செய்வான். தன்புறுத்துவான். மாமிச வகைகளை உண்பான். மதுவும் அருந்துவான். அதனால் அவனது பெற்றோரும் உறவினர்களும் அவனை மதிப்பதில்லை. அந்தணச் சிறுவர்களை அவனோடு சேரவிடுவதில்லை. அதனால் கோபம் கொள்ளும் அவன் அந்தணச் சிறுவர்களையும் அந்தணர்களையும் காரணங்கள் எதுவுமின்றித் தாக்குவான். கேலி செய்வான். அவர்களது உடைமைகளைச் சேதப்படுத்துவான்.

**இ**வ்வாறு தீயசெயல்களைச் செய்து வந்த சுதர்சனன் இறந்தபின் நரகலோகத்திற்குச் சென்று கொடுமையான பல தண்டணைகளை அனுபவித்தபின் பன்றியாகப் பிறந்து அசுத்தமான பழுதடைந்த உணவுகளை உண்டு வந்தான். பன்றியாகப் பிறந்த அவன் இறந்த பின்பு காகமாகப் பிறப்பெடுத்தான். விஷ்ணுவின் கோவிலுக்குச் சென்றான். அவனுக்குத் தாகமாக இருந்தது. எங்கும் தேடியும் தண்ணீர் கிடைக்கவில்லை. அன்று விஷ்ணுவுக்குத் திருமஞ்சனம் செய்யப்பட்டது. அந் நீர் வாய்க்கால் வழியாக செல்லும் போது அவன் அந்நீரைக் குடித்தான். அதனால் அவன் செய்த பாவங்கள் யாவும் அவனை விட்டு விலகிச் சென்று விட்டன. அதனால் காகப் பிறப்பெடுத்து அலைந்து திரிந்த அவன் புண்ணியலோகமாகிய சொர்க்கத்திற்குச் சென்றான்.

**தி**ரேதாயுகத்தி சௌராஷ்டிரா என்னும் இடத்தில் சங்கரன் என்பவன் தனது மனைவியான காளிப்பிரியாவுடன் நிம்மதியின்றி வாழந்து வந்தான். அவளுக்குத் தனது கணவனான சங்கரனைப் பிடிக்காது. அடிக்கடி இருவருக்கிடையேயும் பிரச்சினைகள் வரும். சண்டைகள் வரும். அதன் காரணமாக இருவரும் பிரிந்து இருப்பார்கள். பெற்றோர் அவர்களைச் சமாதானப்படுத்தினாலும் சாமாதானம் இரண்டொரு தினங்களில் சண்டையாக மாறிவிடும். இவன் எப்போது மரணமடைவான். நான் அப்போது தான் மகிழ்ச்சியாக வாழ்வேன் என்று அவள் அடிக்கடி தனது நண்பிகளுக்குக் கூறுவாள். அத்துடன் சண்டை வரும்போது நீ செத்தால் தான் நான் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வேன் என்று நாக்கூசாது சொல்வாள். அதைக் கேட்டு சங்கரன் மிகவும் வேதனையடைவான். அவன் ஏதாவது கதைத்தால் அவனைத் தாக்கவும் தயங்கமாட்டாள். அவளுக்குப் பயந்து அவன் ஒதுங்கி வாழ்ந்து வந்தான். ஒருநாள் காளிப்பிரியா தனது கணவனைக் கொன்று விட்டு வேறு நகருக்குச் சென்றுவிட்டாள்.

**அ**வள் தலைமறைவாக மறைந்து வாழும்போது ஒருநாள் ஒரு விஷ்ணு கோவிலில், விஷ்ணுவின் பக்தர்கள் பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தனர். காளிப் பிரியாவுக்குப் பொழுது போகாமையால் விஷ்ணுவின் கோவிலுக்குச் சென்று, விஷ்ணுவின் பக்தர்களுடன் சேர்ந்து பஜனைப் பாடல்களைப் பாடி வந்தாள். விஷ்ணுவின் பக்தர்கள் அவளைத் தம்முடன் சேர்த்துக் கொண்டனர். அவர்கள் ராதாஷ்டமி, மகாலட்சுமி விரதம், ஏகாதசி விரதம் முதலிய விரதங்களை அனுஷ்டித்தனர். அவர்களைப் பார்த்து காளிப்பிரியாவும் அவ்விரதங்களை அனுஷ்டித்தாள். அதனால் அவள் செய்த பாவங்கள் யாவும் அழிந்துவிட்டன. விஷ்ணுவின் விரதங்களை அவள் விஷ்ணுவின் பக்தர்களோடு சேர்ந்து அனுஷ்டித்ததால் அவள் இறந்த பின்பு மோட்சத்தை அடைந்தாள்.

**து**வாபர யுகத்தில் வாழ்ந்த ஆதித்தியன் என்ற அந்தணன் துளசிச் செடியின் பெருமைகளைக் கேட்டு அதில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வந்தான். துளசி இலைகளை நீரில் இட்டுவிட்டுச் சிலமணி நேரங்கழித்து அந்த நீரைக் குடித்தால் சகல நோய்களும் மாறும்.

மகாவிஷ்ணுவின் அருள்கிடைக்கும். அத்துடன் துளசி என்ற பெண் மகாவிஷ்ணுவின் விருப்புக்குரிய மனைவி. அதனால் தான் அவளை புனிதமான துளசிமரமாக்கி அவளை வணங்குவோர் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுப் பூமியில் இன்பமாக வாழ்வர். பின்பு சொர்க்கத்திற்குச் சென்று நீண்ட காலம் பேரின்பமாக வாழ்வர் என்று கோவிலில் வந்த பிரசங்கி ஒருவர் சொன்னதை நம்பிய ஆதித்தியன் துளசிச் செடிகளை நட்டு அதை நல்ல முறையில் பராமரித்துத் தினமும் துளசிமாலை கட்டி மகாவிஷ்ணுவுக்கு அணிவிப்பான். ஒருநாள் அவனுக்குத் தாகம் ஏற்பட்டது. அதனால் அவன் துளசிப் பாத்தியில் நின்ற நீரை எடுத்துக் குடித்தான். ஆனால் அவன் புண்ணியவானானவன். ஒருநாள் அவன் காட்டுக்குச் சென்றபோது அஸ்மந்தனை என்ற வேடனால் கொல்லப்பட்டான். அவன் இறந்ததை அறிந்த விஷ்ணுவின் தூதர்கள் விமானத்தில் வந்து அவனை விஷ்ணு லோகத்திற்கு ஏற்றிச் சென்றனர். அங்கு அவன் பலகாலம் இன்பமாக வாழ்ந்தான்.

**தி**ரேதாயுகத்தில் தண்டசுரன் என்பவன் மதுவை நன்றாகக் குடித்துவிட்டுக் காண்போருடன் பிரச்சினைப் படுவான். பிரச்சினை முற்றினால் தாக்குவான். அவன் ஆயுதங்களை எவ்வேளையிலும் வைத்திருப்பதால் அவனைக் காண்போர் விலகிச் சென்று விடுவார்கள். எவ்வேளையிலும் அவன் போதையுடன் காணப்படுவான். மதுகுடித்தால் அவனுக்கு காமம் தலைக்கேறும். அங்கு வாழ்ந்த நெறி பிறழ்வடைந்த பெண்களின் வீடுகளுக்கு மாறிமாறிப் போவான். இரவுவேளைகளில் தனவந்தர்களின் வீடுகளுக்குச் சென்று ஆயுதங்களைக் காட்டி மிரட்டித் திருடுவான். திருடிய பணத்தைத் தான் உறவாடும் பெண்களுக்குக் கொடுப்பான். அதனால் அவர்கள் மகிழ்வுடன் அவனது வரவை எதிர்பார்த்திருப்பர். காட்டுக்குச் சென்று மிருகங்களை வேட்டையாடி வந்து அவற்றின் மாமிசத்தைப் பதப்படுத்தி வைத்துப் பல நாட்களுக்கு உண்பான். மதுவைக் குடித்துவிட்டு மாமிசத்தை உண்பது அவனுக்குப் பெரு விருப்பமாகும்.

**அ**ந்தணர்களைக் கண்டால் கேலி செய்வான். மாமிசம், மது, பெண் இவை தேவைப்படபட்டால் சொல்லுங்கள் ஏற்பாடு செய்கிறேன் என்பான். வேதமோதும் இடங்களுக்கு மது போதையில் சென்று கலாட்டால் செய்வான். அதனால் இவனது பெற்றோரும், உற்றார் உறவினர்களும் இவனை வெறுத்து ஒதுக்கினர். நல்லது கெட்டதற்கு அவர்கள் இவனுக்குச் சொல்வதில்லை. அத்துடன் காடுகளுக்குச் சென்று அதனூடாக வேறு ஊர்களுக்குச் செல்வோரின் பணம் பொருட்களைக் கொள்ளையடிப்பான். ஒருநாள் அவன் எதிர்பாராத விதமாக ஒரு விஷ்ணுவின் கோவிலின் அருகால் செல்ல வேண்டி வந்தபோது பல பிராமணர்கள் வேதமோதிக் கொண்டிருந்தனர். இவனைக் கண்ட அவர்கள் இவனின் மீது இரக்கப்பட்டு விஷ்ணுவின் நாமங்களைச் சொல்லிக் கொடுத்து அதை திரும்பச் சொல்லுமாறு கேட்டனர். அவன் எதிர்புத் தெரிவிக்காமல் அவர்களைக் கேலி செய்யாமல் அவர்கள் சொல்லிக் கொடுத்ததைச் சொன்னான். பின் விஷ்ணுவின் விரதங்களை அனுஷ்டிப்பதால் உண்டாகும் நன்மைகளை எடுத்துக் கூறினர். அதன்படி அவன் விரதம் அனுஷ்டித்தான். சில

காலம் செல்ல அவன் இறந்து விட்டான். அப்போது அங்கே வந்த விஷ்ணுவின் தூதுவர்கள் அவனை அழைத்துச் சென்று சொர்க்கத்தில் சேர்த்தனர். அவன் பல காலம் அங்கு இன்பமாக வாழ்ந்தான்.

## 20. மதுகைடவர்



**ம**காவிஷ்ணு ஆதிசேடன் மீது யோகத்துயில் செய்யும் போது அவரது நாபியில் இருந்து பிரம்மன் தோன்றினான். பிரம்மன் உலகையும், உலகிற்கு வேண்டிய உயிரினங்களையும் படைக்க முற்பட்டார். அப்பொழுது சாதுக்களிலிருந்து ஒரு மதுகைடவர்கள் என்ற இரு கொடிய அசுரர்கள் தோன்றினர். அவர்கள் சகல உலகங்களிலும் வசிப்பவர்களையும் துன்புறுத்தினர். கொன்றனர். செய்யக் கூடிய கொடுமைகள் யாவற்றையும் மிக்க மகிழ்வுடன் செய்து கொண்டிருந்தனர். ஈற்றில் அவர்கள் பிரம்மனுடன் யுத்தம் செய்யச் சென்றனர். பிரம்மா அவர்களது கொடுமைகளைத் தாங்க முடியாது மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டார். மகாவிஷ்ணுக்கும் மதுகைடவர்களுக்குமிடையே நெடுங்காலம் கொடிய யுத்தம் நடைபெற்றது. மகாவிஷ்ணுவால் அவர்களை வெல்ல முடியவில்லை. அதனால் அவர் மாயாஜாலங்கள் பலவற்றைச் செய்தார். அந்த மாயாஜாலங்கள் மதுகைடவரை மயக்கின. அவர்கள் மயக்கத்திற்குட்பட்டு மகாவிஷ்ணு நெடுங்காலம் போர் செய்வதால் ஏதாவது வரத்தைக் கொடுத்து அனுப்புவோம் என்று நினைத்து, “உனக்கு ஏதாவது வரம் வேண்டுமானால் கேள்” என்றனர். அதற்கு மகாவிஷ்ணு, “நீங்கள் இருவரும் எனது கைகளால் மரணமடைய வேண்டும்” என்று கேட்டார்.

**உ**லகெங்கும் அவ்வேளையில் நீர் நிரம்பியிருந்ததால் மதுகைடவர்கள் உலகில் நீரில்லாத இடம் இருக்க மாட்டாது என்று எண்ணி மிக்க மகிழ்வடைந்து, “நீர் இல்லாத ஓர் இடத்தில் தான் நீ எம்மைக் கொல்ல வேண்டும்” என்று கேட்டனர். அதற்கு மகாவிஷ்ணு ஒப்புக் கொண்டார். உடனே மகாவிஷ்ணு வானை நோக்கிச் சென்று அவர்களைத் தூக்கித் தனது தொடை மீது இருத்திவிட்டுத் தனது சக்கரத்தால் அவர்கள் இருவரையும் கொன்றார்.

## 21. கங்கை நதியின் உற்பத்தி



**சூ**தமுனிவர் கங்கையின் உற்பத்தி பற்றி முனிவர்களுக்குக் கூறினார். கங்கை நதி விஷ்ணுவின் பாதத்தில் தோன்றியது. அதனால் கங்கை நதியை 'விஷ்ணுபதி' என்று அழைப்பர்.

**ச**கரச் சக்கரவர்த்தி பெரும் பலவான். அயல் நாடுகளையெல்லாம் வென்றவன். அவன் ஓர் அஸ்வமேத யாகம் செய்ய விரும்பி தனது குதிரையை அவிழ்ந்து விட்டான். அக் குதிரைக்குப் பாதுகாப்பாக அவனது ஆயிரம் புத்திரர்கள் சென்றனர். குதிரை ஒவ்வொரு நாடுகளையும் கடந்து வீறு நடைபோட்டது. சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புத்திரர்களும் வெற்றிக் களிப்புடன் குதிரையோடு வந்தனர். அதைக் கண்டு பொறாமைப்பட்ட இந்திரன் மாய வடிவில் சென்று யாகக் குதிரையைப் பிடித்து வந்து கபில முனிவரின் ஆச்சிரமத்தில் கட்டிவிட்டு மறைந்துவிட்டான். கபிலர் தவம் செய்து கொண்டிருந்ததால் தனது ஆச்சிரமத்தில் நடைபெற்றதைக் காணவில்லை.

**ச**கரச் சக்கரவர்த்தியின் புத்திரர்கள் யாகக் குதிரையைக் காணாமையால் கடுஞ்சினம் கொண்டனர். அவர்கள் குதிரையைத் தேடி அதைக் காணாமையால் பாதாளலோகத்திற்குச் சென்றனர். அங்கு கபிலரின் ஆச்சிரமத்தில் யாகக் குதிரை கட்டியிருப்பதைக் கண்டு கடுஞ்சினங்கொண்டு அவருடன் போரிட்டனர். அதனால் மிகுந்த கோபமடைந்த கபிலர் சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புதல்வர்களையும் தனது தவ வலிமையால் எரித்துச் சாம்பலாக்கி விட்டார்.

**அ**து நடந்து சில காலத்தின் பின் சகரச் சக்கரவர்த்தியின் வம்சத்தில் பிறந்த பகீரதன் என்ற அரசன் கடுந்தவம் செய்து ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டுவர முயற்சி செய்தான். அதற்காக அவன் பிரமதேவரை நோக்கித் தவம் செய்தான். பிரமதேவர் அவன் முன் தோன்றி ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வரவேண்டுமானால் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய் என்று கூறினார்.

**அ**தனால் பகீரதன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தான். பல காலம் கடுந்தவம் செய்தமையால் சிவபெருமான் பகீதரன் முன்தோன்றி, "பகீரதா எதற்காகத் தவம் செய்கிறாய். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

“**எ**ம்பெருமானே, எனது மூதாதையர்களான சகரச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் ஆயிரம் பேர் கபில முனிவரோடு முரண்பட்டமையால் அவர் அவர்களை எரித்துச் சாம்பலாக்கி விட்டார். அவர்களது ஆன்மா நிம்மதியின்றி அலைகிறது. அதனால் அவர்களுக்கு முத்தியளிக்க வேண்டும்” என்று கேட்டான்.

**அ**தற்குச் சிவபெருமான், “பகீரதா, அவர்களின் மீது கங்கையின் நீர் பட்டால் அவர்களுக்கு முத்திகிடைத்துவிடும். அதனால் கங்கையை நோக்கித் தவம் செய்” என்று கூறி மறைந்தார்.


**சி**வபெருமானின் சொற்படி பகீரதன் கங்கையை நோக்கித் தவம் செய்தான். அவனின் தவத்தின் மகிமையால் கங்காதேவி அவனின் முன்தோன்றி, “உனக்கு என்ன வரம் வேண்டும்” என்று கேட்டாள். அதற்குப் பகீதரன், “தாயே, எனது மூதாதையரான சகரச் சக்கரவர்த்தியின் ஆயிரம் புதல்வர்கள் அறியாத்தனமாகக் கபில முனிவருடன் முரண்பட்டதால் அவர் அவர்களை எரித்துச் சாம்பலாக்கிவிட்டார். அவர்களின் சாம்பலின் மீது புண்ணிய தீர்த்தமாகிய உனது நீர் பாய்ந்தால் அவர்கள் முத்தியடைவார்கள் என்று சிவபெருமான் கூறியதால் தான் நான் தங்களை நினைத்துத் தவம் செய்தேன். தாயான நீ பூமியில் பாய வேண்டும்” என்று சொன்னான் பகீரதன்.

“**ப**கீரதா, நான் ஆகாயத்தில் இருந்து பூமியை நோக்கிப் பாய்ந்தால் அதைப் பூமிதாங்கமாட்டாது. பூமியில் வாழ்வோர் அழிந்து போவார்கள். அதனால் பூமியில் விழுமுன் அதை ஒருவர் தாங்க வேண்டும். என்னைத் தாங்க வல்லவர் சிவபெருமான் மட்டுமே. அதனால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்” என்று கூறிவிட்டு மறைந்தாள் கங்காதேவி.

**ப**கீதரன் மீண்டும் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். அவனது தவத்தால் மிக்க மகிழ்வு கொண்ட சிவபெருமான் அவனின் முன் காட்சி கொடுத்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த பகீரதன் கங்காதேவி சொன்னவற்றைக் கூறினான். சிவபெருமான் அதற்குச் சம்மதித்தார்.

**சி**வபெருமான் சம்மதித்ததும் கங்காதேவி ஊழிக்கால வெள்ளப் பெருக்குப் போல ஆர்ப்பரித்தவாறு பூமியை நோக்கி வந்தாள். சிவபெருமான் அவளை அன்புடன் அணைத்துத் தாங்கிக் கொண்டார். வேகம் தனித்த கங்காதேவி பூமிக்கு வந்து பூமியினூடாகப் பாதாளத்திற்குச் சென்று கபில முனிவரால் எரித்துச் சாம்பலாக்கிய சகரச் சக்கரவர்த்தியின் புதல்வர்கள் எரிந்து சாம்பலாகக் கிடந்த இடத்தை அடையச் சாம்பல் புனிதமான கங்கை நீரில் கரைந்தது. அதனால் சாம்பலாக இருந்தவர்கள் மோட்சத்தை அடைந்தனர்.

## 22. காலகல்பனின் சரித்திரம்



**ம**துரை மா நகரில் சோம சேகரசர்மா என்றொரு பிராமணர் வசித்து வந்தார். அவரது மனைவி விசாலாட்சி. தனது கணவனைத் தெய்வமாக நினைப்பவள் சமய அனுட்டானங்கள் யாவற்றையும் முறைப்படி அனுஷ்டிப்பவள். விரதங்கள் எதையும் அவள் தவற விடுவதில்லை. சோமசேகரசர்மா பெரும் விஷ்ணு பக்தர். எந்நேரமும் விஷ்ணுவின் நினைவாகவே இருப்பார். இல்லறத்துக்குரிய ஒழுக்கங்கள் அனைத்தையும் விதிமுறைப்படி கடைப்பிடிப்பவர். வேதசாத்திரங்களைக் கசடறக் கற்றவர். நீதியானவர். தர்மவான். ஊர் மக்களின் நன்மைக்காக கிரியைகளைச் செய்பவர். அதனால் அவரை அவ்வூர் மக்கள் மதித்துப் போற்றினர்.

**அ**வரும் அவரது மனைவியும் ஒருநாள் தீர்த்த யாத்திரைக்குச் சென்றனர். அவர்கள் புனித தீர்த்தமான கங்கைக் கரையை அடைந்து கங்கையில் நீராடிய பின், கங்கை நீரைத் தனது கமண்டலத்தில் நிரப்பிக் கொண்டு அதனைத் துளசி தளத்தின் மேல் வைத்துவிட்டுக் கால்நடையாக இன்னொரு புனித நீர்க்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அவருக்கு எதிர்த் திசையாக அயல்நாட்டில் இருந்து ஒரு வர்த்தகன் மாட்டுவண்டியில் பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். அவனது இரட்டை மாட்டுவண்டியைக் காலகற்பன் என்ற கூலிக்காரன் ஓட்டி வந்தான். மாட்டுவண்டியில் பூட்டப்பட்ட ஒரு மாடு முதியமாடு. அது மெலிந்திருந்தது. அடுத்தமாடு பலமுடைய இளமையான மாடாகவும் இருந்தது.

**மு**தியமாடு பாரத்துடன் கூடிய வண்டியை இழுக்கக் கஷ்டப்பட்டது. தனது பலம் முழுவதையும் திரட்டி இருந்தாலும் வண்டில் வேகமாகச் செல்லவில்லை. அதனால் காலகல்பன் அந்த மாட்டிற்குப் பல தடவை கம்பால் அடித்தான். வலியைத் தாங்க முடியாத அந்த முதியமாடு திமிற மாட்டுவண்டி குடை சாய்ந்தது. மிகுந்த கஷ்டப்பட்டு எழுந்த முதியமாடு கோபங்கொண்டு தனது கூரிய கொம்புகளால் பலமுறை அவனைக் குத்திக் குத்தித் தாக்கியது. அதனது தாக்குதலால் பெரும் காயங்களுக்குட்பட்ட காலகல்பன் இறந்துவிட்டான்.

**அ**தைக் கண்ட சோமசேகரசர்மா காலகல்பனின் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டார். அவனது வாயில் விஷ்ணுவை நினைத்துக் கொண்டு கமண்டலத்தில் கொண்டு வந்த கங்கை நீரைவிட்டார். விஷ்ணுவைப் பிரார்த்தித்தபடி துளசி இலைகளை அவனின் மீது இட்டார்.

அதன்பின் அவர் தனது பிரயாணத்தைத் தொடர்ந்தார். காலகல்பன் துளசி இலை தனது உடலில் பட்டவுடன் இறந்துபோனான்.

**அ**வர் சென்று கொண்டிருந்தபோது சிலர் யாருடனோ சண்டையிட்டுக் காயங்களுடன் அங்கு வந்தனர். அவர்களைக் கண்ட சோமசேகரசர்மா அவர்களின் அருகிற் சென்று, "உங்களுக்கு என்ன நடந்தது. நடக்க முடியாமல் தாண்டித் தாண்டி வருவதைப் பார்க்கப் பாவமாக இருக்கிறது" என்றார்.

**அ**வர்களில் ஒருவன் சொன்னான், "அந்தணரே, தாங்கள் யமதர்மராஜாவின் தூதுவர்கள். காலகல்பன் என்றொரு பாவி முதிய காளைமாடு ஒன்றை இரக்கமில்லாது அடித்தபோது, அந்தக் காளைமாடு சீற்றம் கொண்டு காலகல்பனைத் தனது கொம்புகளால் குத்திக் கொன்றுவிட்டது. அந்தப் பாவியை யமலோகத்திற்கு அழைத்துச் செல்ல நாம் வந்தோம். எம்மைக் கண்ட விஷ்ணுவின் தூதுவர்கள் அவன் பாவியல்ல புண்ணியாத்துமா. உங்களுக்கு யார் பாவி என்று சொன்னது. அவனது மரண நேரத்தில் அவன் துளசித் தீர்த்தத்தையும், புனித கங்கையின் தீர்த்தத்தையும் பருகினான். அத்துடன் தனது உடலெங்கும் துளசி இலைகளை வைத்திருந்தான். நாராயண நாமஸ் மரணம் கேட்டான். அவனை நீங்கள் எவ்வாறு கவர முடியும் என்று எம்மைக் கடுமையாகத்தாக்கிவிட்டு அவனை விஷ்ணு லோகத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டனர். அவர்களின் தாக்குதலால்தான் நாம் நடக்க முடியாது சிரமம்படுகிறோம்" என்றான்.

**அ**து கேட்ட சோமசேகரசர்மா கங்கையின் மகிமையையும், துளசித் தீர்த்தத்தின் மகிமையையும், நாராயண நாமஸ் மரணம் ஆகியவற்றின் மகிமைகளையும் அறிந்து மிக்க மகிழ்வடைந்தார்.

## திருமாலின் உடற்கூறுப் புராணங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஸ்ரீ பிரம்ம புராணம் | - | தலை |
| 2. ஸ்ரீ பத்ம புராணம் | - | இதயம் |
| 3. ஸ்ரீ விஷ்ணு புராணம் | - | வலது கை |
| 4. ஸ்ரீ சிவ புராணம் | - | இடது கை |
| 5. ஸ்ரீ பகவத புராணம் | - | தொடைகள் |
| 6. ஸ்ரீ நாரத புராணம் | - | நாபி |
| 7. ஸ்ரீ மார்க்கண்டேய புராணம் | - | வலது பாதம் |
| 8. ஸ்ரீ அக்கினி புராணம் | - | இடது பாதம் |
| 9. ஸ்ரீ பவிஷ்ய புராணம் | - | வலது முழங்கால் |

10. ஸ்ரீ பிரம்ம வைர்த்த புராணம் - இடது முழங்கால்
11. ஸ்ரீ லிங்க புராணம் - வலது முழங்கால்
12. ஸ்ரீ வராக புராணம் - இடது முழங்கால்
13. ஸ்ரீ கந்த புராணம் - உடல் ரோமம்
14. ஸ்ரீ வாமண புராணம் - தோல்
15. ஸ்ரீ கூர்ம புராணம் - முதுகு
16. ஸ்ரீ மச்ச புராணம் - உடற் கொழுப்பு
17. ஸ்ரீ கருட புராணம் - எலும்பில் உள்ள ஊன்
18. பிரமாண்ட புராணம் - எலும்புகள்

**இ**வ்வாறு புராணங்கள் அனைத்தும் திருமாலின் உருவமாக உள்ளமையால் இப் புராணங்களைப் படிப்போர் மேன்மை அடைவர். அவர்கள் வாழ்க்கையில் சகல சம்பத்துக்களையும் பெற்று மகிழ்வுடன் வாழ்வர்.